கல்கி

"கள்ளச்சாராயத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது; உங்கப்பனாலும் முடியாது!"

– கிராமங்களில் கிடைத்த ஷாக்!


KALKI 11.5.97
ரூ. 4.00



வர்ணாவின் வண்ணக்கனவுகள்!

டெபாசிட்டுகளை
வரவேற்கிறோம்

மகத்தான காவியங்கள்
அவருக்கு பொக்கிஷம் போல...



... எக்ஸ்பிரஸ் ஃபைனான்ஷியல் எக்ஸ்சேஞ்சும்தான்.

பழைய பேழைகள்: சாகா வரம்பெற்ற காவியங்கள்; காலங்காலமாக மனித உறவுப் பிணைப்பு தந்த பந்தங்கள். உங்கள் பணம் உங்களுக்குக் கவலை தரும் வகையில் இருக்கக் கூடாது. அது பாதுகாப்பைத் தந்து நல்ல முறையில் வளர்ந்து பெருக வேண்டும். அதற்கு நிபுணர்களின் உதவியை நாடுவதே நல்லது.

இது தவணைக் கொள்முதல் நிதி நிறுவனமாக (Hire Purchase Finance Company) ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் ஒப்புதலைப்பெற்ற வங்கி அல்லாத நிதி நிறுவனம் (Non banking Finance Company) ஆகும் (984/BG (TN) HP (E) 15 ● நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவாகிய 8%-க்கு எதிராக 48.46% மூலதன நிறைவு விகிதத்தைக் (Capital Adequacy Ratio) கொண்டு RBI குறிப்பிட்டுள்ள விவேகமான கணக்கு வைப்பு முறைகளைப் பின்பற்றுவது ● தொடக்க காலம் முதலே லாபம் மற்றும் டிவிடெண்டுகளைப் பொறுத்தவரை நிலையாக ஒரே சீரான சாதனை.

உங்கள் பணத்தைச் சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டும். அதற்கு எக்ஸ்பிரஸ் ஃபைனான்ஷியல் எக்ஸ்சேஞ்ச் நிறுவனத்துடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

EXPRESS
FINANCIAL EXCHANGE LTD.

- Authorised Dealer American Express Bank TRS
- Authorised Dealer Mashreq Bank Visa International
- A Bank of America Associate
- FFMC Licensee of Reserve Bank of India
- SEBI Registered Merchant Banker

எக்ஸ்பிரஸ் பைனான்சியல் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட்.
பதிவு அலுவலகம்: 9, அட்வேவ் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017. போன்: 4340325, 4340329, ஃபாக்ஸ்: 4341403,

● டெல்லி ● மும்பை ● பெங்களூர் ● பாண்டிச்சேரி ● இந்தூர் ● ஹைதராபாத் ● விசாகப்பட்டினம் ● விஜயவாடா ● திருச்சி ● கும்பகோணம் ● கோயம்புத்தூர்

Halos Mathison

சமீபத்திய ஸ்ரீலங்கா - பாகிஸ்தான் மேட்சில் 'அவுட்' என அறிவிக்கப்பட்டு மைதானத்திலிருந்து சென்ற பேட்ஸ்மேன், மீண்டும் (அவுட் அல்ல என்று மூன்றாவது அம்பயர் கூறியதால்) களம் புகுந்தார். அவ ருக்கு பதிலாக ஆட வந்தவர் திருப்பி அனுப்பப்பட்டார்!

—செய்தி.



மாறுபட்ட முதலீடுகள்!

'திரட்டிய டெபாசிட்டை எப்படியெல்லாம் முதலீடு செய்தால் ஏகப்பட்ட லாபம் சம்பாதிக்கலாம்?' என்று மூளையைக் கசக்கிக் கொள்ள வேண்டிய ஃபைனான்ஸியர். ஒரு பக்கம் உபாஸனா ஃபைனான்ஸின் எம்.டி. இன்னொரு பக்கம், சுந்தரம் ஃபாஸனர்ஸ் எம்.டி சுரேஷ் கிருஷ்ணாவின் மனைவி... நிறையவே பொறுப்புகள்; சவால்கள். ஆனால், சேலம் அருகேவுள்ள மங்களபுரம் கிராமத்தின் மண்பாண்டக் கலைஞர்கள் பற்றி ரொம்ப கவலையோடு பேசுகிறார் உஷா கிருஷ்ணா.

இருபது ஆண்டுகளுக்கு முன் கிராஃப்ட்ஸ் கவுன்ஸில் ஆஃப் இந்தியா நடத்திய கலம்காரி (இயற்கை சாயம் தோய்த்து துணிகளை அழகுபடுத்தும் கலை) பயிலரங்கில் கலந்து கொண்டார் உஷா. அப்போது முளைவிட்டதுதான் கைவினைக் கலைகள் மீதான ஆர்வம். இன்று எத்தனையோ பணிகளுக்கு இடையில் அதற்கு நேரம் ஒதுக்கி உழைக்கிறார்.

"இதுல கிடைக்கற மகிழ்ச்சி நல்ல டானிக்... மற்ற அலுவலகப் பணிகளைத் தொடர்ந்து ஆர்வமா கவனிக்க உதவுகிறது" என்கிறார் உஷா.

மங்களபுரத்து கைவினைஞர்களுக்கு பெங்களூரில் உள்ள ஒரு டிசைனிங் சென்டரில் பயிற்சியளித்தது, பம்பாய் கைவினைக் கண்காட்சி ஒன்றில் இந்தக் கிராமத்து கல்சட்டி கலையழகை மிளிரச் செய்தது போன்ற பல்வேறு திட்டங்களை கிராஃப்ட்ஸ் கவுன்ஸில் ஆஃப் இந்தியா மூலம் செயல்படுத்தி வருகிறார் உஷா கிருஷ்ணா.

"நமது பாரம்பரியமான கலைவடிவங்களை விதவிதமாக உருவாக்கும் கிராமப்பகுதி கைவினைஞர்களை ஊக்கப்படுத்த யாரும் இல்லாததால், இந்த அபார கலைத்திறன் மங்கி வருகிறது. Soft Stone கொண்டு செய்யப்படும் மண்பாண்டங்கள் சமைத்த உணவு வகைகளை வைத்துக் கொள்ள வசதியாக இருக்கிறது. எல்லோரும் இப்படிப் பயன்படுத்த ஆரம்பித்தால் நல்ல மார்க்கெட் கிடைக்கும்.

"இந்த முயற்சி ஒரு பெரும் சவால்... கொஞ்சம், கொஞ்சமாகத்தான் மாற்றம் காண முடிகிறது. 10 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது கைவினைப் பொருட்களுக்கு வரவேற்பு இருக்கிறது. இருந்தாலும் அதிகமாக ஆதரவு இல்லை. அழகூட்டவும், அலங்காரத்திற்காகவும் மட்டுமல்லாமல் அன்றாடம் பயன்படுத்துவதற்கும் கைவினைப் பொருட்களை வாங்க வேண்டும். கைவினைப் பொருட்களிலும் அது உசத்தியானது, இது சாதாரணமானது என்று வேறுபாடு பார்க்கிறார்கள். மண்ணிலே பண்ணுற வேலை என்றால் மதிப்ப இல்லை..." வருத்தப்படுகிறார் உஷா கிருஷ்ணா.

இந்த விஷயத்தில் தாமே முன்னோடியாக இருக்க வேண்டும் என, உஷா கிருஷ்ணா வீட்டில் மங்களபுரம் மண்பாண்டங்களைப் பயன்படுத்துகிறார். உபாஸனா ஃபைனான்ஸ் தலைமை அலுவலகத்தில் பத்தமடைப் பாய்களையும், மூங்கில்களையும் உள் அலங்காரத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்.

"25 லட்சம் ரூபாய் உள் அலங்கார பட்ஜெட்டை ஒரு லட்சத்திற்குள் முடித்துவிட்டேன். தொழில் நிறுவனங்கள்




• உஷா கிருஷ்ணா

இந்தப் பாணியைப் பின்பற்றினால் சிக்கனத் திற்கு சிக்கனம். ஆண்டு தோறும் இதை மாற்றி யமைத்தால் புதுமைக்குப் புதுமை!"

கல்சட்டி தயாரிக்கும் குடும்பத்தைச் சார்ந்த ஒரு தாய், தன் மகனுக்கு ஒரு தொழிற்சாலை

தெடுத்து, தத்தம் குடும்பத்தாருடன் அவர்களை அருகேவுள்ள நகரங்களுக்கு அழைத்து வந்து விழா எடுத்து விருது வழங்குகிறார்.

"ஒரு கலைஞர் பாராட்டுப் பெறுவதை அவர் குடும்பமும் நண்பர்களும் பார்த்து பெரு



• கைவினைக் கலைஞருக்குப் பாராட்டு

யில் வேலை வாங்கித் தரும்படி உஷா கிருஷ்ணாவிடம் கேட்டிருக்கிறார்.

"இந்த நுட்பமான வேலைப்பாட்டை அடுத்த தலைமுறை கைவிட்டு விடக்கூடாது என்பதற்காக நாங்கள் நிறைய பாடுபடுகிறோம். நீங்களோ உங்கள் மகனை ஃபாக்டரி வேலைக்கு அனுப்ப விரும்புகிறீர்களே...? என்றேன். 'யாரும்மா இந்த வேலையை மதிக்கிறாங்க... பாக்டரி வேலைன்னா ஒரு மரியாதை கெடைக்கும்...' என்று அந்த அம்மா நொந்து போய்ப் பேசினார். இது என்னை மிகவும் யோசிக்க வைத்தது. கிராமிய கைவினைக் கலைஞர்களைப் பெருமைப்படுத்தும் திட்டத்தை உருவாக்க வைத்தது."

தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் 12 மையங்களில் 'உபாஸனா கிராஃப்ட்ஸ்மேன் அவார்டு' என்ற விருதுகளை மூன்று வருடங்களாக வழங்கி வருகிறார் உஷா கிருஷ்ணா.

கிராமங்களில் உள்ள அனுபவமும், கலையாற்றலும் நிறைந்த கைவினைஞர்களைத் தேர்ந்

மைப்பட வேண்டும்... என்பது என் ஆசை. சென்னையிலிருந்து இளம் இசைக் கலைஞர்களை அழைத்துச் சென்று, விருது வழங்கும் விழாவில் இசைக் கச்சேரிகளையும் நடத்துகிறோம்.

கைவினைக் கலைஞர்களின் வருமானம் பெருக வேண்டாமா...? இதற்கும் திட்டமிருக்கிறது இவரிடம். விருது வழங்கும் விழாவுக்கு சீஃப் கெஸ்ட்டாக பிசினஸ் புள்ளிகளை வரவழைக்கிறார். அவர்களையும் இந்தக் கலைஞர்களின் அருமை பெருமைகளை உணர வைக்கிறார். அந்த இடத்திலேயே அவர்களிடமிருந்து கிஃப்ட் அயிட்டங்களுக்கு ஆர்டர் கிடைக்கிறது!

விருது வழங்கும் விழாவில் ஏராளமான பொது மக்களைக் கலந்து கொள்ள வைக்க முடியவில்லையே என்பதுதான் உஷாவின் தற்போதைய கவலை.

"அதற்கும் ஒரு வழி செய்வோம்...!" என்கிறார் நம்பிக்கையுடன்.

— மு. சிவலிங்கம்

(ஆதித் கம்யூனிகேஷன்ஸ் உதவியுடன்)



''ஆச்சரியமா இருக்கே. 'காசில்லாமல் சாப்பிடுபவர்களே வருக... வருக'ன்னு இந்த ஹோட்டல்ல எழுதி போட்டிருக்காங் களே!''

''அடிக்கடி பவர்கட் ஆயிடறதால மாவாட்ட ஆள் தேவைப்படுதாம்!''

— எஸ். முகம்மது யூசுப்

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

''யோவ்! போன வாரம்தானே பாட்டி செத்தான்னு லீவு எடுத்த; இந்த வாரமும் பாட்டி செத்தான்னு சொல்ற?''

''என்ன பண்றது? எங்க பாட்டி செத்து செத்து பிழைக்கறாளே!''

— நெல்லைராஜ்



❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

''என் பையனுக்கு என் மேல ரொம்பவும் பாசம்....''

''எப்படி?''

''ஒரே மருமக கூட சண்டை போட போரடிச்சா சொல்லும்மா, உனக்காக நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கறேங்றான்...!''

— செங்குன்றம் ரமேஷ்ராமன்



கேயார், இயக்கத்தில் சமீபத்தில் வெளியாகி உள்ள படத்தின் டைட்டில் மட்டும் அல்ல; அதில் நடித்துள்ள வர்ணாவும் திரையுலகிற்குப் புதுசுதான்.

கல்லூரி வாசல், மார்க்கெட், பஸ் ஸ்டாண்ட் இப்படி எந்த இடத்திலிருந்தும் வர்ணாவை ஸ்பாட் செய்து சினிமாவுக்கு அறிமுகம் செய்துவிடவில்லை இயக்குனர். காரணம் வர்ணா சிறுவயதிலிருந்தே சினிமாவையே மூச்சும் பேச்சுமாகக் கொண்டவர்!

"செயின்ட் ஜான்ஸ் ஸ்கூலிலே படிச்சப்போ ஒவ்வொரு வருஷமும் அந்த வகுப்பு டீச்சர் எங்களைப் பார்த்து "வருங்காலத்தில் என்ன ஆக விருப்பம்?" என்று கேட்பார். 'டாக்டர்', 'டீச்சர்' என்றெல்லாம் விடைகள் வரும். நான் மட்டும் 'நடிகையாக ஆசை' என்பேன் பளிச்சென்று. அத்தனை பேரும் என்னை ஆச்சரியமாகப் பார்ப்பார்கள், எப்படியும் நான் நடிகை என்று சிவப்பு எழுத்துக்களால் பொறிக்கப்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை, என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது."

ஆக லட்சியக் கனவுகளோடு தன் பயணத்தைத் துவக்கியிருக்கிறார். கூடவே நீலக் கடலின் பின்னணியில் பெசன்ட் நகரில் ஸ்கேடிங், நீச்சல், பரதம், சினிமா நடனத்தின் ஸ்டேடஸ் சிம்பலான கலா மாஸ்டரிடம் திரை நடனங்களுக்கான பயிற்சி; சொல்ல மறந்துவிட்டோமே... ராஜலட்சுமி என்ற தம் திருநாமத்தை சினிமாவுக்காக 'வர்ணா' என்று மாற்றிக் கொண்டார்.

"ஒரே பெண் என்பதால் சின்ன வயசிலிருந்தே நான் விரும்புவதையெல்லாம் அம்மா நிறைவேற்றுவார். (அப்பாவுக்கு துபாயில் வேலை). சினிமாவில் நடிக்கவும் எனக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்."

நடிகர் சங்கத்தின் ஆண்டு விழாவில் "ராஜா" என்ற இந்திப் படத்தில் வரும் ஒரு பாடலுக்கு இவர் மேடையில் ஆட, கேயார் இம்ப்ரஸ் ஆகிவிட்டார். தம் அடுத்த படத்தில் அவரைப் பயன்படுத்திக்கொள்வதாக வாக்களித்து, அதைக் காப்பாற்றினார். "தாலி புதுசு" படத்தில் குஷ்புவின் தோழியாக நவீன சிந்தனைகள் கொண்ட, வெள்ளை உள்ளத்துடன் மனத்தில் தோன்றியதை பட்பட்டென்று பேசும் பாத்திரம். ("நிஜமாவும் நான் அப்படித்தாங்க.")

கோடம்பாக்கத்தில் உள்ள தென்னிந்திய திரைப்பட இன்ஸ்டிடியூட்டில் பயின்ற போது நடைபெற்ற, பசுமை நினைவொன்றை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"ஒரு காட்சியை விளக்கி, நடிக்கச் சொல் வாங்க. அப்பாவை சில குண்டர்கள் கொலை செய்து விடுவார்கள். இந்தச் செய்தி தெரியாமல் ஊரிலிருந்து வரும் அண்ணனிடம் ஊமையான நான் கதறு வது போன்ற காட்சி. அந்தக் கதறலுக்கிடையில் அப்பாவைக் கொன்ற



வர்களின் அடையாளங்களையும் நான் குறிப்பிட வேண்டும்! இந்தக் காட்சியை வர்ணா நடித்து முடித்ததும் பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேரும் பாராட்டினார்கள் (என்றார்).

மிகவும் பிடித்த மலர் ரோஜா. நடிகைகள் பத்மினி, சாவித்திரி, ஊர்வசி. வெளிப்படையாகப் பேசுபவர்களைப் பிடிக்கும். "என் நடிப்பை பாராட்டறவங்களைவிட விமர்சிப்பவர்களைத்தான் எனக்கு அதிகம் பிடிக்கும்."

கருப்பு தினங்களாக இவர் கருதுவது ராஜீவ் காந்தி, திவ்யபாரதி ஆகியோர் இறந்த நாட்களை. அவர்களின் மறைவைவிட அவர்கள் இறந்த விதம் ரொம்பவும் மனத்தை பாதிக்கவே, அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டு வெகு நேரம் தனிமையில் சோகத்தில் இருந்தாராம்.

மஞ்சள் இவருக்கு அதிர்ஷ்டமான நிறமாம். தம் அதிர்ஷ்ட நாட்களாகக் கருதுவது முதல் படத்தின் முதல் பத்து நாள் படப்பிடிப்பு தினங்களை!

"ஏதோ பிக்னிக் போன மாதிரி இருந்தது" எனும் இவர் கேயாரின் அடுத்த படத்தில் முக்கியப் பாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். சினிமாவில் சொந்தக் குரலில்தான் பேசுவேன் என்று இவர் கூறுவதும், இவரது குரல் கேட்கும்படி இருப்பதும் ஆறுதலான விஷயங்கள்.

"பம்பாய் இறக்குமதிகளாகவே இங்கே கதாநாயகிகள் இருக்காங்க. இது தேவைப்படாத போக்குன்றதை பச்சைத் தமிழச்சியான - சொந்த ஊர் மதுரை சார் - நான் நிரூபிக்கப் போறேன்" என்றார் சேலன்ஜாக. சவாலே சமாளி!

— ஜி.எஸ்.எஸ்.

அட்டை வண்ணப்படம், படம் : **பிரவீண்குமார்**

ஜெயலலிதா மீண்டும் சினிமாவில் நடித்தால்...?

● அவ்வை கே. சஞ்சீவி பாரதி, கலிங்கியம்.

? 'தமிழர் பிரதமராவதைத் தடுத்தவர்களை தமிழக வரலாறு மன்னிக்காது' என்கிறாரே கி. வீரமணி?

! தமிழர் பிரதமராக வேண்டும் என்பது வெறும் உணர்வுக் குரல். பகுத்தறிவுக்கு ஒத்து வராத விஷயம். தகுதியுள்ளவர் பிரதமராக வேண்டும் என்பதே சரி. 'கூட்டுக் கருத்து' என்பது தகுதியை நிர்ணயிக்காது. மனச்சாட்சிக்கு விரோதமாக விட்டுக் கொடுக்கவும் நேரும். தகுதியானவரைத் தேர்வு செய்ய ரகசிய வாக்கெடுப்பே சிறந்தது.

● பி.ஏ. வதூத், மேட்டுப் பாளையம் ❑

? செய்தது அனைத்துமே தவறு என கலைஞரைக் குற்றம் சாட்டும் வை.கோ, தாம் 'ஜெ'வுடன் கூட்டுச் சேர நேர்கையில், கருணாநிதி - இந்திராவுடன் கூட்டுச் சேர்ந்ததைக் குறிப்பிட்டு நியாயப்படுத்துவது சரியா?

! தவறான முன்னுதாரணங்களைக் காட்டி ஒரு தவறை நியாயப்படுத்த முடியாது என்பது கோபால்சாமிக்கு மட்டுமல்ல, எல்லா அரசியல்வாதிகளுக்குமே தெரியும். ஆனால், மக்களுக்கு அது தெரியாது; ஏமாற்றிவிடலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

● ஜான் சாமுவேல், மும்பய் - 19

? எஸ்.எஸ்.எல்.சி. முடித்து விட்ட மகனை கம்ப்யூட்டரில் விடுவது நல்லதா? அல்லது டர்னர் தொழிலில் சேர்ப்பது நல்லதா?

! 'டர்னர்' என்று நீங்களே நிர்ணயிப்பதைவிட மகனுக்கு எந்தத் துறையில் ஆர்வம் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு, எந்தத் துறையானாலும் இப்போது கம்ப்யூட்டர் பயிற்சி கூடுதல் தகுதி என்பதை உணர்த்துங்கள்.

● கே. ராஜா திருவேங்கடம், காப்பரத்தாம் பட்டி.

? அடுத்த ஜன்மத்தில் உங்களுக்கு யாரைப் போலப் பிறக்க ஆசை....?

! திருப்பதிக்கே லட்டுவா?...

● என். சங்கரதாஸ், ஸ்ரீ வில்லிபுத்தூர்.

? வெளியிலிருந்து ஆதரவு என்றால் என்ன சார் அர்த்தம்?

! பாதையோர சீட்டில் உட்கார்ந்து சினிமா பார்க்கிற மாதிரி... எப்போது போரடிக்கிறதோ, யாரையும் தாண்டிப் போக அவசியமின்றி கலபமாக எழுந்து சென்றுவிடலாம்!

● எம். கதீஜா ஹனீஃபா, திருச்சி.

?, 'தரமான முறையில் மாணவ மாணவிகளுக்குப் பாலியல் கல்வி தருவது பற்றி ஆலோசித்து வருகிறோம்' என அன்பழகன் கூறுகிறாரே? பாலியல் கல்வி தரும் நாடுகளில், இங்குள்ளதைக் காட்டிலும் அதிகமாகப் பாலியல் குற்றங்கள் நடைபெறுவது அவருக்குத் தெரியாதா...?

! இன்றைய சூழலில் பாலியல் கல்வி என்பது அவசியம் மட்டும் அல்ல, அரசின் கடமையாகவும் ஆகிவிட்டது. ஆனால், அதனால் மட்டுமே குற்றங்கள் குறைந்து ஒழுக்கம் பெருகாது. அடிப்படை மதிப்பீடுகள் சரியானவையாக இருக்க வேண்டும். இதற்கு, பள்ளிப் படிப்பின்போதே மாணவர் உள்ளங்களில் பலமான அஸ்திவாரம் போடுவது அவசியம்.

● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

? மதுரையில் மார்க்சிஸ்ட் பெண் கவுன்சிலர் லீலாவதி வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து?

! எல்லா கட்சிகளிலும் தொண்டர்கள் என்கிற பெயரில் குண்டர்கள்தான் இருக்கிறார்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது இச்சம்பவம். குற்றம் சாட்டப்பட்டுள்ள தி.மு.க. குண்டர்கள் கைதான பிறகும் தொடர்கிற எதிர்க்கட்சியினரின் வன்முறை, 'இங்கேயும் குண்டர்களே!' என்று அறிவிக்கிறது. கைதாகியிருப்பவர்கள் கடுமை





• தெரிந்ததும் தெரியாததும்!





• உணர்வுக் குரல்!



• தெரியாதா...?



யான தண்டனை பெற வேண்டும். நல்லது செய்ய நினைப்பவர்களை கொலை செய்வது கொடுமையிலும் கொடுமை. முதல்வரோ முக்கிய அமைச்சர் ஒருவரோ மதுரை சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை யிடாமல் போனது தவறுதான்.

● வாசுதேவன், மும்பை - 86

? நக்மா, ரம்பா, குஷ்பு - இவர்களுடைய பிளஸ் பாயின்ட்கள் எவை....?

! மும்பையிலிருந்து, வேலை மெனக்கெட்டு ஒருத்தரை இப்படிக் கேள்வி கேட்க வைத்திருக்கிறார்களே, போதாதா?!

● பெ. பொன்ராஜ பாண்டி, மதுரை - 10

? மூப்பனாரை பிரதமராக விடாமல் தடுத்தது விதியா? சதியா?

! எம்.பி.க்களிடையே ரகசிய வாக்கெடுப்பு என்ற ஜனநாயக மரபைப் புறக்கணித்தது விதி; கூட்டுக் கருத்து என்ற மாய் மாலத்தை உருவாக்கியது சதி; அப்புறம் மூப்பனாரை ஒதுக்கியது சில பேரின் மதி.

● இ.மா. தமிழழகன், திருச்சி - 8

? எத்தனை இசையமைப்பாளர்கள் வந்தும் இன்னும் இளையராஜாவை 'பீட்' பண்ண முடியவில்லையே....?

! எத்தனை குளிர்பானங்கள் வந்தும் இளநீரை 'பீட்' பண்ண முடியாதுதான்!

● அஜார், தேனாம்பேட்டை

? அ.தி.மு.க. - ம.தி.மு.க. ரகசிய உடன்பாடு உண்டு என்பது இப்போது வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டதே...?

! அவ்வாறு ஒன்று இல்லாவிட்டாலும் இருந்ததாக நம்ப வைக்கின்றன இப்போதைய நிகழ்ச்சிகள்.

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர் - 7

? தேவேகௌடாவை நீக்கிவிட்டு குஜ்ராலை பதவிக்கு வந்தது, ராமரை விரட்டிவிட்டு லட்சுமணன் பதவிக்கு வந்தது போலாகும் என்கிறாரே சுஷ்மா சுவராஜ்...?

! ராமாயண காலத்தில் ஜனநாயகம் கிடையாது. மைனாரிடி அரசு; வெளியே யிருந்து ஆதரவு; ஆதரவு நீக்கம் என்பதெல்லாம் இல்லை... இதிகாச புராணங்களை மேற்கோள் காட்டிப் பேசினால் பொருத்தமாகச் சொல்ல வேண்டும்!

● கே. திருக்குமரன், கடையம்

? ஜெ. மீண்டும் சினிமாவில் நடித்தால் எப்படி இருக்கும்....?

! சினிமாவில் நடிக்காவிட்டால் என்ன. விஜய் டீ.வியில் கனஜோராக நடித்தாரே!

● ஆர்.பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்

? மூப்பனாரை பிரதமராக்காததால் ஒரு த.மா.கா தொண்டர் தீக்குளித்தது பற்றி....?

! இது போன்ற காட்டுமிராண்டித்தனத்தை மூப்பனாராவது வன்மையாகக் கண்டிப்பார் என்று எதிர்பார்த்தோம். 'உணர்ச்சி வேகம் தேவைதான்' என்று தேவையற்ற வார்த்தைகளை உதிர்த்து, சொதப்பி விட்டார்!

● பி. நடராஜன், அன்னூர்

? இந்திய கிரிக்கெட் அணி சுதந்தர கோப்பையிலாவது சாதிக்குமா....?

! Why not...? வெஸ்ட் இண்டீஸ் அணியை எதிர்த்து ஆடி. (போர்ட் ஆஃப் ஸ்பெயின்) இவ்வளவு சிறப்பான பத்து விக்கெட் வெற்றி காண முடியும் என்னும் போது பாகிஸ்தானை ஜெயிக்க ஏன் முடியாது? இப்படி பதில் சொல்லலாம் என்று பார்த்தால் அடுத்த மேட்சில் அநியாயத் தோல்வி! 'ஸ்திரத்தன்மை' கிரிக்கெட்டிலும் இல்லை!

● சூர்யநிலா, சேலம் - 2

? ஆட்சி மாறியும் கொலை, கொள்ளை தொடர்வதாகக் குற்றம் சாட்டுகிறாரே த.மா.கா. எம்.எல்.ஏ. செல்லகுமார்...?

! 'இனி ஓங்கித்தான் ஒலிக்கும் எங்கள் குரல்' என த.மா.கா வினரே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வசதியாக ஆங்காங்கே சம்பவங்களும் நடக்கின்றன. உதாரணமாக சுமார் பதினொரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச வேட்டி சேலைகளைச் சிப்பந்திகள் விற்றிருக்கிறார்கள். ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள சத்துணவு தயாரிப்புக்கான பொருள்கள் 'காணாமல்' போயிருக்கின்றன! சம்பந்தப்பட்ட சிப்பந்திகள் பேரில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதுதான் ஆறுதல்.

□ ரூ. 50 பரிசு பெறுபவர்:
மு.க. வஜித்,
16, தாவூத் ரவுத்தர் தெரு,
மேட்டுப்பாளையம் - 641 301.



• இளநீர்!



• அரசியல் போலவே...



• தப்பு மேற்கோள்!



• விதியா? சதியா?

நீங்கள் கேட்டவை — தராசு

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் வாசக வள்ளல் ஜோக் போட்டி – 2 முடிவு

"கல்யாணத்துக்கு முன்னாடி நாம காதலிக்கும்போது என்னோட சுக துக்கத்துல பங்கு போட்டுக்குவேன்னு சொன்னீங்க தானே?"

"சரி அதுக்காக உங்க அம்மாகிட்ட பாதி சண்டை நான் போட்டுட்டேன், மீதி சண்டை நீங்கதான் போட்டாகணும்னு அடம்பிடிச்சா எப்படி கமலா."

– ராஜநிலா

"லவ் மேரேஜை எதிர்த்து அந்த ஆள் எதுக்காக சங்கம் ஆரம்பிச்சிருக்காரு?"

"அவர் ஒரு கல்யாணத் தரகராம்! லவ் மேரேஜால தொழில் ரொம்ப பாதிக்கப்படுதாம்..."

– ஜெ. முருகன்

"அன்பே...! நம்ம காதல் அடுத்த ஜென்மத்திலயாவது நிறைவேறி, ஒண்ணு சேருவோம். இப்ப பிரிஞ்சிடறதே நல்லது."

"ஏன்...? என்னாச்சு..?"

"என்னுடைய போன ஜென்மத்து காதல் நிறைவேறி... நேத்துதான் நிச்சயதார்த்தம் முடிஞ்சது."

– ஆர். ஜெயச்சந்திரன்

"சுரேஷ்! கல்யாணத்துக்கு அப்புறமும் நீங்க என்கிட்டே காட்டற இதே அன்பு தொடருமா?"

"கவலையே படாதே சுமதி! அதுக்கு சம்மதிக்கறவளைத்தான் நான் கல்யாணம் செஞ்சுப்பேன்!"

– மேல்மங்கலம் பத்ரா

"கல்யாண ஜோடிங்க எதுக்கு மேடையில முதுகைக் காட்டி உட்கார்ந்திருக்காங்க?"

"இரண்டு பேரும் காதலிக்கும்போது பார்க்குல உட்கார்ந்த பழக்கதோஷம்! யாரும் பார்த்துடக் கூடாதாம்!"

– எஸ். ரவீந்திரநாத்

"என் மகளை நீங்களும், என் மகள் உங்களையும் 'லவ்' பண்றதா தெரியுதே! ரெண்டு பேரும் நடங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு. அங்கேயே உங்க ரெண்டு பேருக்கும் சிக்கனமா கல்யாணத்த முடிச்சிடலாம்."

– க. முத்துக்கிருஷ்ணன்

"எங்க வீட்ல, எனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க. நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"எனக்கு அந்தக் கவலையே இல்லை. 'அத்த மக' ரெடியா இருக்கா!"

– சு.மனோபால்

"ஏண்டி இப்படி லவ் மேரேஜ் பண்ணிட்டு வந்து நிற்கிறேயே! உனக்குப் பின்னாடி உன்ன தங்கச்சி கதி என்னாகும்னு யோசிச்சியா?"

"கவலைப்படாதம்மா! அவளும் லவ் மேரேஜ் பண்ணிட்டு கதவுக்கு வெளியே நின்னுகிட்டிருக்கா!"

– செங்குன்றம் பாலசுப்ரமணியன்

"அடிப்பாவி! என்னடி சொல்றே? உங்கப்பா வீரப்பன்கிட்டே வேலை செய்யறாரா?"

"கவலைப்படாதீங்க! உங்களை 'காட்டோட மாப்பிள்ளை' ஆக்கிக்கறதா சொல்லிட்டார்!"

– தே. ராஜாசிங் ஜெயக்குமார்

"ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை என்பதை நாங்கள் நடைமுறையில் செயலாற்றி வருகிறோம்."

"எப்படி?"

"காதலிக்கும்போது, நான் எது சொன்னாலும் அவள் எதிர்ப்பு சொல்லாமல் கேட்பாள்... கல்யாணத்துக்குப் பின் அவள் எது சொன்னாலும், நான் தலையாட்டி சம்மதிக்கிறேனே...!"

– ப. உத்தண்டராமன்.

"அரசியல் தலைவர் மகளை லவ் பண்ணி கட்டிக்கிட்டது தப்பாப் போச்சுடா!"

"ஏன்?"

"திடீர்னு அன்பான ஆதரவை வாபஸ் வாங்கி வாழ்க்கையைக் கவிழ்ப்பேன்'னு மிரட்டுறா."

– த. மணிகண்டன்

"நமக்குதான் கல்யாணமாகிப்போச்சே. எதுக்கு பீச்சுக்குக் கூப்பிடுறீங்க?"

"பீச்ல நம்ம பக்கத்து ஜோடிகளுக்கு திருமணம் ஆச்சா. இல்ல பழைய மாதிரி ஜாலியா இருக்காங்களான்னு தெரியணும்!"

– அம்பை தேவா

பிரசுரமாகும் ஒவ்வொரு ஜோக்கும் ரூ.100 பரிசு பெறுகின்றன..


காதலிக்க நேரமுண்டு!

மதுரையில் கொலையுண்ட மாநகராட்சி கவுன்சிலர் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) லீலாவதியின் மூன்று பெண்களும் தாயின் மறைவால் கலங்கி நிற்கவில்லை; மாறாக முன்னிலும் வேகமாகத் தங்களின் தாய் விட்டு விட்டுச் சென்ற பணிகளைத் தொடரப் போவதாகக் கூறுகிறார்கள்...

லீலாவதியின் மூத்த மகள் கலாவதியிடம் (19) பேசியபோது : "சின்னப் பெண்தானே என்றில்லாமல் பல விஷயங்கள் என்கிட்ட கலந்து பேசுவாங்க. சிறு வயதிலிருந்தே அம்மா கலந்து கொள்கிற போராட்டங்கள், ஊர்வலங் கள், கருத்தரங்குகள் எல்லாவற்றிற்கும் என் னையும் தங்கைகளையும் அழைத்துச் செல் வார்கள். பல பேர் எங்கம்மாகிட்ட 'நீ என்ன மூணையும் பொட்ட புள்ளைகளா பெத்துக் கிட்டியே!' என்பார்கள். 'எங்கம்மா மகாகவி பாரதியின் மேல் தீவிர பற்றுள்ளவங்க. அத னால 'அதுக மூன்றையும் புதுமைப் பெண் ணாகத்தான் உருவாக்குறேன். ஆண்களுக்கு நிகரா எம் பொண்ணுங்க சாதிப்பாங்க!' அப் படின்னு பதிலடி கொடுப்பாங்க. சாயங்கால மானால் வீட்டிற்கு வந்து விட வேண்டும் என்று வயசுப் பெண்களைக் கண்டிக்கிற தாய் களின் மத்தியில், கட்சிக் கூட்டம் முடிஞ்சு இரவு பதினோரு மணிக்கு கட்சித் தோழர் களோடு சைக்கிளில் நான் வீடு வந்து சேரும் போது, பொது வாழ்க்கையில் நான் காட்டும் ஆர்வத்தை எங்கம்மா பாராட்டுவாங்க. ஜன நாயக வாலிபர் சங்க மாநாட்டிற்காக டெல்லி, கல்கத்தா என்றெல்லாம் என்னைத் தனியாவே அனுப்பியிருக்காங்க!" என்றார்.

"**நா**ன் மேல்நிலைப் பள்ளியில் சேரும் போது, 'அரசியல் கலைப்பிரிவு' சப்ஜெக்டை தேர்ந்தெடுத்து அதில் என்னைச் சேர்த்தாங்க அம்மா. நான் எழுதும் கவிதைகளை சிறுகதை களைப் படித்து மிகவும் உற்சாகப்படுத்துவாங்க. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கருத்தரங்குகளுக்கு அழைத்துச் சென்று பல பெரிய எழுத்தாளர்களிடம் அறிமுகப்படுத்தி வச்சிருக்காங்க. எங்கம்மா கொடுத்த உற்சாகத் தில் பள்ளிக்கூடத்தில் பல கலைநிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம். எங்கம்மா எந்தப் பொதுச் சேவைக்காக உயிர்பலியானாங்களோ, அதே பணியை நாங்களும் இன்னமும் முன்னெடுத் துச் செய்வோம்.

"அம்மா! ஒரே செடியில் பூத்த பூக்கள் ஒரே மாதிரி மணத்தைத் தருவது போல உன் வயிற்றில் பிறந்த நாங்கள் இருப்போம். வாடி நிற்காமல் உன் பணியைத் தொடர்வோம். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பது போல – உன்னை விட அதிக பேரையும் புகழையும் கட்சிக்குச் சேர்ப்போம். உன் பாதம் தொட்டு வணங்கி பணியைத் தொடர்வோம்!" என்றார் பதி னேழு வயதுடைய இரண்டாவது மகள் துர்கா.

மூன்றாவது பெண் தான்யா (15) : "என் பேரே ஒரு சோவியத் வீராங்கனையின் பேர்தான். என் சகோதரிகளைப் போல் எனக்குப் பொது அறிவும், சமூகப் பார்வையும் கிடையாது. நான் ஒரு புத்தகப் புழு. எனக்கு எப்பவும் படிப்புதான். அதனால 'நீ உன் சொந்தத் தகுதியால மெடிக்கல் சீட் வாங்கிப் படிக்கணும்'பாங்க. 'உன் படிப்பையும் அத னால உனக்குக் கெடைக்கப் போகிற டாக்டர் தகுதியையும் நீ இந்த சமூகத்துக்குப் பயன்படுத் தணும்' என்று அம்மா அடிக்கடி சொல்லுவாங்க!" என்றார்.

• லீலாவதி




லீலாவதியின் கணவர் குப்புசாமி சொன் னார் : "எனக்குக் கல்யாணமாகி இந்த இருபது வருஷத்தில் வீட்ல ஒரு சின்னச் சண்டை சச்

"எங்கள் தாயின் பணிகளை நாங்கள் தொடருவோம்!"

சாவு கூட வந்ததில்ல. அவளுக்குக் கோபமே வராது! அவ சிரிச்சா மல்லிகைப்பூ மலர்ந்த மாதிரி இருக்கும். ரொம்பவும் பொறுமையும், மனத்துணிவும் உள்ளவ...! இங்கு குடிநீரை லாரிகளில் கொண்டு வந்து வியாபாரம் செய்வதைத் தடுக்கவும், குழாய் மூலம் குடிநீர் கொண்டு வரவும் சட்டரீதியான, ஜனநாயக பூர்வமான முயற்சிகளில் அவள் ஈடுபட்டாள்.

இரண்டு மாதத்திற்கு முன் குடிநீர் குழாய்களைப் பதித்தபோது கட்சித் தோழர்களை அழைத்து, இரவு இரண்டு மணி வரை – முழு வேலை முடிக்கும் வரை கூடவே இருந்து பார்த்து திருப்திப்பட்ட பிறகே வீட்டுக்கு வந்தாள். குழாய் பதிக்கப்பட்ட பிறகும் அதில் தண்ணீர் விடாமல் அலைக்கழித்தபோது இதற்காக எல்லா மட்டத்திலுமுள்ள அதிகாரிகளையும் அவள் வாரத்திற்கு நான்கைந்து முறையாவது நேரில் சந்தித்து வற்புறுத்தி வருவாள். அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து சென்று சில அதிகாரிகளை வீடுகளிலேயே பார்த்துப் பேசி வருவாள். சிறிய வியாபாரிகளிடம் மாமூல் பெறும் ரவுடிகளைக் கைது செய்யக்கோரி அனைத்து வியாபாரிகளையும் திரட்டி மறியல் போராட்டம் நடத்தினாள். இதனால் பல முறை ரவுடிகள் மிரட்டினார்கள். ஒருமுறை என்னைக் கடுமையாகத் தாக்கினார்கள். இது குறித்து ஏழெட்டு முறை போலீசில் புகார் கொடுத்தோம்! முன்பே நடவடிக்கை எடுத்திருந்தால் அவளை அநியாயமாக இழந்திருக்க வேண்டியதில்லை!'' என்றார் கண்ணீர் மல்க.



• லீலாவதியின் கணவர் குப்புசாமி, மகள்கள் கலாவதி, துர்கா, தான்யா (கடிகாரச் சுற்றுப்படி)

லீலாவதியின் கணவர் குப்புசாமி சில்வர் பட்டறை கூலித் தொழிலாளி. கணவரின் கட்சி மற்றும் தொழிற்சங்க ஈடுபாட்டால் கவரப்பட்டு, கட்சியிலும் மாதர் அமைப்பு கைத்தறி நெசவுத் தொழிலாளரமைப்பு என்று பல்வேறு சமூகப் பணிகளிலும் ஆர்வம் காட்டினார் லீலாவதி. இவரது நேர்மையையும், உழைப்பையும் கணக்கிலெடுத்து மார்க்சிஸ்ட் கட்சி இவரை முழு நேர கட்சி ஊழியராக அங்கீகரித்ததாம். கணவரின் ஊதியம், கட்சியிலிருந்து பெறப்படும் மாத வருமானம், மூத்த மகளின் நெசவுத் தொழில் ஆகியவற்றின் மூலம் குடும்பத்திற்கு மாதம் ரூ 2,500 கிடைத்து வந்துள்ளது. வீட்டு வாடகை ரூ 120. இதுதான் கொலையுண்ட கவுன்சிலர் லீலாவதி குடும்பத்தின் எளிய நிலைமை!

மதுரையிலிருந்து :

சாவித்திரி கண்ணன்

5

மூலம் : டேனியல் ஸ்டீல்

1129

தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

ஓரே ஒரு வினாடி நேரம்தான் பிலிப் சாலையிலிருந்து பார்வையை விலக்கி ஆலிஸனைப் பார்த்தான். மறுவினாடி சாலையை நோக்கிய போது —

நேர் எதிரே ஒரு கார் - லின்கன் கார் வந்து கொண்டிருப்பதைக் கண்டான்.

பளீரென்று ஒரு வெளிச்சம்! மின்னலொன்று உருண்டு திரண்டு வடிவெடுத்து அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது - அவர்கள் முகத்தின் மீதே மோதுகிற மாதிரி.

ஆலிஸன் பிலிப்பைப் பார்த்துக் கொண்டிருந்ததால் அதைப் பார்க்கவில்லை. மோதிய வினாடியில் பார்த்தான். பின் ஸீட்டில் இருந்த ஜேம்ஸும் க்ளோவும் பார்க்கவேயில்லை. வளைவாக ஓர் ஒளி. மடேலென்று இறங்கியது ஓர் இடி. மலை போன்ற இரும்புத் தகடு மோதியது. மோதிய கணத்திலேயே வெடிகுண்டு போலக் கண்ணாடிகள் வெடித்துச் சிதறின.

ஒரு நிமிடத்துக்குள் மொத்த உலகமும் அஸ்தமித்து விட்டது.

ஒன்றோடொன்று மோதிக்கொண்ட இரண்டு கார்களும், மோதிய வேகத்தில் ஒன்றையொன்று சுற்றிச் சுழன்றன, வெறி பிடித்த ஜல்லிக்கட்டுக் காளைகள் போல. முன்னாலும் பின்னாலும் வந்து கொண்டிருந்த கார்கள் இந்த இரண்டின்மீது இடித்துக் கொண்டு விடக் கூடாதென்று தடாலென பிரேக் போட்டு, கிறீச் சத்தத்துடன் கோணல் மாணலாக நிற்க, எங்கெங்கும் ஹாரன்களின் சத்தம். கூச்சல்கள். வெடிக்கும் ஓசைகள்.

எல்லாம் முடிந்து, திடீரென்று நிசப்தம்.

எந்தப் பக்கம் பார்த்தாலும் உடைந்த கண்ணாடித் துகள்கள். இரும்பும் உருக்குத் தகடுகளும் ஒன்றையொன்று கவ்விக் கொண்டு காட்சி தந்தன. இரவைக் கிழித்துக்கொண்டு ஒரு நீளமான அலறல். ஒரே சமயத்தில் பல ஹாரன்களின் ஒலி.

கடைசியாக, மெதுவான நீண்ட சைரன் ஊளை.

அருகில் நின்றுவிட்ட கார்களுக்குள்ளிருந்த ஜனங்கள் முதலில் மெல்ல மெல்ல வெளி வந்து, பின்னர், திடீரென்று வேகமாக இந்த இரண்டு கார்களை நோக்கி ஓடி வந்தார்கள்.

மோதிக் கொண்ட இரண்டு கார்களும் ஒன்றோடொன்று சிக்கிக் கொண்டிருந்தன. மரண பந்தம் போல ஒரு பிணைப்பு... பயங்கரப் பனியில் உறைந்த மாதிரி... உருண்டையான உருக்குப் பந்து...

சைரன்களின் ஒலி அருகே அருகே கேட்டன. ஜனங்கள் ஓடி வந்தார்கள் உதவிக்கு. ஆனால் யாரும் உயிரோடு இருப்பார்கள் என்று எவருக்கும் தோன்றவில்லை.

பிலிப்பின் மெர்ஸிடிஸ் காரின் மீது ஒரு கறுப்பு லின்கன் கார் நேருக்கு நேராக மோதியிருந்தது. மெர்ஸிடிஸ் வண்டியில் இஞ்சின் நசுங்கி நொறுங்கி, இரண்டு கார்களும் ஒன்றுக்குள் ஒன்று சங்கமமாகிவிட்ட மாதிரி இருந்தது. இரண்டும் வெவ்வேறு கலரில் இருந்திராவிட்டால், எது எந்தக் கார் என்பதைக்கூடப் பிரித்தறிந்திருக்க முடியாது.

லின்கன் காரை ஓட்டி வந்த பெண்மணி விசும்பிக் கொண்டும் தனக்குத்தானே புலம்பிக் கொண்டும் நடைபாதையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவளுக்குக் காயம் படவில்லை என்று தோன்றியது. இரண்டு பேர் அந்தப் பெண்மணியிடம் சென்றார்கள்.

வேறு இரண்டு பேர் மெர்ஸிடிஸ் காருக்குள் எட்டிப் பார்த்தார்கள். அவர்களில் ஒருவர் பெரியவர். கையில் டார்ச் லைட் எடுத்து வந்திருந்தார். மற்றவன் இளைஞன். தான் ஒரு டாக்டர் என்று பெரியவரிடம் சொன்னான்.



"ஏதாவது தெரிகிறதா?" என்று பெரியவர் அவனைக் கேட்டார். அவர் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. வாழ்க்கையில் எவ்வளவோ அதிர்ச்சிகளைப் பார்த்தவர் அவர். ஆனால், இப்படியொன்றை இதுவரை கண்டது கிடையாது. விபத்து நேரிட்ட சமயம் தன் காரைச் சரேலென்று திருப்பியதில் கிட்டத்தட்ட இன்னொரு கார் மீது முட்டிக் கொள்ளும்படி நேர்ந்துவிட்டது... அவர் ஆடிப் போயிருந்தார்.

எல்லா இடங்களிலும் வாகனங்கள் நின்று விட்டன. பாலத்தில் போக்குவரத்து மொத்தமும் ஸ்தம்பித்தது.

பாலத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தபோதும் காருக்குள் ஒரே இருட்டாக இருந்தது. அப்பளமாக நொறுங்கிப் போயிருந்ததால் மெர்ஸிடிஸ் காருக்குள் யார் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது.

அப்போதுதான் அவர்கள் முன்சீட்டில் பிலிப்பைப் பார்த்தார்கள். அவன் முகம் ரத்தத்தில் முழுகியிருந்தது. மிக மிகக் குறுகலான

இடுக்கில் அவன் தேகம் முடங்கிச் சுருண்டிருந்தது. பின்னந் தலை, காரின் கதவோடு இணைந்து நசுங்கியிருந்தது. பயங்கரக் கோணலாகக் கழுத்து திருகியிருந்தது.

அவனுடைய நாடியைப் பார்க்க டாக்டர் இளைஞன் முயன்றான். ஆனால் கை அகப்படவில்லை. அவன் இறந்துவிட்டான் என்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது.

"காரோட்டி இறந்து விட்டார்," என்று பெரியவரிடம் வருத்தத்துடன் தெரிவித்தான் அந்த இளைஞன்.

காரின் பின்சீட்டில் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார் பெரியவர்.

ஓர் இளம் வாலிபனின் கண்கள் அவரை வெறித்துப் பார்த்தன. அது ஜேம்ஸ். அவன் ஓரளவு நினைவுடன் இருப்பது தெரிந்தது. ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

"உனக்கு ஒன்றுமில்லையே?" என்று அவனைக் கேட்டான் டாக்டர் இளைஞன்.

ஜேம்ஸ் தலையை ஆட்டினான். அவனுடைய ஒரு கண்ணுக்கு மேலே வெட்டு விழுந்திருந்தது. நெற்றி எதன்மீதோ இடித்திருந்தது. ஒருகால் பிலிப்பின் மீது மோதியிருக்கலாம். பிரமை பிடித்தவன் மாதிரி இருந்தானே தவிர, மற்றப்படி காயம் எதையும் காணோம். பெரும் அதிசயம்.

டார்ச் லைட் வைத்திருந்த பெரியவர் அவனுக்காகக் காரின் கதவைத் திறக்க முயன்றார். ஆனால், அது நசுங்கியிருந்ததால் திறக்க முடியவில்லை.

"இதோ ஒரு நிமிடத்தில் நெடுஞ்சாலைப் போலீஸ் வந்து விடும், தம்பி," என்று அமைதியாகச் சொன்னார். ஜேம்ஸ் மறுபடியும் தலையை ஆட்டினான். அவனால் பேச முடியவில்லை என்று தோன்றியது. அதிர்ச்சி அவன் வாயை அடைத்து விட்டது போலும். இருவரையும் வெறித்துப் பார்த்த வண்ணமே இருந்தான்.

டாக்டர் இளைஞன் காரின் ஜன்னலுக்குள்ளாகத் தலையை நீட்டி ஜேம்ஸுக்குத் தைரியம் கூறிக் கொண்டிருந்தபோது —

ஒரு தீனமான முனகல் சத்தம் கேட்டது ஜேம்ஸுக்குப் பக்கத்திலிருந்து. சற்றைக்கெல்லாம் அந்த முனகல் வலுத்து பெரும் கூச்சலாகப் புறப்பட்டது.

அது க்ளோ.

ஜேம்ஸும் அப்போதுதான் அவளைப் பார்த்தான். இவள் எப்படி இங்கே வந்தாள் என்று புரியாதமாதிரி அவன் பார்வையில் திகைப்புத் தென்பட்டது.

டாக்டர் இளைஞன் காரைச் சுற்றிக் கொண்டு மறுபக்கத்துக்கு ஓடிப் போய்ப் பார்த்தான். பெரியவர் டார்ச் லைட்டை அடித்துக் காட்டினார்.

க்ளோவின் நிலைமை பரிதாபம்.

முன்சீட்டுக்கும் பின்சீட்டுக்கும் நடுவில் அவள் சிக்கியிருந்தாள். லின்கன் கார் மோதிய வேகத்தில் மெர்ஸிடிஸ் காரின் முன் சீட் அப்படியே பின்னுக்குத் தள்ளப்பட்டு, க்ளோவின் மடியை அழுத்தியிருந்தது. அவளுடைய கால்கள் தெரியவில்லை.

'என்னால் நகர முடியவில்லை! வலி தாங்கவில்லை!' என்று வெறி பிடித்தவள் மாதிரி க்ளோ கத்தத் தொடங்கினாள். அவர்கள் இருவரும் அவளை அமைதிப்படுத்த முயன்றார்கள். ஜேம்ஸ் இன்னமும் அவளைக் குழப்பத்துடன் வெறித்து நோக்கியபடியே இருந்தான்.

டார்ச் லைட்டுடன் இருந்த பெரியவர் ஜேம்ஸ், க்ளோ இருவரிடமும் "கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இதோ. ஆள் வருகிறது உங்களை விடுவிப்பதற்கு" என்றார். சைரன்களின் ஊளை கிட்டத்தில் கேட்டது. ஆனால், அதையும் மீறிக்கொண்டு க்ளோவின் கதறல் செவியைப் பிளந்தது.

"என்னால்... அசைய முடியவில்லை... மூச்சு... மூச்சு விட..." என்பதற்குமேல் அவளால் பேச இயலவில்லை. பயத்தில் அவளுக்கு மூச்சுத் திணறியது.

அந்த இளம் டாக்டர் அமைதியாகவும், நிதானமாகவும் அவளுக்குத் தைரியமூட்டினான். "இதோ பார், உனக்கு ஒன்றுமில்லை... நீ ஜம்மென்று இருக்கிறாய். ஒரே நிமிடத்தில் உன்னை வெளியே எடுத்து விடலாம். மெதுவாய் மூச்சு விடு. இதோ... இதோ என் கையைப் பிடித்துக் கொள்," என்றவன் கையை உள்ளே நீட்டி அவள் கையைப் பிடித்தான். காலையும் தொட்டான். அது ரத்தத்தில் நனைந்திருப்பதை உணர்ந்தான். டார்ச் லைட் ஒளி வீசியபோதிலும் அவளுக்கு என்ன நேர்ந்திருக்கிறதென்பதை அவனால் அறிய முடியவில்லை. அவள் சுயநினைவோடு இருப்பதும், பேச முடிவதுமே பெரிய விஷயம். கால் காயம் எத்தனை மோசமாக இருந்தாலும் இவள் பிழைத்துக் கொள்வது நிச்சயம்...

டார்ச் லைட்டுடன் இருந்த பெரியவர், அப்போதுதான் முன்சீட்டில் நினைவற்றுக் கிடக்கும் பெண்ணைப் பார்த்தார். அது ஆலிஸன். முன்சீட்டின் அடியில், வெகு கீழே அவள் விழுந்திருந்ததால் அவள் அங்கு இருப்பதே முதலில் தெரியவில்லை. காரின் தகடுகள் வேறே அவளை சுற்றி மறைத்துக் கொண்டிருந்தன. க்ளோவைக் கவனித்துக் கொண்டிருந்த போதுதான், இவளுடைய முகமும் முடியும் கண்ணில் பட்டன. ரத்தச் சேற்றில் அவள் முடி சடையாகியிருந்தது.

டாஷ்போர்டின் கீழே கிடக்கும் அவளை விடுவிக்க நினைத்த பெரியவர் முன் கதவைத் திறக்க முயன்றார். ஆனால் அந்தக் கதவும் வளைந்து போயிருந்தது. திறக்க வரவில்லை. பெரியவர் ஜன்னல் வழியே கையை நீட்டி அவளைத் தொட்டுப் பார்த்துவிட்டு, இளம் டாக்டரிடம் தாழ்ந்த குரலில் ஏதோ சொல்ல, அவன் விரைந்து வந்து பார்த்தான். 'காரோட்டி இறந்துவிட்டான். கூடவே இந்தப் பெண்ணும் இறந்திருப்பாள்,' என்று முதலில் சொன்னவன், ஏதோ நினைத்தவனாக அவளை மீண்டும் தொட்டான். நாடித் துடிப்பு இருப்பது அறிய, அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

அவள் கழுத்தைத் தொட்டுப் பார்த்தான். நூல் மாதிரி மெல்லிசாய் இருந்தது. சுவாசம் வருவதாகத் தெரியவில்லை. தலையும் முகமும் ரத்த வெள்ளமாக இருந்தது. அவள் அணிந்திருந்த ஸ்வெட்டர் ரத்தம் சொட்டி செக்கச் செவேலென்று ஆகியிருந்தது. உடம்பில் எங்கு நோக்கினாலும் காயங்கள் தென்பட்டன. கார் மோதிய வேகத்தில் அவள் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றியது. 'மயிரிழையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இசகுபிசகாகச் சிக்கிக் கிடக்கிறாள்... உதவிக்கு ஆள் வந்து மீட்கிற வரையில் தாக்குப் பிடிப்பாளா என்பதே சந்தேகம்' என்று நினைத்துக் கொண்டான். அவனால் என்ன செய்ய முடியும்? அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான். முன்சீட்டில் இருந்த இருவரும் அவ்வளவுதான் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் பின்சீட்டில் இருந்த இருவரும் பிழைத்துக் கொள்வார்கள்...

'கடவுளே! போலீஸ் வர எத்தனை நேரமாகிறது!' என்று பெரியவர் பெருமூச்சு விட்டார். காருக்குள் இருப்பவர்களைப் பார்க்கப் பார்க்க அவருக்கு நரக வேதனையாக இருந்தது. காரின் உட்புறமெங்கும் ரத்தம் கொட்டியிருந்தது - இன்னும் கொட்டிக் கொண்டேயிருந்தது.

"இதோ வந்துவிடுவார்கள்," என்றான் டாக்டர் இளைஞன். முன்பு ஓர் ஆம்புலன்ஸ் வண்டியில் பணியாற்றியவன் அவன். இது போலப் பல பயங்கர விபத்துக்களைப் பார்த்திருக்கிறான்.

பெரியவருக்கோ, முன்சீட்டில் இருந்த ஆலிஸனின் முகத்தைப் பார்க்கவே பயமாயிருந்தது. அப்பா! என்ன கோரம்! முகம் என்று ஒன்று இருக்கிறதா என்றே தெரியவில்லை...

அவர்கள் காத்திருந்தார்கள்.

ஆலிஸனின் வீட்டில் அவள் அம்மா பேஜும் காத்துக் கொண்டிருந்தாள், மகளின் வருகைக்காக.

(தொடரும்)

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும் மகத்தான முதலீட்டுத் திட்டம்!

ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன்

● 4 இலக்கியப் பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 [ரூ. பத்தாயிரம்] 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102.


---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி...
   முகவரி : ....
   ....
   ....
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
   முழுப்பெயர் :..
3. வாரிசுதாரர் : ....
4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :..................................
....
....

CHEQUE/ D.D. No. DT. ON

இடம்.. அன்புள்ள

தேதி.. முதலீட்டாளர் கையொப்பம்





1997 மே 11
ஈசுவர சித்திரை 28
மலர் : 55
இதழ் : 41

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



காங்கிரஸுக்கு அழைப்பு; மடியிலே நெருப்பு!

கொதிப்பும் கோபமுமாகப் பொங்கிய த.மா.கா. உறுப்பினர்கள், ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெறும் முடிவை தலைவருக்கே விட்டுவிட, பத்து நாள் சஸ்பென்ஸை உடைத்துள்ளார் மூப்பனார். த.மா.கா. மத்திய ஆட்சியில் பங்கேற்கிறது.

'தனிநபர் நலனை விட கட்சி நலன் முக்கியம்; கட்சி நலனை விட தேச நலனே முக்கியம்' என்று முடிவெடுத்து, மூப்பனார் பழையபடி ஐக்கிய முன்னணி ஆட்சியில் இடம்பெற சம்மதித்து விட்டார்.

'த.மா.கா.வின் நிலையினால் ஆட்சியின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டது' என்ற குற்றச்சாட்டு எழுவதைத் தாம் விரும்பவில்லை என்கிறார் மூப்பனார்.


அவருடைய வாதங்களும் நிலையும் அதுவரை குறைகாண முடியாதவைதான்.

ஆனால், 'இந்த ஆட்சியில் காங்கிரஸும் கூட அங்கம் வகிக்க வேண்டும்' என மூப்பனார் வலியுறுத்துவதைத்தான் நம்மால் ஏற்க இயலவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் மக்களால் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சி, காங்கிரஸ்.

அந்தக் கட்சி அமைச்சரவையில் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்பதோ வற்புறுத்துவதோ, வாக்களித்த பொது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியே!

ஸ்திரத்தன்மை கருதித்தான் இவ்வாறு வற்புறுத்துகிறோம் என்கிற வாதத்தைத்தான் மூப்பனார்



மீண்டும் முன்வைக்கிறார். ஆனால், இம்முறை அந்த வாதம் ஏற்க முடியாததாகவே இருக்கிறது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் ஆதரவு என்பது போலியான ஸ்திரத்தன்மையைத் தான் அளிக்க முடியும்.

மேலும், 'காங்கிரஸ் பாரம்பரியம் = ஊழல் பாரம்பரியம்' என்று சொல்லும் அளவுக்கு அடுத் தடுத்து பதவி வகித்த காங்கிரஸ் பிரதமர்கள் ஊழல் மன்னர்களாகவே இருந்திருக்கிறார்கள். தற்போதைய காங்கிரஸ் தலைவர் பேரிலும் ஏராளமான குற்றச்சாட்டுகள். இப்படியிருக்க, ஐ.மு. அரசில் காங்கிரஸ் இடம்பெற வேண்டும் என்று விருப்பம் தெரிவிப்பதோ, வற்புறுத்துவதோ நல்லதற்கல்ல.


காங்கிரஸிலிருந்து த.மா.கா. பிரிந்து வந்ததே ஒரு வலுவான கொள்கை அடிப்படையில்தான். ஊழலின் அவதாரமாகப் பேசப்பட்ட அ.தி.மு.க.வுடன் தேர்தல் உடன்படிக்கை வைத்துக் கொள் வதை மூப்பனார் பிரிவினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அந்தக் கொள்கை வேகத்தை இப்போது தளர்த்தத் தயாராயிருப்பது ஒரு நல்ல கட்சிக்கு அழகல்ல.

'மூப்பனார், காங்கிரஸுக்கு நெருக்கமானவர்' என்ற ஒரு சாராரின் ஆட்சேபணையே அவர் பிரதமராகும் வாய்ப்பைக் கெடுத்ததாக ஒரு கருத்து நிலவுகிறது.

த.மா.காவின் தற்போதைய 'வரவேற்போம் காங்கிரஸை' என்கிற நிலையானது, மேற்சொன்ன ஆட்சேபணைக்கு வலுவூட்டுவதாக இருக்கிறது.

காங்கிரஸின் ஆதரவு ஐக்கிய முன்னணிக்குத் தொடர்ந்து கிட்டாவிட்டால், தேர்தல் வரு வதைத் தவிர வேறு வழியிராது. அப்படி தேர்தல் வரும் நேரத்தில், ஒருமுறைக்கு இருமுறையாகக் காலை வாரிவிட்ட காங்கிரஸின் பேரில் எந்த வாக்காளருக்கும் நம்பிக்கை பிறக்காது. த.மா.காவும் ஐக்கிய முன்னணியின் இதர உறுப்பினர் கட்சிகளும் இதைக் கண்டிப்புடன் எடுத்துச் சொல்லியே காங்கிரஸின் ஆதரவை நீடிக்கச் செய்யலாம். அவ்வாறு செய்வதை விடுத்து, காங்கிரஸை



அமைச்சரவையில் பங்கேற்கச் சொல்லி அழைப்பு விடுவது நெருப்பை மடியில் கட்டிக் கொள்ளும் செயல்!

த.மா.காவின் முடிவு, பிரதமர் குஜ்ராலுக்கு ஒரு பக்கம் ஆறுதல் அளிக்கும் வேளையில், இன்னொரு பக்கம் லல்லு பிரசாத் யாதவ்வின் பிடிவாதம் பெரிய தலைவலியாக உயர்ந்துள்ளது.

சி.பி.ஐ. தலைவர் ஜோகீந்தர் சிங், லல்லு மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யத் துடிக்கிறார். பீஹார் மாட்டுத் தீவன ஊழலில் சம்பந்தப்பட்டதற்காக லல்லு, சந்திரதேவ் வர்மா போன்ற சில பீஹார் ஜனதா தள தலைவர்கள் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். சந்திர தேவ் வர்மா, மத்திய அமைச்சராக இருப்பவர்.

லல்லு, நிலைமை இவ்வளவு தூரம் முற்றிய பின்னரும் ராஜினாமா செய்வதில்லை என்பதில் பிடிவாதமாக உள்ளார். வர்மாவோ, லல்லு சொன்னாலொழிய பதவி விலக முடியாது என்கிறார்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரிலான விசாரணை முடிவுகள் தெரியும் வரை, பதவியிலிருந்து விலகியிருப்பதே நியாயம் என்பதை, பிரதமர் லல்லுவிடம் தயங்காமல் கூற வேண்டும். ராஜினாமா செய்ய மறுக்கும் வர்மாவைத் துணிந்து பதவி நீக்கம் செய்யலாம்.

இந்தச் செயல்களால் சிறிது காலத்துக்கு உட்கட்சிப் பூசல் நிலவக்கூடும். ஆனால் புதிய ஆட்சி, கொள்கைக்கும் நேர்மைக்கும் மதிப்புக் கொடுத்துச் செயல்படுகிறது என்பதை மக்களுக்கு உணர்த்த முடியும்.

சந்தர்ப்பவாதத்தையே பார்த்து சலித்துப் போயிருக்கும் ஒரு சூழ்நிலையில், பிரதமரின் இந்த நியாயமான செயல்பாடுகள் மக்களுக்குப் புத்துணர்ச்சியைத் தரும். கூட்டணி கட்சிக்காரர்களை 'இனி ஊழல் உதவாது' என்று உணர்ந்து, எச்சரிக்கையுடன் நிமிர்ந்து உட்காரவும் செய்யும்.

மாறாக, சமரசத்துக்கு மேல் சமரசம் செய்துகொண்டு, ஊழல் குற்றச்சாட்டுகளைக் கண்டும் காணாமல் மத்திய அரசு தொடருமானால், மக்களிடையே அது சுத்தமாக மதிப்பிழந்து போகும்.

வெகு விரைவில் தேர்தல் வரும்போது, பி.ஜே.பியின் வாய்ப்புகளுக்கே பலம் சேர்ப்பதாக முடியும்.



• வால் நட்சத்திரம் ஹேல்-பாப்

இந்த மாதத்துக்குள் பார்த்தால் தான் உண்டு!

ஆலன் ஹேல், தாமஸ் பாப் இருவருமே அமெரிக்கர்கள். என்றாலும் ஒருவர் வசிப்பது நியூ மெக்ஸிகோவில். மற்றவர் இருப்பது அரிஸோனாவில். ஒருவர் வானியல் நிபுணர். மற்றவர் வானியலில் ஆர்வம் மட்டுமே கொண்ட அமெச்சூர். என்றாலும் 1995-ம் ஆண்டு ஜூலை 25-ம் தேதியன்று இருவருமே ஆச்சரியத்தின் எல்லைக்கே போனார்கள். வானில் புதிதாக ஒரு பிரம்மாண்டமான வால் நட்சத்திரத்தை அவர்கள் கண்டார்கள். உடனே (தனித்தனியாகத்தான்) சர்வதேச தலைமை வானியல் மையத்திற்குத் தங்கள் கண்டுபிடிப்பைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த நூற்றாண்டின் இணையில்லாத வால் நட்சத்திரமாக அது இருக்கப் போகிறது என்பது அவர்களுக்கு அப்போது தெரியாது.

பூமியிலிருந்து 90 கோடி மைல்களுக்கு அப்பால் இருந்தும் ஹேல்-பாப் வால்நட்சத்திரம் (கண்டுபிடித்தவர்களின் பெயரையே குறிப்பிட்ட வால்நட்சத்திரத்துக்கு சூட்டுவது வழக்கமாகி வருகிறது) வெகு பிரகாசமாகத் தெரிந்தது முதல் ஆச்சரியம். இந்த வால்நட்சத்திரத்தின் மையப் பகுதியின் சுற்றளவு மட்டுமே சுமார் 45 மைல்கள் என்று கண்டறிந்திருக்கிறார்கள். உலகெங்கிலுமுள்ள வானியல் விஞ்ஞானிகள் அதீத உற்சாகத்துடன் ஹேல்-பாப் வால் நட்சத்திரத்தைப் பற்றிப் பல ஆராய்ச்சிகளை செய்தனர். "இதன் அருகே சனி கிரகத்தைப் போன்ற ஒரு பொருளைப் பார்த்தேன்" என்று சிலர் சொல்ல, பரபரப்பு ஏற்பட்டது. மீண்டும் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதில், சூரியனிலிருந்து இந்த வால் நட்சத்திரத்தின் மீது விழும் ஒளியின் ஒரு பகுதி அப்படி ஒரு மாயத் தோற்றத்தைத் தந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார்கள் (ஆனால் இன்னமும் சனி கிரகத்தின் டூப்ளிகேட் போன்ற ஒன்று, ஹேல்-பாப்பைச் சுற்றி இருக்கிறது என்று பிடிவாதமாகக் கூறும் விஞ்ஞானிகள் - குறைந்த அளவில் என்றாலும் - இருக்கிறார்கள்).

இன்னொரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால் இது ஒரு 'புதிய' வால்நட்சத்திரமாக இருக்க அதிக வாய்ப்பு உண்டு என்பதுதான். தன்

தனித்தன்மைகளை இது இழந்திருக்கவில்லை என்பதைக் கொண்டு இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். (நிறைய தடவை வானில் வட்டமடித்துக் கொண்டிருக்கும் வால் நட்சத்திரமென்றால் அவை அதிகம் 'டிஃப்யூஸ்' ஆகியிருக்கும்).

தவிர நுணுக்கமான தொலைநோக்கிகளின் மூலமாகத்தான் பொதுவாக வால்நட்சத்திரங்களைப் பார்க்க முடியும். ஆனால் ஹேல்-பாப்பை வேறு எந்தக் கருவியின் உதவியும் இல்லாமல் நாமே பார்க்க முடிகிறது.

ஆம். இந்தியாவிலுள்ள யாருமே இதை மே மாத இறுதிவரை பார்க்க முடியும். இரவு ஏழு மணியிலிருந்து ஏழு நாற்பத்தைந்துக்குள் வானத்தில் வடமேற்கு திசையில் (வடக்குப் பக்கம் கொஞ்சம் அதிகமாக) 'ஹேல்-பாப்'பைக் காணலாம்.

அது சரி, இதுபோன்ற வால் நட்சத்திரங்களை ஆராய்வதில் என்ன லாபம்?

பிரபஞ்சம் எப்படி உருவானது என்பதை அறிந்துகொள்ள இவை உதவக்கூடும். பிற கிரகங்களில் உயிரினங்கள் இருக்க வாய்ப்பு உண்டா என்பதை அறியவும் இந்த ஆராய்ச்சிகள் பயன்படும். எல்லாவற்றையும் விட முக்கியமாக, இவற்றால் பூமிக்கோ மற்ற கிரகங்களுக்கோ பாதிப்பு உண்டா என்பதையும் கணிக்க வேண்டுமே! (ஷூமேக்கர் வால்நட்சத்திரம் ஜுபிடர் கிரகத்தோடு மோதும் வேகத்தில் பயணம் செய்தது நினைவுக்கு வருகிறதா?)

- ஜி.எஸ்.எஸ்

தகவல் உதவி:

1. டாக்டர் சற்குணமூர்த்தி, செயல் இயக்குனர், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்.
2. பேராசிரியர் சுப்ரமணியம், இயக்குனர், பிர்லா கோளரங்கம், கல்கத்தா.
3. டாக்டர் கோபிநாத், துணை இயக்குனர், பிர்லா கோளரங்கம், சென்னை).



• கேரள தலைமைச் செயலகம்

கேரள சட்டசபைக்கு ஒரு தனிச் சிறப்பு!

கேரள சட்டசபையின் நாற்பதாவது ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. கேரள சட்டசபைக்குள்ள ஒரு தனிச் சிறப்பு என்ன தெரியுமா? உலகிலேயே முதன் முதலாக கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் அமர்ந்த இடம் கேரளாதான்! கேரளாவின் முதல் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர் இன்றைக்கும் எம்.எல்.ஏ.க்களாக இருக்கிறார்கள் என்பதால் அவர்கள் சிறப்பாக கௌரவிக்கப்பட்டனர்.

திருவனந்தபுரத்திலிருந்து: **எஸ்.எஸ். மணி.**



அணு ஆயுத எதிர்ப்புக்குப் பிறகு, இப்போது ஐ.நா. மன்றம், கண்ணிவெடியை போர்களில் தடைசெய்யுமாறு முதன்முதலாக வேண்டுகோள் விடுத்திருக்கிறது! 1998-இல் அனைத்துலக கண்ணிவெடித் தடுப்பு மாநாடு கனடாவின் தலை நகர் ஒட்டாவாவில் நடக்கவுள்ளது. அதற்கு முன்னோட்டமாக மொசாம்பிக் தலைநகர் மபுடோவில் 1997 மார்ச் மாதம் நடந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பியிருக்கிறார், தமிழ்நாட்டைச் சேர்ந்த ரஞ்சனி சம்பத்! ரஞ்சனி சம்பத் இந்திய கண்ணிவெடித் தடுப்புக் குழுவின் தலைவியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். சென்னைப் பல்கலையில் பாதுகாப்புக் கல்வியில், எம்.ஏ., எம்.ஃபில், பட்டங்களைப் பெற்றவர். பாதுகாப்புக் கல்வியில் ஈடுபாடு கொண்ட கவிஞர் நிர்மலா சுரேஷ், ரஞ்சனியைச் சந்திக்கிறார்.

கலக்குகிறது கண்ணிவெடி!



• ரஞ்சனி



• நிர்மலா சுரேஷ்

நிர் : கண்ணிவெடி பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறோம். இங்கிலாந்தில் வெற்றிமுகம் கண்டிருக்கும் தொழிற்கட்சி கூடத் தனது தேர்தல் வாக்குறுதியில் கண்ணிவெடி தயாரிப்பு, ஏற்றுமதி, விற்பனைக்குத் தடை விதிப்போம் என்று பிரசாரம் செய்துள்ளது. இதற்கு மட்டும் என்ன திடீர்த் தடை?

ரஞ்சனி : ஏனென்றால் இது சிந்திக்கத் தெரியாத ஆயுதம்!

நிர் : துப்பாக்கிக்கும், பீரங்கிக்கும் மட்டும் சிந்திக்கத் தெரிகிறதா?

ரஞ் : அவையெல்லாம் மனிதர் இயக்கினால்தான் இயங்கும்! கண்ணிவெடிகளோ, மறைந்து தாக்கும் எதிரியைப் போல! கால் பட்டவுடனே பூமிக்கடியிலிருந்து வெடிக்கும்!

நிர் : கடந்த 55 வருடங்களில் அணு ஆயுதம் மற்றும் ரசாயன ஆயுதங்களினால் ஏற்பட்ட மனித உயிர் இழப்பு, ஊனம் ஆகியவற்றை விட, கண்ணிவெடிகளினால் ஏற்பட்ட சேதம் அதிகம் என்று கேள்விப்பட்டேன். நிஜமா?

ரஞ் : ஆமாம்! அது மட்டுமல்ல... உலகில் 71 நாடுகளில் 119 மில்லியன் கண்ணிவெடிகள், அதாவது 1¼ கோடி புதைத்து வைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு கண்ணிவெடியை அகற்றும் நேரத்தில் 20 புதிய வெடிகள் புதைக்-



கப்படுகின்றன. இன்றைய நிலையில் உலகில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதென்றால் 1100 ஆண்டுகளாகும். அதுவும் புதியவை மீண்டும் தோன்றாமலிருக்கும் பட்சத்தில்...!

நிர் : இந்தச் செய்தியை உள்வாங்கவே சிரமமாயிருக்கிறது! ஒருவேளை நாம் பாது காப்பான சூழ்நிலையில் வாழ்வதால் இதன் அபாயம் தெரியாமலும் புரியாமலும் இருக் கிறோமோ?

ரஞ் : உண்மைதான்! போர் நடக்கும் நாடுகளில் மட்டுமல்ல – ஆப்பிரிக்க நாடுகளில் கண்ணிவெடியை சர்வசாதாரணமாகப் பயன்படுத்துகிறார்கள், விவசாய நிலங்களைப் பாதுகாக்க.. தற்காப்புக்காக என்று!

நிர் : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங் களேன் – கண்ணிவெடிகளில் எத்தனை ரகம்?

ரஞ் : பலவகை இருந்தாலும், எதிரியின் பீரங்கி வண்டிகள் வரும்போது, அவற்றை முன்னேற விடாமல் தகர்க்க பூமிக்கடியில் புதைக்கப்படுபவை Anti tank mines எனப் படுபவை. பீரங்கி வண்டிகள் அந்த நிலப் பரப்பை அடைந்ததும் அழுத்தத்தில் வெடிக்கும். எத்தனை கனம் வந்தால் வெடிக்க வேண்டும் என்றே இலக்கு வைத்து தயாரிக்கப்படுபவை. மற்றொரு வகை anti-personal mines! இவை சில சமயம் ஆடு மாடுகள், குழந்தைகள் கால் வைத்தாலே வெடிக்கக்கூடி யவை! இராணுவ முகாம்களைச் சுற்றியும், போராளிகள் தங்கும் காட்டுப் பகுதியைச் சுற்றியும் எவரும் உள்ளே புக முடியாதவண்ணம் தடுக் கவே இந்த ஏற்பாடு!

நிர் : எத்தனை காலமாக கண்ணிவெடி புழக்கத்தில் இருக்கிறது?

ரஞ் : இரண்டாவது உலகப் போருக்குப் பின்புதான் அதிகப் பயன்பாடு! முதன் முதலில் வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே நடந்த போரில்தான் பெருமளவில் கண்ணிவெடிகள் புழக்கத்துக்கு வந்தன. தொடர்ந்து வியட்நாம் யுத்தம், தற்போது உள்நாட்டுப் போர் நடக்கும் இடங்களில் எல் லாம் கண்ணிவெடி ஒரு 'house hold name' ஆகி விட்டது!

நிர் : இந்தியா கண்ணிவெடிகளைப் பயன்படுத்தியதா?


ரஞ் : 1962, 65, 71 ஆம் ஆண்டுகளில் நடந்த சீன, பாகிஸ்தான் போர்களில் தற்காப்பு முயற்சியாக கண்ணிவெடிகள் பயன்பட்டன. போர் நியதிக்கு ஏற்ப, போர் முடிந்ததும், ஐ.நா. விதிகளுக்கு ஏற்ப அவற்றை அப்புறப்படுத்தி யது, இந்தியா! இருப்பினும் பஞ்சாப், காஷ்மீர்ப் பகுதிகளில் சில விட்டுப் போயின.

நிர் : கண்ணிவெடிகளைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவை விட அகற்றுவதற்கு ஆகும் செலவு அதிகம்தானே!

ரஞ் : ஆமாம்! மூன்று டாலர் முதல் முப்பது டாலருக்குள்தான் தயாரிப்புச் செலவு! ஆனால் அப்புறப்படுத்த முந்நூறு டாலர் முதல் 1,000 டாலர் வரை ஆகும்! போர் முடித்



• வியட்நாம் போரில் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுள் இருவர்



அம்மாவுக்கு என்ன கோபம்?

திருநாவுக்கரசு மீது 'அம்மா' வுக்கு என்ன கோபம்? ஜெ. மீது போடப்படும் வழக்குகளைப் பற்றி சட்டமன்றத்தில் காரசாரமாக விமர்சிக்காமல் இருப்பதுதான் கோபத்துக்குக் காரணம். தவிர, கலைஞர் அரசை தீவிரமாகத் தாக்கிப் பேசாமல் இருப்பதும் அவரது வருத்தத்துக்குக் கூடுதல் காரணம்; அதனால்தான் சேடப்பட்டியாரை கிளப்பி விட்டிருக்கிறார்! எல்லா கட்சித் தலைவர்களிடமும் திருநாவுக்கரசுவுக்கு சுமுகமான தொடர்பு இருப்பது குறித்தும் கட்சி நிர்வாகிகள் சிலருக்கு எரிச்சல். இது பற்றியெல்லாம் திருநாவுக்கரசின் விளக்கம் என்ன?

அவரை அணுகும் பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கும் பதில் : "இப்ப வேணாமே, பிரதர்! அப்புறம் பார்க்கலாமே!"

ஏன் இந்தத் தயக்கம்? சகோதரர் மகளுக்கு விரைவில் திருமணம் நடக்க இருக்கிறது. அந்த ஏற்பாடுகளில் பிஸியாக இருக்கிறார் திருநாவுக்கரசு. கல்யாணப் பத்திரிகையில் எம்.ஜி.ஆர்., ஜெ இருவர் படமும் உண்டு!

● மான்யக் கோரிக்கைகளின்போது உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்டு அவ்வப்போது குறிப்பெடுத்துக் கொண்டே, பத்திரிகைக்கும் கடிதம் எழுத முடியுமா? மே தினத்தை ஒட்டி உடன்பிறப்புகளுக்குக் கலைஞர் எழுதிய கடிதம் அப்படி எழுதப்பட்டதுதானாம். இந்தத் தகவலை 'மே' தின பொதுக் கூட்டத்தில் சொன்னவர் அமைச்சர் துரைமுருகன். கடற்கரையில் கூட்டம் போட்டதில் வந்திருந்தோர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது போல் தோன்றியதால், 'நகரத்துத் தெருக்களில் போட்டிருந்தால் கலக்கலாக இருந்திருக்கும்!' என்று உடன்பிறப்புகள் பேசியபடி கலைந்து சென்றார்கள்.

— தில்லப்பா

துதும் இவை அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதால், மீண்டும் சொந்த பூமிக்குத் திரும்பும் அப்பாவிப் பொதுமக்களும், கால்நடைகளும் பலியாகிறார்கள். ஊனமுறுகிறார்கள். இது மிகவும் கொடுமை! கண்ணிவெடியைப் புதைத்த போராளிகளே பலியாவதுமுண்டு!

நிர் : கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவது பெரும்பாலும் போராளிகள்தானே! அரசுகளும் தற்காப்புக்காகப் பயன்படுத்துவதாகச் சொன்னீர்கள்! இலங்கை அரசு எப்படி?

ரஞ் : இலங்கை சார்பில் எவரும் மபுடோ மாநாட்டில் கலந்து கொள்ள வரவில்லை! இலங்கை அரசு தன் உள்நாட்டுப் போரில் கண்ணிவெடிகளைப் புதைத்ததாக ஆதாரபூர்வ தகவல்கள் இல்லை!

நிர் : இலங்கை இராணுவம் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெகுதூரம் சென்று, போரைச் சந்திப்பது ஒரு காரணமாக இருக்கக்கூடும்! இருந்தாலும், சென்று முகாமை நிறுவிய பின் சிற்சில இடங்களில் கண்ணிவெடிகள் வைத்து, பின்பு தமிழர் சீரமைப்புத் திட்டங்களின்போது அவை நீக்கப்பட்டதாக சிலர் கூற நாம் கேள்விப்பட்டோம்!

ரஞ் : இருக்கலாம். ஆனால் பெரிய அளவில் இல்லை. வளைகுடாப் போரில் சதாம் ஹுசேன், அமெரிக்கப் படைகளை நெருங்க விடாமல் 10 மில்லியன் கண்ணிவெடிகளைப் புதைத்தார்! அவ்வளவும் அமெரிக்க இராணுவத்தால் metal detector வைத்து கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது ஒரு இமாலய சாதனை! நல்லவேளையாக அவை பிளாஸ்டிக்கினால் அல்லாமல், உலோகம் கலந்து தயாரிக்கப்பட்டிருந்தன. இல்லையென்றால் கண்டுபிடிக்கவே முடியாது. அதனால்தான் கண்ணிவெடியை ஐ.நா. தீவிரமாய் எதிர்க்கிறது.

நிர் : கண்ணிவெடிக்கு ஆயுசு எவ்வளவு?

ரஞ் : 70 வருடம், சில 100 வருடம் வரை உயிர்ப்போடு இருக்கும்! பூமியின் பெரும் பரப்பை இவை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. வாழும் நிலப்பரப்பும், விவசாய நிலங்களும் பாதிக்கப்படுகின்றன. இதையும் எதிர்த்துத்தான் ஐ.நா. குரல்கொடுக்கிறது!

நிர் : அணு ஆயுத எதிர்ப்புக்குரல் கொடுக்கும் அமெரிக்கா, ஐ.நா.வின் இந்த வெடித் தடுப்புக் குரலை ஏற்கிறதா?

ரஞ் : கிளின்டன் தன் இராணுவத்தோடு ஆலோசனை நடத்தினார். அவர்கள் anti-personal minesக்குப் பதிலாக, சில காலமே உயிர்ப்போடு இருக்கும் smart mines எனப்படும் புதிய ரகத்தைப் போர்களில் மாற்றாகப் பயன்படுத்தலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்!

நிர் : இந்தியாவில் இதுபற்றிய விழிப்புணர்வு தேவையா?

ரஞ் : இந்தியாவில் இது தொடர்பான பாதிப்பு இல்லையெனினும், விழிப்புணர்வு அவசியம்! உலகப் பிரச்னைகளிலிருந்து நாம் விலகி விட முடியாதே!

நிர் : அடுத்த ஆண்டு இதற்கு முழுத்தடை வருமா?

ரஞ் : வரவேண்டும்! அதற்காகத்தான் உழைக்கிறோம். இவ்வருடம் விரைவில் சென்னையில் இது பற்றிய கருத்தரங்கு நடைபெறும்! 1980லேயே சட்டம் போட்டும், நடைமுறைப்படுத்த முடியாமல் தடுக்கிறது போர்வெறி!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1997



கல்கி விலை உட்பட விலை வாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறிவிட்டது! சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகை மட்டும் ஏறாவிட்டால் எப்படி? ஆகவே

முதல் பரிசு :
ரூ. 2500

இரண்டாவது பரிசு :
ரூ. 2000

மூன்றாவது பரிசு :
ரூ. 1500

ஆக மொத்தம் ரூ. 6000

பரிசுகளாக வழங்கப் பெறும்

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ.200 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு!

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய
கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலை ஒட்டிய, சுயவிலாசம் எழுதிய உறையைக் கதையுடன் கூடவே அனுப்ப வேண்டும். பின்னால், தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள், கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

மருத்துவ(ர்) மகிமை - 5

ஒரு நள்ளிரவு நாடகம்!

டாக்டர் டி.என்.சாயிமீனாட்சி

"திருநீர்மலை பகுதியில் கொஞ்சநாள் க்ளினிக் நடத்தி வந்தேன்.

ஒரு நாள் ஒரு முஸ்லீம் பெண்மணி வந்தார். வந்தார் என்பது கூடத் தவறு. அவரது உறவினர்கள் அவரை மாட்டு வண்டியில் குண்டுக்கட்டாக என் க்ளினிக்கிற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது மதியம் இரண்டரை மணியிருக்கும்.

"ஒரே உதிரமா போகுதுமா" என்றார் அந்தப் பெண்ணின் மாமியார்.

சிகிச்சைக்கு வந்த அந்தப் பெண்ணின் பின்னணி இதுதான்: மிக இளம் வயதிலேயே திருமணமாகியிருந்த அவளுக்கு ஏற்கெனவே கணிசமான குழந்தைகள். வெளிநாட்டிலிருக்கும் அவளது கணவன் அவ்வப்போது இந்தியா வந்து செல்வார். இதன் காரணமாக மீண்டும் கருத்தரித்திருந்தார் அந்தப் பெண்மணி.

இந்த முறை தனக்கு குழந்தை வேண்டாம் என்று தீர்மானித்த அந்தப் பெண், மிகவும் தவறான முறையில் தானாகவோ அல்லது அரைகுறை போலி மருத்துவர்கள் மூலமாகவோ கருச்சிதைவு செய்து கொண்டிருந்தார்!

என்னிடம் அந்தப் பெண் வந்து சேர்ந்தபோது அவளது ரத்த அழுத்தம், நாடித்துடிப்பு எல்லாமே மிகவும் குறைந்த நிலையில் இருந்தது. உதிரப்போக்கு உண்டாகும் பகுதியை பரிசோதிக்கலாம் என்றால், தன் துணியை லேசாக அகற்றவே அவர் அனுமதிக்கவில்லை!

"எனக்கு ஒன்னும் அபார்ஷன் எல்லாம் ஆகல்லே!" என்று பிடிவாதமாக உண்மையை மறைத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் உண்மை வேறு என்பதை அவரது மற்ற உடல் நிலைகளும், உதிரப் போக்கிலிருந்து புறப்பட்ட துர்வாடையும் காட்டிக் கொடுத்தன.

அவரைத் திமிர விடாமல் அவரது உறவினர்களையே விட்டு பிடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு நான் பரிசோதனைகளைத் தொடங்கினேன்.

பிறப்புறுப்பை ஆராய்ந்தபோது உள்ளுக்குள் ஏதோ தட்டுப்பட்டது. சில சமயம் தவறான முறையில் செய்யும் கருக்கலைப்பினால், கருவின் ஒரு சிறு பகுதி கர்ப்பப்பையிலேயே தங்கி விடக் கூடும். அப்படி ஏதாவது இருக்குமோ என்ற சந்தேகத்தில் "ஓவம் போர்ஸெப்ஸ்" என்ற சிறு இடுக்கி போன்ற கருவியின் மூலம் உள்ளே மாட்டிக் கொண்டிருந்த பகுதியை எடுத்துப் பார்த்தேன். பகீரென்றது! அது ஒரு கொழுப்பு நிரம்பிய பகுதி. குடலைச் சுற்றி இதுபோன்ற கொழுப்புப் பகுதிகள் இருக்க வாய்ப்பு உண்டே தவிர கர்ப்பப்பையில் இருக்க வாய்ப்பே கிடையாது.

சிதைக்கப்பட்ட கருவின் குடல் பகுதி என்றால் அது புழு போல மெலிதாக இருக்குமே தவிர, வளர்ச்சியடைந்ததாக இருக்காது.

அப்படியானால்? அவரது கர்ப்பப்பையில் ஓட்டை ஏற்பட்டிருக்கிறது! அதன் வழியாக அவரது குடலின் ஒரு பகுதி உள்ளே நுழைந்திருக்கிறது!

கர்ப்பப்பை, வயிறு ஆகிய பகுதிகளைச் சுற்றி பெரிடோனியம் என்ற மெல்லிய திசுப்படலம் இருக்கிறது. இது பாதிக்கப்பட்டாலோ, இதில் துளை விழுந்தாலோ, உடனே 'ஸெப்டிஸீமியா' என்ற நிலை தோன்றும். அடுத்தது உயிருக்கே ஆபத்து நேரிடும்.

நான் அப்போதுதான் எம்.பி.பி.எஸ். படிப்பை முடித்துவிட்டு ப்ராக்டீஸ் தொடங்கி சில மாதங்களே ஆகியிருந்தன. இந்த நிலையில் இவ்வளவு சிக்கலான ஒரு கேஸைக் கையாளும்படி நேர்ந்ததில் படபடப்பாக இருந்தது. தவிர கிராமங்களில் மருத்துவர்களின் நிலை என்பது கொஞ்சம் வித்தியாசமானது. சிகிச்சையில் நல்ல பலனிருந்தால் தலையில் தூக்கிக் கொண்டு கொண்டாடுவார்கள். அசம்பாவிதமான முடிவு ஏற்பட்டாலோ, டாக்டரைக் கல்லால் அடிக்கவும் தயங்க மாட்டார்கள்!

இந்தச் சூழலில் அந்தப் பெண்மணிக்கு ட்ரிப்ஸ் ஏற்றி ஓரளவு சீரான (அதாவது அறுவை சிகிச்சையைத் தாங்கும் அளவுக்கு)



உடல் நிலையைப் பெற வைத்தேன். ராயபுரத்தில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அங்கிருந்த சர்ஜனிடம் அறுவை சிகிச்சைக்கான தேவையை விளக்கினேன்.

அந்த மருத்துவமனை இந்த அறுவை சிகிச்சைக்கு தயாராக, அந்தப் பெண்மணியை அங்கே கூட்டிச் சென்றோம். வேதனை என்னவென்றால், அந்த மருத்துவமனையில் இருந்த சிலரே, நான் சொன்னதை நம்பாமல், நான்தான் அந்தப் பெண்ணுக்குத் தவறான முறையில் கருக்கலைப்பு செய்ததாகவும், அதனால்தான் இந்தச் சிக்கல் என்றும் என் காதுபடவே பேசியதுதான்!

மிகவும் கவனமாக ஆபரேஷன் செய்யவேண்டியிருந்தது. கர்ப்பப் பையில் விழுந்த ஓட்டை வழியே உள்நுழைந்திருந்த குடல் பகுதி பாதிக்கப்படக்கூடாது; அதே நேரத்தில் ஓட்டையை அடைத்தாக வேண்டும். பல மணி நேரம் நீடித்தது அந்த அறுவைச் சிகிச்சை! ஓட்டை அடைக்கப் பட்டது. கர்ப்பப்பையும் சுத்தம் செய்யப் பட்டது. மருத்துவமனையில் இருந்த ட்யூடி சர்ஜன் "தைரியமாகவும், சரியாகவும் செயல்பட்டாய்" என்று பாராட்டினார். கடிகாரத்தைப் பார்த்தேன். நள்ளிரவு தாண்டியதைக் காண்பித்தது! என்றாலும் வீட்டுக்கு வந்து படுத்தபோது அசதியைவிட திருப்திதான் அதிகம்."

பேட்டி :அருண்சரண்யா

நீலகிரி எக்ஸ்பிரஸ் கோவை ரயில் நிலையத்தின் நீளமான ப்ளாட்பாரத்தை விழுங்கி விட்டு, வேகம் எடுத்துக் கொண்டிருந்தபோது டி.டி.ஈ. என் முன்னால் வந்து நின்றார்.

"டிக்கெட் ப்ளீஸ்..."

ஒரு புத்தகத்தில் ஆழ்ந்து போயிருந்த நான் கலைந்துபோய் என் பாக்கெட்டில் இருந்த என் ரிசர்வேஷன் டிக்கெட்டை எடுத்து நீட்டினேன். அவர் அதை வாங்கி கையில் வைத்திருந்த சார்ட்டில் சரி பார்த்த பின்னர் டிக் அடித்து நீட்டி விட்டு எனக்கு எதிரே பெரியவரிடம் திரும்பினார். அவர் டிக்கெட்டை கையில் எடுத்து வைத்துக் கொண்டு தயாராய் காத்திருந்தார்.

டி.டி.ஈ பவ்யமாய் கும்பிட்டார்.

"அய்யா... நீங்களா... நான் கவனிக்கவேயில்லை"

சிவப்பாய் மெலிந்த தேகத்தோடு முடி கொட்டிப்போன தலையோடு எண்பது வயதில் இருந்த அந்தப் பெரியவர் வாயிலிருந்த மிச்சப் பற்களைக் காட்டி சிரித்தார்.

"நல்லாயிருக்கீங்களா தம்பி...?"

"நல்லாயிருக்கேன்யா... நீங்க...?"

"எனக்கென்ன தம்பி... அதே ஆஸ்துமா, அதே பி.பி. அதே சுகர்ன்னு சௌக்கியமாயிருக்கேன்... மகனைப் பார்க்கணும்போல் தோணிச்சு... புறப்பட்டேன். பெர்த் கன்ஃபர்ம் ஆகலை. ஆர்.ஏ.ஸி. போட்டுக் கொடுத்திருக்காங்க...பெர்த் கிடைக்குமா தம்பி...?"

"பார்க்கலாங்கய்யா... ஏதாவது கான்ஸலேஷன் இருந்தா உங்களுக்கு மொதல்ல பெர்த்தை அலாட் பண்ணிடறேன்"

"அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க தம்பி. என்னோட ஆர்.ஏ.ஸி நெம்பர் அஞ்சு. எனக்கு முன்னாடி இருக்கிற நாலு பேர்க்கு பெர்த் அலாட் பண்ணிட்டு அதுக்கப்புறமா எனக்கு பண்ணினா போதும்"

டி.டி.ஏ. பெரியவரிடம் குனிந்தார்.

"அய்யா...! உங்களுக்கு புத்தி சொல்றதா நீங்க நினைக்கக் கூடாது. நீங்க அந்தக் காலத்து சுதந்தரப் போராட்ட வீரர். ஃப்ரீடம் ஃபைட்டர். ரயில்வே நிர்வாகம் ஃப்ரீடம் ஃபைட்டர்களுக்காக இலவச ரயில் பிரயாண சலுகைத் திட்டத்தை அறிவிச்சபோது அந்த லிஸ்ட்ல உங்க பேர்தான் மொதல்ல இருந்தது. இந்தியாவில் எந்த ஊருக்கு வேண்டுமானாலும் இலவசமாய் ஏ.ஸி.



முதல் வகுப்பில் ஒரு ஹெல்ப் பரோடு பயணம் செய்யலாம். இந்த சலுகையை எல்லா ஃப்ரீடம் ஃபைட்டர்களும் ஏத்துகிட்டு அனுபவிச்சுட்டு வரும்போது நீங்க மட்டும் அந்த சலுகையை 'வேண்டாம்'னு சொல்லிட்டு இப்படி உங்க கைக்காசைப் போட்டு டிக்கெட் வாங்கி அசௌகரியமா பயணம் பண்றது சரியில்லை."

பெரியவர் புன்னகைத்தார்.

"அது முடிஞ்சு போன விவகாரம். கவர்ன்மெண்ட் பிரியப்பட்டு சலுகையைக் கொடுத்தாங்க. எனக்கு அதை ஏத்துக்கப் பிரியமில்லை. வேண்டாம்னு சொல்லிட்டேன்..."

"அய்யா... நான் என்ன சொல்ல வர்றேன்னா..?"

பெரியவர் கையமர்த்தினார். "டி.டி.ஈ. தம்பி! நீங்க உங்க ட்யூட்டியைப் பாருங்க... எனக்கு பெர்த் கன்ஃபர்மானா குடுங்க... இல்லேன்னா வேண்டாம்... கீழே துண்டை விரிச்சு படுத்தா போதும். கண்ணை முழிச்சு பார்க்கும்போது சென்ட்ரல் வந்திருக்கும்"

பூ பூக்கும் ஓசை

டி.டி.ஈ. மேற்கொண்டு பேசாமல் நகர்ந்துவிட, நான் அந்தப் பெரியவரையே இமை கொட்டாமல் பார்த்தேன். அவர் தன் கையோடு கொண்டு வந்திருந்த பழைய தோல் பையைப் பிரித்து ஈரத்துணியால் மடித்து வைத்திருந்த வெற்றிலையை எடுத்துக் கொண்டிருந்தார்.

நான் "அய்யா" என்று குரல் கொடுத்தேன்.

அவர் நிமிர்ந்தார்.

"என்ன தம்பி...?"

"நீங்க ஒரு ஃப்ரீடம் ஃபைட்டரா?"

"டி.டி.ஈ எங்கிட்ட பேசினதை கேட்டுட்டீங்க போலிருக்கு!". அவர் சிரித்துக் கொண்டே டப்பியில் இருந்த சுண்ணாம்பைக்



ராஜேஷ்குமார்

கொஞ்சமாய்க் கிள்ளி எடுத்து வெற்றிலையின் முதுகுக்குத் தடவ ஆரம்பித்தார்.

"அய்யா! உங்க பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?"

"'தம்பு நாயுடு'ன்னு சொல்வாங்க..."

"அய்யா! என் பெயர் நிலாப்ரியன். மெட்ராஸ்லயிருந்து வர்ற ஒரு பத்திரிகைக்கு உதவி யாசிரியரா இருக்கேன். சொந்த ஊர் கோயமுத்தூர். மாசத்துக்கு ஒருதடவை வந்து அப்பா, அம்மாவைப் பார்த்துட்டுப் போவேன்."

வெற்றிலையில் ஒரு பாக்கு பொட்டலத்தைக் கொட்டி அதை நிதானமாய் மடித்து வாய்க்குள் திணித்துக் கொண்டவர் கேட்டார்.

"எந்த பத்திரிகைக்கு நீங்க உதவியாசிரியரா இருக்கீங்க...?"

"சாட்டை"

"ஓ....! அரசியல் வாரப் பத்திரிகையா?"

"ஆமாங்கய்யா... தற்சமயம் நாட்ல நடந்துட்டிருக்கிற அரசியல் அவலங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வர்றதுதான் எங்க பத்திரிகையோட நோக்கம்..."

"நல்ல நோக்கம்தான்..."

"அய்யா...! பதவிக்கு வர்றவங்க யாராயிருந்தாலும் சரி, வந்த கொஞ்ச நாட்களிலேயே அரசாங்க பணத்தை கோடிக்கணக்கா சுருட்டி வெளிநாட்டு பாங்க்களில் போட்டுக் கொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில் ஒரு ஃப்ரீடம் ஃபைட்டரான நீங்க உங்களுக்கு அரசாங்கம் கொடுத்த இலவச முதல் வகுப்பு டிக்கெட் சலுகையையும் வேண்டான்னு சொல்லியிருக்கீங்க. என்ன காரணத்துக்காக அந்தச் சலுகையை வேண்டாம்ன்னு சொன்னீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

பெரியவர் தாம்பூல வாயோடு அண்ணாந்து சிரித்தார். "தம்பி! இதுமாதிரியான சலுகைகளெல்லாம் எங்களுக்கு கிடைக்கும்ன்னு நினைச்சுக்கிட்டா நாங்க சுதந்திரத்துக்காகப் போராடினோம்...? அந்நியன் பிடியில் இருக்கிற நாடு விடுபடணுங்கிறதுக்காக கைக்காசை செலவு பண்ணி போராடியவங்க நாங்க... நான் அந்தக் காலத்து பி.ஏ. பி.ஏ. படிச்சு பாஸ் பண்ணினதுமே எனக்கு நல்லவேலை தர்றதா சொல்லி வெள்ளைக்காரனே என் வீட்டுக்கு வந்துட்டான். இருநூத்தி ஐம்பது ரூபாய் சம்பளம் தர்றதா சொன்னான். அந்தக் காலத்துல ஒருத்தன் நூறு ரூபாய் சம்பளம் வாங்கினாலே அது பெரிய சம்பளம்..."

"நீங்க அந்த வேலையை ஏத்துக்கிட்டீங்களா?"

"இல்லை..."

"ஏன்...?"

"நான் சுதந்தரப் போராட்டங்களில் கலந்துக்கக்கூடாதுங்கிற காரணத்துக்காக, எனக்கு வேலையை லஞ்சமா கொடுக்க முன் வந்தான் வெள்ளைக்காரன். என்னோட அப்பாகூட, அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை வாங்கிக்கடா'ன்னு சொன்னார். நான் வாங்கி அந்த ஆர்டரை ரெண்டா கிழிச்சு வெள்ளைக்காரன் கோட் பாக்கெட்ல போட்டு அனுப்பிட்டேன்... அவ்வளவு துணிச்சலாய் அந்தக் காரியத்தை பண்ணினதுக்கு காரணம் என் நெஞ்சுக்குள்ளே எரிஞ்சுக்கிட்டிருந்த சுதந்தரத் தீ..."

நான் பிரமிப்போடு அவரைப் பார்த்துக் கொண்டிருக்க, அவர் தொடர்ந்தார்.

"இன்னிக்கு இருக்கிற அரசாங்கம் என்னை மாதிரியான ஃப்ரீடம் ஃபைட்டர்களுக்கு தாமிர பட்டயம், பணமுடிப்பு, இலவச ரயில் பாஸ்னு ஏதேதோ தர்றாங்க... சந்தோஷம் தான். மத்த ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ் வாங் கிக்கறாங்க... ஆனா எனக்கு வாங்கிக்க இஷ்டமில்லை..."

"காரணம்...?"

"சொன்னா... தப்பா நினைக்கக்கூடாது தம்பி..."

"இல்லீங்கய்யா சொல்லுங்க..."

"எங்களுக்கு விருது தரக்கூடிய யோக்யதை இலவச சலுகைகளை அறிவிக்கிற தகுதி இன்னிக்கு நாட்டில் இருக்கிற எந்த அமைச்சருக்கும் கிடையாது. சொத்து சேர்க்காத அமைச்சர், லஞ்சம் வாங்காத அதிகாரி, இந்த நாடு பூரா தேடினாலும் கிடைக்காது. அப்படி யாராவது ஒருத்தர் இருந்தா சொல்லுங்க... அவங்க கையால விருது வாங்கிக்கறேன்."

நான் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு கேட்டேன். "அய்யா! இந்த லஞ்ச ஊழலை ஒழிக்க முடியும்ன்னு நீங்க நினைக்கறீங்களா...?"

"ஏன் முடியாது... தம்பி! இந்த உலகத்துல முடியாதது எதுவுமில்லை. லஞ்ச ஊழலை ஒழிக்க வழி இருக்கு..."

"அய்யா! நான் மறுத்து பேசறேன்னு நினைக்க வேண்டாம். லஞ்சம்ங்கிற வார்த்தை இன்னிக்கு எல்லா மக்களோட ரத்த ஓட்டத்தில் கலந்துட்ட ஒரு வார்த்தை. பத்து ரூபா கொடுக்க வேண்டிய இடத்தில் இருபது ரூபாயைக் கொடுத்தா காரியம் நடக்கும் என்கிற மனோபாவம் எல்லா மக்களுக்கும் வந்து விட்டது. நாட்டை யார் ஆட்சி செய்தாலும் சரி. எப்படியும் ஊழல் பண்ணத்தான் போறாங்க... அப்படி பண்ணினாலும் தப்பில்லை என்கிற எண்ணம் மக்கள் மத்தியில் உருவாகிவிட்டது. இன்னும் ஒரு படி மேலே போய் சொல்வதாக இருந்தால் லஞ்சம் வாங்காத ஒரு மந்திரியை, ஒரு அதிகாரியை 'பொழைக்கத் தெரியாத ஆள்' என்று மக்களே சொல்கிறார்கள்."

"அதை அவங்க மனப்பூர்வமா சொல்றதில்லை தம்பி. மிதமாகிப் போன விரக்தியில் வெளிப்பட்ற வார்த்தைகள் அது. அங்கிகாரம் கொடுத்துட்டதா நினைக்காதீங்க..."

"அய்யா... லஞ்சத்தை ஒழிக்க ஏதோ ஒரு வழியிருக்குன்னு சொன்னீங்களே...?"

"ஆமா..."

"என்ன வழி...?"

"மனக்கட்டுப்பாட்டு வழி..."


"புரியலையே..."

"காரியத்தை. சாதித்துக் கொள்ள நான் யார்க்கும் லஞ்சம் தர மாட்டேன் என்கிற உறுதி மக்களுக்கும், லஞ்சத்தை வாங்காமத் தான் நான் காரியம் பண்ணுவேன் என்கிற உறுதி அரசாங்க ஆசாமிகளுக்கும் இருந்துட்டா... லஞ்சலாவண்யம் எப்படி வளரும்...?"

நான் புன்னகைத்தேன்.

"அய்யா! அது சாத்தியமா...?"

"ஏன் சாத்தியமாகாது...? ஒவ்வொருத்தரும் இதை தீவிரமா நினைக்க ஆரம்பிச்சுட்டா சாத்தியம்தான். ஒரு புரட்சி எப்படி உண்டாகுது...? மொதல்ல ஒரு தனி மனிதனின் மனசிலிருந்துதான் அந்தப் புரட்சிப் பூ பூக்க ஆரம்பிக்குது.



"தலைவரே! குடும்ப அரசியலை எதிர்த்து போராட்டம் பண்ணப் போறீங்களாமே..."

"ஆமாய்யா! போராட்டம் பண்ணத்தான் போறோம். நான் சென்னையிலே, என் தம்பி திருச்சியிலே, என் மகன் மதுரையிலே, என் மருமகன் சேலத்துல!"

— எஸ்.எஸ். பூங்கதிர்

நாளாக நாளாக பூக்கிற பூக்களின் சத்தம் ஒரு பேரிச்சலாய் கேட்க ஆரம்பிக்குது..."

"அய்யா...! அது வந்து இந்தியாவில் சாத்தியம் கிடையாது."

"சாத்தியம்தான் தம்பி...! என்னிக்காவது ஒருநாள் அந்த நிகழ்ச்சி நடக்கும். அந்த அற்புதத்தைப் பார்க்க நான் உயிரோடு இல்லாமே போனாலும் நீங்க இருப்பீங்க! பார்ப்பீங்க..."

கம்பார்ட்மெண்டில் இருந்த மற்றவர்கள் பெர்த்களில் ஏறிப்படுத்து தூங்குவதற்காக முயற்சிகளை மேற்கொள்ள பெரியவர் பேச்சை முடித்துக் கொண்டு சீட்டுக்கு சாய்ந்தார்.

சென்னை கோரட் நிற வெளிச்சத்தில் விடிந்து கொண்டிருக்க, நீலகிரி எக்ஸ்பிரஸ் ஐந்தாவது பிளாட்பாரத்திற்குள் நுழைந்து தன் இயக்கங்களை சின்னச் சின்ன சப்தங்களோடு நிறுத்திக் கொண்டது.

பெரியவர் தன் தோல் பையை எடுத்துக் கொண்டு கிளம்ப ஆயத்தமானார்.

"தம்பி... நான் வரட்டுமா...?"

நான் கைகளைக் குவித்தேன். "உங்களை மாதிரியான அந்தக் காலத்து சுதந்தர போராட்ட வீரர் ஒருத்தரைப் பார்த்துப் பேசியதுல எனக்கு ரொம்பவும் சந்தோஷம்..."

பெரியவர் என் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு புன்னகையோடு விடை பெற்றுக் கொண்டு பிளாட்பாரத்தில் இறங்கி நடந்தார்.

நானும் என்னுடைய சூட்கேஸை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி நடக்க முயன்ற விநாடி-

அந்தப் பேச்சுக்குரல் கேட்டது.

"எனக்கு அந்த வேலை வேண்டாப்பா..."

திரும்பிப் பார்த்தேன்.

என்னுடைய கம்பார்ட்மெண்டில் அப்பர் பெர்த்தில் படுத்து பயணம் செய்த அந்த இளைஞன் நடுத்தர வயது நபர் ஒருவரிடம் தீர்மானமான குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"அப்பா...! அம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்தாத்தான் அந்த வேலை கிடைக்கும்னா அது எப்பேர்ப்பட்ட வேலையாக இருந்தாலும் எனக்கு வேண்டாம்..."

"என்னடா இப்படி சொல்றே...? நான் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டுத் தான்டா உனக்கு தந்தி கொடுத்தேன். நீயும் புறப்பட்டு வந்து இப்போ ரயிலை விட்டு இறங்கி இறங்காததுமா இப்படிச் சொன்னா என்னடா அர்த்தம்?"

"அப்பா...! லஞ்சம் வாங்கறது மட்டும் தப்பில்லை. கொடுக்கறதும் தப்புதான். என்னோட திறமைக்கேத்த வேலை எப்போ கிடைக்குமோ அப்போ கிடைக்கட்டும். அதுவரைக்கும் காத்திட்டிருக்க நான் தயார்..."

அந்த இளைஞன் பேசப் பேச எனக்குள் ஒரு இன்பப் பிரளயம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

தூரத்தில் - கக்கத்தில் தோல் பையோடு தளர்வாய் நடந்து கொண்டிருக்கும் அந்த சுதந்தரப் போராட்ட கால பெரியவரை பார்த்தேன்.

"அய்யா! ஒரு பூ பூத்த சத்தத்தைக் கேட்டு விட்டேன்" என்று பலமாய் கத்த வேண்டும் போல் தோன்றிய உணர்வை, கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

வலம்புரி ஜான்

வெளிச்சத்தின் விலாசம் – 5

கனவுகளின் காவலன்

யாக்கோபுவிற்கு வயதாகிக் கொண்டே வந்தது. அப்போது அவரது எல்லாப் பிள்ளைகளிலும் சின்னவனாக இருந்த யோசேப்பின் மீது அவர் தமது உயிரையே வைத்திருந்தார். நேர்த்தியான பல வர்ண ஆடைகளைப் பின்னுவதும், அவற்றைத் தமது சின்ன மகனுக்கு அணிவித்து, அவன் பட்டுப் பூச்சியைப் போலப் பறந்து திரிவது அவனது சகோதரர்களின் கண்களை உறுத்தியது. யோசேப்பைப் பார்த்தாலே அவர்களுக்கு எரிந்தது.


ஒருநாள் சகோதரர்கள் எல்லோரும் ஆடுகளை மேய்க்கப் போனார்கள். அப்போது மனத்தில் மாசில்லாத யோசேப்பு தான் கண்ட கனவொன்றை அவர்களுக்கு விவரித்தான். "நிமிர்ந்து நின்ற எனது தானியக் கட்டை உங்களது தானியக் கட்டுகள் எல்லாம் விழுந்து வணங்கின" என்றான். "நீ எங்கள் மீது ஆட்சி அதிகாரம் செய்வாயோ?" என்று அவனை நக்கலாகக் கேட்டார்கள். அவர்களது கோப நெருப்பில் நெய் வார்ப்பது போல வேறொரு நாள் யோசேப்பு மற்றுமொரு கனவினை வெளிப்படுத்தினான். "சூரிய சந்திரர் மற்றும் பதினோரு நட்சத்திரங்கள் என்னை வணங்குவதாகக் கண்டேன்" என்றான். செயற்கைப் பூச்சு சிறிதும் இல்லாத யோசேப்பின் சத்திய வார்த்தைகள் அவனது தந்தையான யாக்கோபுவிற்கே சங்கடத்தை உண்டாக்கின.

சில நாட்களுக்குப் பிறகு ஆடுகளுக்கு மேய்ச்சல் நிலங்களைத் தேடி செச்செம் என்கிற இடத்திற்குப் போன சகோதரர்களைப் பார்த்து வருவதற்காக யாக்கோபு, யோசேப்பை அனுப்பினார். தோத்தான், என்கிற இடத்தை அவன் நெருங்கி வருவதைப் பார்த்த அவனது சகோதரர்கள், "அதோ வருகிறான் கனாக்காரன்; இவனைக் கொன்று போட இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது" என்று பேசிக் கொண்டார்கள். மூத்தவனான ரூபன் மாத்திரம் "அவன் நமது இரத்தத்தின் இரத்தமாகவும், சதையின் சதையாகவும் இருக்கிறான்; ஆகவே அவனைக் கொன்று போடாமல் ஒரு குழியில் விட்டு விடலாம்" என்றான்.

அப்படியே யோசேப்பு வந்ததும், தங்கள் கண்களை உறுத்தி வந்த அவனது பல வர்ண உடைகளை அவனது சகோதரர்கள் நார் நாராகக் கிழித்து அவனை ஒரு பாழும் குழிக்குள்ளே இறக்கி விட்டார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். ரூபன் அப்போது அவர்களோடு இருக்கவில்லை.

சாயங்காலம் ஆனபோது இஸ்மவேலர்கள் எனப்பட்ட வியாபாரிகள் தங்கள் ஒட்டகங்களோடு அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். எகிப்து தேசத்திற்குப் பயணமான அவர்களிடம் இவன் குழியில் கிடப்பதால் நமக்கென்ன ஆதாயம் என்று இருபது வெள்ளி நாணயங்களை வாங்கிக் கொண்டு யோசேப்பை விற்று விட்டார்கள். ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தில் யோசேப்பின் கிழிக்கப்பட்ட ஆடையைத் தோய்த்து யாக்கோபுவிடம் அவர்கள் எடுத்துப் போனார்கள். காட்டு விலங்கு ஒன்றிடம் அகப்பட்டு தங்களது தம்பி மரண





மடைய நேரிட்டது என்று தந்தை யாரிடம் சொல்லி விட்டார்கள். யாக்கோபுவோ, இவர்கள் சொன்னதை நம்பி, உண்மை யாகவே தன் மகன் இறந்துதான் போனான் என்று நினைத்து அழுது புரண்டார். அவரது துக்கத்திற்கு அளவே இல்லாமல் போயிற்று. அவரது குடும்பத்தார் ஒருவரும் அவரைத் தேற்ற முடியாமல் போனது.

எகிப்து தேசத்திற்குக் கொண்டு வரப்பட்ட யோசேப்பை இஸ்மவேலர்களிடமிருந்து அந்த நாட்டின் அரசனான பாரவோனின் தளகர்த்தன் போத்திப்பார் விலைக்கு வாங்கினான். யோசேப்பு தனது இல்லத்திற்குள் வந்ததிலிருந்து போத்திப்பாரின் விளைச்சல் அதிகமானது; அவனது வீடும் மகிழ்ச்சியாலும், மனநிம்மதியாலும் நிறைந்தது. ஆகவே போத்திப்பார் தனது வீட்டு நிர்வாகத்தையே யோசேப்பின் வசம் ஒப்படைத்தான்; அவனும் கவலையற்று இருந்தான். தனிமையில் விடப்பட்ட போத்திப்பாரின் மனைவிக்கு தேவதூதனைப் போல அழகு படைத்த யோசேப்பின் மீது ஆசை உண்டானது. தனது தாகத்தைத் தணிவிக்கிற தண்ணீர்ப் பந்தலாக யோசேப்பு இருக்க வேண்டும் என்று அவள் அவனிடம் வெட்கத்தை விட்டுக் கேட்டாள். ஆண்டவருக்கு அச்சப்பட்ட





யோசேப்போ 'என்னை நம்பிய எஜமானனுக்கு நான் எப்போதும் துரோகம் செய்ய மாட்டேன்' என்று அவளது கோரிக்கையை நிராகரித்தான். தனது ஆசை நிறைவேறாமல் போகவே, போத்திப்பாரின் மனைவி, யோசேப்பு தனிமையில் இருந்த தன்னிடம் தவறாக நடக்க முயற்சித்தான் என்று கணவனிடம் முறையிட்டாள். ஆத்திரத்தில் அறிவிழந்த போத்திப்பார், யோசேப்பைச் சிறையில் அடைத்தான்.

ஆண்டவருடைய அருள் யோசேப்போடு இருந்ததால் சிறையில் கூட அவன் சிம்மாசனாதிபதி போலவே நடத்தப்பட்டான். யோசேப்பு சிறைச்சாலையின் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

அதே சிறையில், பாரவோன் அரசனின் பரிசாரகனும், ரொட்டி சுடுகிறவனும் அவரவர்கள் தவறுகளுக்காகத் தண்டனை பெற்று அதே சிறைக்கு வந்தார்கள். ஒருநாள் காலை இந்த இருவருமே கவலைதோய்ந்த முகத்துடன் காணப்பட்டார்கள். காரணம், பரிசாரகன், ரொட்டி சுடுகிறவன் இருவரும் கண்ட கனவுகளுக்கு அவர்களுக்கு அர்த்தம் விளங்கவில்லை. கனவுகளுக்குப் பலன் சொல்லுகிற கலை கைவரப் பெற்ற யோசேப்பு அவர்களின் கனவுகளைக் கேட்டறிந்தான். பரிசாரகன் கண்ட கனவில் ஒரு திராட்சைச் செடியில் மூன்று கொடிகள். இவன் திராட்சைப் பழங்களைப் பாத்திரத்தில் பிழிந்து அரசனுக்குத் தருகிறான். யோசேப்பு ஒரு நிமிடம் கூடத் தாமதியாமல், "மூன்று நாட்களுக்குள் நீ விடுதலை ஆவாய்; மீண்டும் பரிசாரகன் ஆகி பாரவோனுடைய கிண்ணத்தைத் திராட்சை ரசத்தால் நிரப்புவாய்" என்றான்.

ரொட்டி சுடுகிறவனுடைய கனவோ முற்றிலும் வேறு மாதிரி இருந்தது. "என் தலையின் மீது அழுக்குக் கூடைகளில் ரொட்டித் துண்டுகள் இருந்தன. எங்கிருந்தோ வந்த பறவைகள் அவற்றையெல்லாம் துண்டு துணுக்கு இல்லாமல் தின்று தீர்த்து விட்டன" என்றான். அதற்கு யோசேப்பு வருத்தத்தோடு "இன்னமும் மூன்று நாட்களில் பாரவோன் உன் உயிரைப் போக்கி விடுவான்" என்று சொன்னான்.

மூன்று தினங்களுக்குப் பிறகு பாரவோன் அரசனின் பிறந்த நாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. யோசேப்பு சொன்னபடியே பரிசாரகன் விடுவிக்கப்பட்டு வேலையில் சேர்க்கப்பட்டான். ரொட்டி சுடுகிறவனோ தூக்கில் தொங்கினான். பரிகாரகனுக்கு வாழ்க்கை மகிழ்ச்சியாகக் கழிந்தது. அவனது சந்தோஷத்தில், விடுவிக்கப்பட்டுவிட்டால் உனது விடுதலைக்கும் உதவுவேன் என்று யோசேப்பிற்கு அவன் முன்னர் கொடுத்திருந்த வாக்குறுதியை மறந்தான். இரண்டு வருடங்கள் கழிந்தன.

ஒருநாள் பாரவோன் அரசன் இரண்டு கனவுகளைக் கண்டான். ஒரு கனவில், நைல் நதியின் அருகில் மேய்ந்து கொண்டிருந்த ஏழு செழிப்பான பசு மாடுகளை எலும்பும் தோலுமாக வந்த வேறு ஏழு பசு மாடுகள் தின்று தீர்த்து விட்டன. இரண்டாவது கனவில், ஒரு சோளச் செடியின் தண்டில் பருத்த ஏழு தானியக் கொத்துகள் தெரிந்தன. சிறிது நேரத்தில் காற்றால் அலைக்கழிக்கப்பட்டு ஏறத்தாழ சாவியாகிப் போன வேறு ஏழு தானியக் கதிர்கள் எழுந்து, முன்னர் விளைந்த தானியக் கொத்துக்களை விழுங்கி விட்டன.

அதிகாலையில் மிகுந்த கவலைக்கும், கலவரத்திற்கும் உள்ளான பாரவோன் அவனது எல்லைக்கு உட்பட்ட ஞானிகளுக்கும், மந்திரவாதிகளுக்கும் ஆட்களை அனுப்பினான். ஒருவராலும் அவனது கனவுகளுக்கான அர்த்தத்தை எடுத்துச் சொல்ல இயலவில்லை. அப்போதுதான் பரிகாரகனுக்கு யோசேப்பின் நினைவே வந்தது. கனவுகளுக்குப் பலன் சொல்லுவதில் யோசேப்பு நிகரில்லாத ஞானம் உடையவன் என்பதைப் பரிகாரகன் பாரவோன் மன்னனுக்கு எடுத்துச் சொன்னான். உடனே மன்னனும் யோசேப்பை விடுவித்தான்.

அரசனுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட யோசேப்பு பாரவோனின் கனவுகளைக் கவனமாகக் கேட்டறிந்தான். பிறகு "அர்த்தம் சொல்லுவது நான் அல்ல; ஆண்டவர்" என்று சொல்லி விட்டு ஏழு ஆண்டுகள் அபரிமிதமான விளைச்சல் உண்டாகும். அதற்குப் பிறகு வருகிற ஏழு ஆண்டுகள் கற்பனை செய்ய முடியாத பஞ்சம் உண்டாகும்; ஆகவே விளைச்சல் அதிகமான ஆண்டுகளில் பஞ்ச காலத்திற்கு உதவும்படியாகச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்

அருள்வாக்கு

இன்றைக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கும் வேத பாடசாலைகள் மூடிப் போகாதபடியும், இவற்றில் மேலும் வித்யார்த்திகள் சேருமாறும் பண்ண வேண்டும். வித்யார்த்திகளுக்கும் அத்யக்ஷகர் (வாத்தியார்)களுக்கும் கணிசமான திரவிய சகாயம் பண்ணினால்தான் இந்தக் காரியம் நடக்கும். பிராம்மணனுக்கு ரொம்பவும் ஜாஸ்தியாக லௌகிக சௌகரியங்களையும், தன வஸதியையும் தரக்கூடாதுதான் என்றாலும், நல்ல ஸம்பாத்தியம் தரக்கூடிய பல தொழில்கள் அவர்களை வசீகரிக்கிற தற்காலத்தில்,

என்றும் கூறினான். பாரவோனின் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. "இனி சிம்மாசனத்தில் உட்காருவதுதான் எனது வேலை; மக்களை ஆண்டு நடத்திப் பரிபாலனம் செய்ய வேண்டியது உனது வேலை" என்று அறிவித்த பாரவோன் மன்னன், யோசேப்பிற்குத் தனது ராஜ மோதிரத்தையும், அரசச் சங்கிலியையும் அணிவித்தான். எகிப்திய குருக்களின் மகளான எசனாத் என்கிறவளை யோசேப்பிற்கு மனைவியாக்கி வைத்தான்.

யோசேப்பு சொன்னபடியே செழிப்பான ஏழு ஆண்டுகளும், பிறகு வறுமையே வருடங்களானது போல ஏழு ஆண்டுகளும் வந்தன. உணவு தானியத்தைச் சேமித்து வைத்திருந்த எகிப்திற்கே மூச்சு விடுவதற்கு முயற்சி தேவைப்பட்டது. பிறகு அக்கம் பக்கத்து நாடுகளைக் கேட்கவும் வேண்டுமா? கானான் தேசத்திலும் ஒற்றைப் புல் கூட காணப்படவில்லை. ஓங்கிய மரங்கள் அடுப்புச் கள்ளிகளாக அடங்கி ஒடுங்கின. ஒட்டகங்கள் உலர்ந்து போகத் தொடங்கின. யாக்கோபு தமது மக்களை அழைத்து, "எகிப்திலே தானியம் கிடைப்பதாகக் கேள்விப்பட்டேன்; ஆகவே உடனே சென்று நாம் உயிர் பிழைத்திருக்கும் படியாக தானியம் வாங்கி வாருங்கள்" என்றார்.

யாக்கோபுவின் மக்களும் பயணமாகி எகிப்திற்கு வந்தார்கள். அதிபதியாக அரியணையில் வீற்றிருந்த யோசேப்பை அவரது சகோதரர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் யோசேப்பு அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே கண்டுகொண்டார். ஆனாலும் தனது உணர்ச்சி அலைகளை அவர் உள் வாங்கிக் கொண்டார். தமது முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, "நீங்கள் அனைவரும் ஒற்றர்கள்; எங்கள் எகிப்து தேசத்தைப் பற்றி அறிந்து போவதற்காக அனுப்பப்பட்டவர்கள்" என்றார் யோசேப்பு. அவரை அறிந்து கொள்ளாத அவரது சகோதரர்களோ "எஜமானனே! நாங்கள் உங்கள் அடிமைகள்; கானான் தேசத்திலிருந்து தானியம் வாங்குவதற்காகவே இவ்விடம் வந்தோம்; எங்களது வயதான தந்தையார் உணவுப் பொருளோடு எப்போது திரும்பி வருவோம் என்று அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்; எங்கள் சின்னத் தம்பியான பெஞ்சமின் அவரோடு இருக்கிறான்" என்றார்கள். தனது தந்தையாரைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டதும் யோசேப்பிற்கு 'ஓ'வென்று அழுதுவிட வேண்டும் போலிருந்தது. இருந்தாலும் அவர் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தமக்குப் பின்னும் ஒரு தம்பி பிறந்திருக்கிறான் என்று அவர்கள் சொன்னதும் அவரது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.

இருந்தாலும் யோசேப்பு, செயற்கையான ஒரு முகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு தனது சகோதரர்களைப் பார்த்து, "உங்களுக்கு இன்னமும் ஒரு தம்பி இருப்பதாகச் சொல்லுவதை நான் நம்பவில்லை; நீங்கள் ஒற்றர்களேதான். நீங்கள் சொல்லுவது உண்மையாக இருந்தால், அடுத்த முறை வரும்போது அந்தத் தம்பியை என்னிடம் அழைத்து வாருங்கள். அதுவரைக்கும் உங்கள் சகோதரர்களிலே ஒருவன் என்னிடம் பணயமாக இருக்கட்டும்" என்றார். அவர்களோ, ஒரு சகோதரரை விட்டு விட்டு தானியங்களைச் சேகரித்துக் கொண்டு புறப்பட்டுப் போனார்கள்.

வழியில் ஒரு சத்திரத்தில் அவர்கள் இளைப்பாறினார்கள். ஒரு சகோதரர் அவரது தானிய மூட்டையை அவிழ்த்துப் பார்த்தார். அவரது கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. ஏற்கெனவே எகிப்தில் தானியத்திற்காகக் கொடுக்கப்பட்ட பணம் அப்படியே அந்த மூட்டையில் இருந்தது. ஒவ்வொருவரும் அவரவர்கள் மூட்டைகளை அவிழ்த்துப்



சிலராவது இப்படிப் பூரணமாக வேதத்தைக் கற்றுக்கொண்டு பிற்பாடு சொல்லிக் கொடுப்பது என்ற பிராம்மண ஸ்வதர்மத்தையே செய்ய வேண்டுமானால், அப்படிப்பட்டவர்கள் "இல்லை" என்று அழாத அளவுக்கு அவர்களுக்கு, வஸதி பண்ணித் தரத்தான் வேண்டும். ஆதியில் இல்லாத அநேக புதுப்புது சௌகரியங்களும், சுகசாதனங்களும் வந்துவிட்ட இந்த நாளில், சிலரை மட்டும் பரம வைராகிகளாக இருந்து கொண்டு ஸ்வதர்மத்தைப் பண்ணுங்கள் என்று சொன்னால், வேதரக்ஷணம் என்பது நின்றே போய்விட வேண்டியதுதான். அதனால் வேதத்துக்கே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்படியாகச் சிலரைப் பண்ணும் போது, அவர்களுக்கு நாம் நன்றாக சம்மானம் செய்து, திரவிய சகாயம் நிறையக் கொடுக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு 'லக்ஸரி' கூடாதாயினும், மற்றத் தொழில்கள் அவர்களை இழுத்துக் கொள்ளாத அளவுக்கு ஸௌகர்யம் பண்ணித் தரத்தான் வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



"என் பேச்சை கேட்கறதுக்கு மட்டும் எப்படிய்யா இவ்வளவு கும்பல் வருது?"

"பின்னே, தண்ணியடிச்சுட்டு கண்டபடி உளறினா? தமாஷா இருக்குதுல்ல...!"

- எஸ். எஸ். பூங்கதிர்

பார்த்தார்கள். அவரவர்கள் கொடுத்த பணம் அவரவர் மூட்டைக்குள் இருந்தது. இதெல்லாம் யோசேப்பின் ஏற்பாடு என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

யாக்கோபு தனது மக்கள் தானிய மூட்டைகளோடு திரும்பி வந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து தேவனைத் தோத்தரித்தார். கொஞ்ச நாளில் தானியம் தீர்ந்து போகவே, மீண்டும் அவர்கள் எகிப்திற்குப் புறப்படும்படியாக ஆயிற்று. 'அவர்கள் அனைவரும் யாக்கோபுவிடம் பெஞ்சமினை அழைத்துச் செல்லாமல் எகிப்திய அதிபரைப் பார்க்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர். யாக்கோபு முதலில் அழுதார்;' அரற்றினார். இறுதியில் வேறு வழியில்லாமல் பெஞ்சமினை அவர்களோடு போய் வர அனுமதித்தார். சகோதரர்கள் எல்லோரும் பயத்தில் மூட்டைக்கு இரண்டு மடங்கு பணம் எடுத்துச் சென்றார்கள்.

மீண்டும் தானியங்களைச் சாக்கு மூட்டைகளில் நிரப்பிக் கொண்டு அந்தச் சகோதரர்கள் கானான் தேசத்திற்குத் திரும்பலானார்கள். வழியில் அவர்கள் எதிர்பாராதவிதமாக யோசேப்பின் பானப்பாத்திரம் ஒன்றைக் காணவில்லை என்று அவர்கள் வழிமறிக்கப் பட்டார்கள். யோசேப்பின் பரிவாரங்கள் ஒவ்வொரு மூட்டையாகச் சோதனையிட்ட போது பெஞ்சமினின் மூட்டையில் அந்தப் பாத்திரம் இருப்பதை அனைவருமே கண்டார்கள். "பெஞ்சமினை விட முடியாது; அவன் எனது அடிமையாக இருக்கட்டும்" என்று உத்தரவிட்டார் யோசேப்பு. தனது உடன் பிறந்த தம்பியான பெஞ்சமினைப் பிரிவதற்கு மனமில்லாமல் யோசேப்பு செய்த ஏற்பாடு தான் இந்த பானப்பாத்திரம் என்பதை அவர்கள் அப்போதும் அறிந்திருக்கவில்லை. "பெஞ்சமினை எங்கள் தந்தையிடம் ஒப்படைக்காவிட்டால், அவர் ஒரு நிமிடமும் உயிர்த்தரித்திருக்க மாட்டார்" என்று சகோதரர்கள் குறிப்பிட்டார்கள்.

யோசேப்பு மீண்டும் அவரது தந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் விரைவாகத் தனிமையான இடத்திற்குச் சென்று தனது தாய், தந்தையர், சகோதரர்கள் எல்லோரையும் நினைத்து குமுறிக் குமுறிக் கதறினார்.

பிறகு இந்த நாடகத்தை இவ்விதமாக நடத்தியது போதும் என்கிற முடிவிற்கு வந்தவராக யோசேப்பு தமது சகோதரர்களை விருந்துக்கு அழைத்தார். அவர்களோ தங்கள் உயிருக்கே ஆபத்து வந்து விட்டது என்று நினைத்து அழுதார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பும், விருந்துபசாரமும் ஆச்சரியத்தை உண்டாக்கின. விருந்தின் மத்தியில் வேதனையோடும், விசும்பலோடும் யோசேப்பு தான் யார் என்பதைத் தெளிவுபடுத்தினார். அந்தச் சகோதரர்கள் அச்சடித்த பதுமைகளைப் போல யோசேப்பு சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். வெயிலடிக்கிறபோதே மழை விழுவதைப் போல பல்வேறு உணர்ச்சிகள் அவர்களைப் பங்கு வைத்தன. அவர்கள் தங்களின் பாவச் செயலுக்காக வெட்கப்பட்டார்கள். யோசேப்பின் இதயம் இலை வடிவம் அல்ல; மலை வடிவம் என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள்.

பிறகு பாரவோன் மன்னனின் கட்டளைப் படியே விருத்தாப்பியரான யாக்கோபுவும் அவரது மனைவி மக்களும், பிராணிகளும் எகிப்திற்கு வந்து சேர்ந்தார்கள். யாக்கோபுவும், யோசேப்பும் சந்தித்துக் கொண்டது கடலும் நதியும் கைகுலுக்கிக் கொண்டது போல இருந்தது. எகிப்தில் நேர்த்தியான விளைநிலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு யாக்கோபு எகிப்திலேயே மரித்தார். அவரது விருப்பத்தின்படியே அவரது உடம்பு பக்குவப்படுத்தப்பட்டு கானான் தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நிறைவான பிராயத்தில் எப்போதும் கனவுகளால் நிறைந்த தமது கண்களை யோசேப்பு மூடினார். "கட்டிடத்திற்கு ஆகாதென்று தள்ளப்பட்ட மூலைக்கல்லே, கட்டிடத்திற்கு முதற் கல்லாயிற்று என்கிற 'வேதவசனம் இப்படியாக நிறைவேறியது.

(வளரும்)

எங்கள் குமுறலை எங்கே சொல்ல?



• சிவபார்வதி

விளம்பரத்தால் வயிறு நிறையுமா?

●● தமிழ்நாடு அரசு உணவு வழங்கு துறை "பொன்னைப் போல் கோதுமை, உங்கள் பொன்னான வாழ்வுக்கு" என்று அழகான முறையில் எல்லாப் பத்திரிக்கைகளிலும் விளம்பரம் செய்கிறது. ஆனால் ரேஷன் கடைக்குப் போனால், "கோதுமை வரவில்லை", அல்லது "தீர்ந்து போய்விட்டது" கதைதான்! நியாய விலை என்பதாக அரசு, "மைதா 6.50; ரவை 6.50; ஆட்டா 5.50" என்று விளம்பரம் செய்கிறது. வாங்கப் போனால் "வரவில்லையே, நாங்கள் என்ன செய்வது?" என்று கை விரிக்கிறார்கள்.

பந்தியில் முந்திக் கொள்ளத் தவறினாலும் அடுத்த பந்தியில் இடம் கிடைக்கும், கல்யாண வீட்டில். ரேஷன் கடைகளில் பொருள்கள் வாங்க முந்தி, அடிதடியில் தப்பினாலும் நம் முறை வருமுன் "ஸ்டாக் தீர்ந்து விடுகிறது" வேதனைதான்!

கொடுமுடி, எஸ். சரஸ்வதி.

கொச்சைப்படுத்தப்பட்ட லட்சுமி சிவபார்வதி

●● சமீபத்தில் ஆந்திர சட்டமன்றத்தில் தெலுங்கு தேசம் (நாயுடு) கட்சி அமைச்சர் ஒருவர் பேசும்போது, லட்சுமி சிவபார்வதியை பதிவு செய்யப்பட்ட பெயரான இலட்சுமி சிவ பார்வதி என்று குறிப்பிடாமல் வேண்டுமென்றே அவரது முதல் கணவர் சுப்பாராவின் பெயரை இணைத்துத் தொடர்ந்து குறிப்பிட்டு வந்தார். இதனால் பார்வதி மனமுடைந்து அழுதிருக்கிறார். இது குறித்து பி.ஜே.பி. உறுப்பினர் ஒருவர் கண்டிக்க, அமைச்சருக்கு சப்புக்கட்ட மற்றொரு அமைச்சர் உதவியிருக்கிறார். லக்ஷ்மி சிவபார்வதியின் அரசியல் செயல்பாட்டை நாம் ஆதரிக்காமல் போகலாம். அதற்காக அவரது தனிப்பட்ட வாழ்க்கையை கொச்சைப் படுத்த வேண்டுமா? முன்பொருமுறை ஜெயலலிதாவைப் பார்த்து "சோபன்பாபுவிடம் போய்ச் சொல்" என்று இந்நாள் முதல்வர் கூறினார். பெண் என்றால் ஏன் இந்த இளக்காரம்? ஆண்கள் எல்லாம் இரு தாரம் மணந்து கொள்வதில்லையா? அல்லது டைவர்ஸ் பண்ணிவிட்டு வேறு ஒருத்தியை மணப்பதுதான் இல்லையா? பண்பாடற்ற பேச்சினால் பெண்களின் மனங்களைப் புண்படுத்தலாமா?

திருவண்ணாதபுரம், தி.சு. இராமகிருஷ்ணன்.

செய்தி புதுசு; காட்சி பழசு

●● தொலைக்காட்சியில் 17.4.97 இரவு, தமிழ்ச் செய்தி அறிக்கையில், இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் ஐந்தாவது டெஸ்ட் மேட்ச் பற்றிச் சொல்லும்போது எப்போதோ முடிந்து போன, மூன்றாவது டெஸ்ட் போட்டியின் காட்சிகளைக் காட்டினார்கள். இதில் LIVE என்ற வார்த்தை வேறு! உடனுக்குடன் செய்திக்குரிய நேர்முகக் காட்சியைக் காண்பிக்க முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் FILE என்ற வார்த்தையையாவது பயன்படுத்தியிருக்கலாமே!

வேலூர்-6, எல். கோபாலகிருஷ்ணன்.

வட்டமேஜை

✉ கொ.அ.மு.க.விற்குப் பிறிதொரு விளக்கமும் தரலாம்! கொள்ளை அடித்தவர்களை முன்னேற்றும் கழகம்!

கமுதி, ராஜி.

✉ 'பாம்பும் சாகணும்! தடியும் ஒடியக் கூடாது' என்பது போல காவல் துறையை மெள்ள தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் திறன் உம்மை விட்டால் யாருக்கு வரும்! தருமம் காத்த தலையங்கம்!

காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

உரைநடைக் கவிதை!



✉ சமூகச் சிந்தனையுடன் வடிவமைக்கப் பெற்ற வித்தியாசமான கதை, 'பதினொன்று - பத்து - ஒன்பது' அழகு போன்ற, அண்ணாமலை போன்ற சிறுவர்கள் இன்னும் எத்தனை பேரோ?

வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ 'ஜப்பானை உலுக்கும் கேள்வி' கட்டுரை படித்தேன். வயதானவர்களுக்கு ஜப்பானில் இருக்கும் 'மதிப்பு' கண்டு வருந்தினேன். இந்தியாவிலும் இன்றைய இளைஞர்களிடம் இந்த அலட்சியம் கிளம்பத் துவங்கியுள்ளது. கூட்டுக் குடும்பத்தின் மூலமும், ஆன்மிகத்தின் மூலமுமே இதை வேர் அறுக்க முடியும்!

திருச்சி - 14, ராஜிராதா.

✉ மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை மெய்ப்பிக்கும் விதமாகத் துர்லவா என்ற பார்வையற்றவர் குளம் வெட்டியிருப்பது உண்மையிலேயே மெய்சிலிர்க்க வைத்தது!

வியாசர் நகர், அ. க. கிருஷ்ணன்.

✉ கொஞ்சங் கூட மிகைப்படுத்தப்படாத, கச்சிதமான விமர்சனம் 'ராசி' பட விமர்சனம்... தொடர்ந்து கவனித்து வருகிறேன்... கொஞ்சங் கூட தயவுதாட்சண்யம் இல்லாத 'கல்கி'யின் விமர்சனங்களை வைத்து, தைரியமாகப் படம் போவது குறித்து முடிவு செய்யலாம்... கீப் இட் அப்...

விராலிமலை, ச. நாகராஜன்.

✉ மத்திய அரசின் நிலையற்ற தன்மையை அழகாகவும், அழுத்தமாகவும் ஆழமாகவும் சித்திரித்தது, 'வை ராஜா வை' கார்ட்டூன். சபாஷ்!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா

✉ 'பூக்கள் நாளையும் மலரும்' என்ற கவித்துவமான தலைப்பில் மென்மையான கதையை, கனமாகப் படைத்துள்ளார் பிரபஞ்சன். வள்ளியை, அவளது கடிதத்தை எந்நாளும் மறக்கவே முடியாது.

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ 'பூக்கள் நாளையும் மலரும்' தொடர், இன்றைய லஞ்சம் வாங்கும் அதிகாரிக்கெல்லாம் ஒரு சவுக்கடி! உண்மையான காதலர்க்கெல்லாம் இது ஒரு பச்சைக் கொடி. சபேசன் போன்ற உண்மையான அலுவலர்க்கெல்லாம் இது ஒரு பஞ்சப்படி!

வடகாடு, க. ஆதித்தியன்.

✉ மனித மனங்களைப் படம் பிடித்துக் காட்டிய அழகும், நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பாங்கும், ஆண் பெண் இருபாலர்களின் சுயமரியாதையைப் போற்றிய பண்பும் கலந்து கதம்பமாய் மணத்தது பிரபஞ்சனின் தொடர்.

நெல்லை, தி. சு. பாலசுப்பிரமணியன்.

✉ 'பூக்கள் நாளையும் மலரும்' அழகு கொஞ்சும் ஓர் உரைநடைக் கவிதை. மலர்கள் பூத்துக் குலுங்கும் ஒரு நந்தவனத்தின் எழிலை அணுஅணுவாய் ரசிப்பது போல், ஒவ்வொரு அத்தியாயத்தையும் உணர்ந்து அனுபவித்துப் படித்தேன். ஆசிரியருக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்! உயிரோட்டமான ஓவியங்களால் தொடரை மிளிரச் செய்த ம.செ.வுக்கும்!

மதுரை - 10, எஸ். சீனிவாசன்.

✉ அடுத்தடுத்த வாரங்களை எதிர்பார்த்து காத்து, ஏங்க வைத்த பிரபஞ்சனின் 'பூக்கள் நாளையும் மலரும்' விரைவில் முடிந்தது கொஞ்சம் வருத்தம்தான்.

பூனாம்பாளையம், ஆர். பி. ஜெயச்சந்திரன்.



படம் : கோபிநாத்

5

சுலம் தரும் என்பதற்கு விளக்கம் சொன்னேன். அடுத்ததாக 'செல்வம் தந்திடும்...' அஷ்டாக்ஷர மந்திரம் இருக்கிறதே, அது செல்வத்தை வாரி வாரிக் கொடுக்கும். செல்வம் என்றால் என்ன...? போக போக்யங்கள். உலகத்தில் நாம் விரும்பக்கூடிய சாமானிய திரவியம்.

– அஷ்டாக்ஷரம் இதையும் கொடுக்கும்; அழியாத செல்வம் ஒன்றையும் கொடுக்கும்.

'நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்...' என்கிறாள் ஆண்டாள். – அது என்ன செல்வம்...? எம்பெருமான் திருவடியிலே நித்ய கைங்கர்யம் செய்யும் வாய்ப்புத்தான் அது.

'பண்டுரீதி கொலுவிய்யவய்ய ராம!' என்கிறார் தியாகராஜ ஸ்வாமி. 'பண்டு' என்றால் வேலைக்காரன் என்று பொருள். உன் திருவடியிலே எப்போதும் கைங்கர்யம் பண்ணும்படியான யோக்யதையை எனக்குக் கொடேன்...' என்று அந்த ராமனிடத்திலே பிரார்த்திக்கிறார். ஆகையினாலே, எம்பெருமான் திருவடியிலே நித்ய கைங்கர்யம் நமக்குக் கிடைக்க வேண்டும். 'நான் என்ன செய்ய வேண்டும்...? உனக்கு என்ன கைங்கர்யம் வேண்டும்...' என்று கேட்டுக் கேட்டு, எம்பெருமானிடத்திலே கையைக் கட்டிக் கொண்டு நிற்க வேண்டும்.

அழியா செல்வம் எது என்று கேட்டால், இந்த நித்ய கைங்கர்யம்தான். நமது தலையிலே கைங்கர்ய ஸ்ரீ என்று பட்டம் சூட்டி, யுவராஜ பட்டாபிஷேகம் பண்ணி அழகு பார்க்கிறான் பரமாத்மா! அப்படிப்பட்ட செல்வத்தை இந்த அஷ்டாக்ஷர மந்திரம் அளித்திடும்.

அடியார் படுதுயர் ஆயினவெல்லாம் நிலம்தரம் செய்யும்....

அவன் திருவடியை ஆச்ரயித்தவர்களுக்கெல்லாம் உலகத்தில் ஏகமாக கஷ்டம்! சரீரத்தில் கஷ்டம், குடும்பத்தில் கஷ்டம், சேர்ந்தவர்களால் கஷ்டம்!

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

விருத்தியில் கஷ்டம், வாழ்க்கையில் கஷ்டம் – மொத்தமும் கஷ்டம்! கஷ்டம்! கஷ்டம்!

இதெல்லாம் ஒரு கஷ்டமா...? இதைவிடப் பெரிய கஷ்டம் ஒன்று இருக்கிறது. இப்போது அடுக்கிய கஷ்டங்களெல்லாம் அதில் அந்தர்கதம். அது என்ன கஷ்டம் என்று கேட்டால், அதுதான் பிறவி என்கிற கஷ்டம்! மறுபடியும் பிறத்தல் இருக்கிறதே... பிறவித் துயர்! அதுதான் எல்லாவற்றையும் உள்ளடக்கிய கஷ்டம்.

'ஆதலால் பிறவி வேண்டேன்

அரங்கமா நகருளானே' என்றார் ஆழ்வார். 'பிறவியே வேண்டாம்' என்று தீர்மானமாய்ச் சொல்லி விட்டார்.

'வேத நூல்களெல்லாம் நூறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறப்பாக வாழு!' என்று ஆசிர்வாதம் பண்ணுகின்றன.

ஆனால் ஆழ்வார் கேட்கிறார்; 'பூரணமாக எப்படி இருப்பதாம்...? ஆயுளில் பாதியும் உறங்கியல்லவா கழிகிறது!' என்று.


இரவிலே தூங்கிப் போய்விடுகிறோம் இல்லையா? அதைத்தான் சொல்கிறார். நூறு வயது வாழ்ந்தாலும் ஐம்பது வயது தூக்கத்தில் போய் விடுகிறதே! மீதி ஐம்பது வருட வாழ்க்கைதானே வாழ்க்கை?

ஆழ்வார் சாஸ்திர ரீதியாகப் பாசுரத்தை எழுதியுள்ளார். அதனால் ராத்திரியில் தூங்குவதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார். மத்தியான தூக்கத்தையும் எடுத்துக் கொண்டால் பாசுரத்தையே மாற்ற வேண்டி வரும் – 'முக்காலும் உறங்கிப் போகும்' என்று மாற்ற வேண்டி வரும்!

சரி, விழித்திருக்கிற பாதி ஆயுள் காலத்தை எடுத்துக் கொண்டால், அதிலே பேதை, பாலகன், பிணி, பசி, மூப்பு, துன்பம்.... எத்தனை கஷ்டங்கள்! இதையெல்லாம் ஒருத்தர் பார்த்தாரானால் மறுபடி பிறவி வேண்டும் என்று தோன்றுமா...?!

எத்தனை வியாதிகள்! வயதானவர்... தள்ளாடி, கண் பார்வை கெட்டு


பத்மவாசன்



— கே. சித்ரா

நடக்க முடியாமல் வருகிறார்' என்றால்... அவரை மிடுக்கோடு ஒருவன் பார்க்கிறான். 'என்ன இப்படி விழுகிறதே...?' என்று கேட்கிறான். இன்னும் கொஞ்சம் நாள் போனால் அவனுக்கும் அதே கதிதானே...? வயோதிகம் மிகக் கொடியது. ஹிம்சைகள்! ஹிம்சைகள்! – ஆகையினாலேதான் இந்தப் பிறவியே வேண்டாம் என்றார்.

இந்தப் பிறவியை நாம் வேரோடு அறுக்க வேண்டுமானால், அதைப் போக்கக்கூடிய மருந்து இதுதான் : நாராயணா என்னும் நாமம் தான்.

ஆகையினாலேதான் 'துஞ்சும் போது நினைமின்; துயர்வரில் அழைமின்' என்று இந்த நாமாவைக் குறிப்பிட்டுச் சொன்னார் ஆழ்வார்.

துஞ்சும்போது அழைப்பதா...? தூங்கும் போது எப்படி நாராயணா நாராயணா என்று சொல்வதாம்...?

இதற்கு மகான்கள் வியாக்யானம் சொல்லியிருக்கிறார்கள். பெரியவாச்சான் பிள்ளை என்பவர் சொல்லியிருக்கிறார். அவருக்கு வியாக்யான சக்ரவர்த்தி என்றே பெயர். ஒவ்வொரு அக்ஷரத்தையும் துருவித் துருவி எடுக்கக்கூடியவர்!

அவர் சொல்கிறார் : 'துஞ்சும்போது அழைமின்' என்றால் தூக்கத்தில் கூப்பிட வேண்டும் என்று அர்த்தம் இல்லை... தூக்கம் வர வரையில் கூப்பிடுங்கள் என்று அர்த்தம்.'

'நாராயணா நாராயணா' என்று சொல்லிக் கொண்டே தூங்க வேண்டும். 'நாராயணா நாராயணா' என்று சொல்லிக் கொண்டே எழுந்திருக்க வேண்டும். அதற்கு என்ன பலன் கிடைக்கிறது என்றால், தூங்கும் நேரத்திலும் அந்த நாமத்தைச் சொன்ன பலன்.

ஆகையினாலே, தூங்குகிற நேரத்தில் சொல்லாமலேயிருந்தாலும் சொன்ன பலன் கிடைத்து விடுகிறது! மிகவும் ரஸமான வியாக்யானம் இது!

நீள் விசும்பு அருளும். அடுத்த பலன் இது. வைகுண்டத்தையே நம் உள்ளங்கை நெல்லிக் கனியாக்குவது.

அருளொடு பெருநிலம் அளிக்கும் – அதாவது மோக்ஷ சாம்ராஜ்யத்தை நமக்குக் கொடுத்திடும்.

பெற்ற தாயினும் ஆயின செய்யும் – அம்மாவைக் காட்டிலும் நமக்குச் செய்யக் கூடிய உயர்ந்த பிரத்யக்ஷ தேவதை உலகத்தில் உண்டோ...?

'காயத்ரியைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் இல்லை; அம்மாவைக் காட்டிலும் தெய்வம் இல்லை' என்பது சாஸ்திரம்.

ஆகையினாலேதான் காயத்ரியைத் தவறாமல் சொல்வது. காயத்ரியில் பிறந்து, அஷ்டாக்ஷரமாக வளர்ந்து வருவதாலே அந்த ஏற்றமுடைய மந்திரமானது தாயைப் போல நம்மைக் காக்கும்.

எனவேதான் 'பெற்ற தாயினும் ஆயின செய்யும்' என்கிறார்.

கடைசியாக என்ன சொல்கிறார் ஆழ்வார்...? 'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்...'

நலம் தரும் சொல்லை, இதோ 'நான் கூறினேன்' 'நான் சொன்னேன்' என்று சொல்லலாமே... 'நான் கண்டுகொண்டேன்' என்று ஆழ்வார் குறிப்பிடக் காரணம் என்ன...?

'கண்டு கொண்டேன்' என்றால், 'அந்த சொல்லுக்கு உரியவரை நான் இங்கு பார்த்தேன்...' என்று பொருள். ஆகையினால், நாமும் அந்தத் திருநாமத்தைச் சொன்னோமானால், நாமும் அவனைப் பார்க்க முடியும்.

இப்படிப் பல ஏற்றங்களை நல்கும் அந்த எட்டெழுத்து மந்திரம். அதை வேதம் நமக்கு விவரிக்கிறது :

'பிரவணமாகிற ஒற்றை எழுத்து; நம: என்கிற பதத்துக்கு வருவோம். இந்த சஹஸ்ர நாமத்துக்கு மூலம் வேதம். வேதத்தில், அந்த விஷ்ணு சூக்தத்தில் வருகிற ஒரு மந்திரத்தில் எட்டு முறை விஷ்ணு சப்தம் வருகிறது. அந்த எட்டும் எதைக் காட்டுகின்றன என்றால், 'ஓம் நமோ நாராயணாய' என்கிற எட்டெழுத்து மந்திரத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு எழுத்தையும் காட்டுகின்றன. ஆகையினால், 'விஷ்ணு' என்று ஒருமுறை சொன்னாலே நாராயண மந்த்ர பெருமையை நாம் உணர்ந்தவர்களாகிறோம்.'

வேதம் அதை எட்டு தடவை சொல்லிக் காட்டுகிறது; சஹஸ்ரநாமம் மூன்று தடவை சொல்கிறது. இதே சஹஸ்ரநாமத்தில் நாராயண என்கிற சப்தம் எத்தனை தடவை வந்திருக்கிறது என்று கேட்டால், ஒரே ஒரு



தடவைதான் வந்திருக்கிறது!

ஒருத்தர் கேட்டார் : - " 'விஷ்ணு' மூன்று தடவை வருகிறதே 'நாராயணா' என்பது எட்டு முறை வரவேண்டாமோ...?"

விஷ்ணு என்பதிலேயே சர்வமும் அடங்கியிருக்கிறதனாலே 'விஷ்ணு என்று சொன்னாலே அவனுடைய பெருமையை விளக்கக் கூடியதனாலே, நாராயணனுடைய பொருளை நமக்குக் காட்ட வல்லதினாலே... இப்படி அமைக்கப்பட்டிருக்கிறது' என்பதுதான் பதில்.

பரமாத்மா எங்கேயும் இருக்கிறான்; அந்த நாராயண மந்த்ரத்துக்குள்ளேயும் இருக்கிறான் என்பதைத்தான் விஷ்ணு சப்தம் உணர்த்துகிறது.

நாராயண மந்த்ரம் என்ன சொல்கிறது என்றால், 'எல்லாவற்றிலேயும் அவன்; எல்லாம் அவனிடத்திலே...' - நாராயண என்பதற்குத் தமிழில் எளிய விளக்கம் இதுதான்.

விச்வம் - எல்லாமாய் இருக்கிறான்.

விஷ்ணு : - எல்லாவற்றினுள்ளும் இருக்கிறான்.

விச்வம், விஷ்ணு இவை இரண்டுமே நாராயண என்ற சொல்லுக்கு அர்த்தம் காட்டுகின்றன.

இப்படி சமஸ்த விஷயங்களையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பதனாலே விஷ்ணு என்பது வெறும் சொல் அல்ல... அவன் சர்வ வியாபி என்பதைக் குறிக்கும் மந்த்ரம். எல்லா வஸ்துக்களிலும் சராசரங்களிலும் பரவியிருக்கிறான்.

பூதத்தாழ்வார் சொல்கிறார் : 'மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான்'. இது வேத வாக்யத்தின் தமிழ் வடிவம்தான்! அந்தர்யாமி ப்ராஹ்மணம் என்ற உபநிஷத் பாகத்திலும் இதே பொருள்பட வாக்கியம் இருக்கிறது.

'சமுத்திரமே நமக்கு பந்து' என்ற பொருளுடன் யஜுர் வேதம் முடிகிறது.

சமுத்திரம் பந்துவா...? அது எப்படி?

சமுத்திரம் என்றால் அதிலே சயனித்திருக்கும் பகவான். வித்யாரண்யர் பாஷ்யம் எழுதுகிறார். அதில், 'சமுத்திரம் என்றால் பகவான் என்று அர்த்தம்' என்கிறார்.

சமுத்திர ஸ்வரூபியாய் இருக்கிறான்; பர்வதத்தைப் பார்த்தால் பகவத் ஸ்வரூபம் தெரிகிறது; விருக்ஷங்களைப் பார்த்தால் அதுவும் பகவத் ஸ்வரூபம். ஜோதியைப் பார்த்தால் அதுவும் பகவத் ஸ்வரூபம். சூரியன் பிரகாசிக்கிறான். அது விஷ்ணு; சந்திரன் பிரகாசிக்கிறான் - அது விஷ்ணு; நட்சத்திரங்களெல்லாம் பிரகாசிக்கின்றன - அவையும் விஷ்ணு; விருட்சங்கள் நிற்கின்றன - அவையும் விஷ்ணு; பர்வதம், நிலம், ஜலம்... யாவும் விஷ்ணுவே.

எல்லா இடத்திலும் அவன் பரவியிருப்பதனாலே 'மாகடல் நீருள்ளான்' என்பது ஏற்றமான வாக்கியம்.

உபநிஷத்தையும் ஆழ்வாருடைய திவ்ய வாக்கையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது உண்மை புரிகிறது. உண்மை புரியும்போது ஆனந்தம் ஏற்படுகிறது. அந்த ஆனந்தத்தை அனுபவித்தால்தான் தெரியும். வாயால் விளக்கிச் சொல்ல முடியாது!

நம் உள்ளுக்குள்ளேயும் பரமாத்மா எழுந்தருளியிருக்கின்றானே! அதனால்தான் உறங்கி எழும் பொழுது கூட மெள்ள எழுந்திருக்க வேண்டும் என்கிறார்கள். தூக்கத்திலிருந்து தடாலென்று எழுந்து தடுமாறி, கதவில் சிலர் இடித்துக் கொள்வார்கள். அப்படியெல்லாம் அமர்க்களம் செய்யக்கூடாது!

ஏன் மெள்ள எழுந்து கொள்ள வேண்டும் என்று கேட்டால், நம்முடைய ஹ்ருதயத்திலே பகவான் இருக்கிறான் இல்லையா...? அந்த பகவானுக்கு எந்தவித தீங்கும் ஏற்படக்கூடாது; அவன் சுரக்ஷிதமாக இருக்க வேண்டும் என்பதற்காக. 'நாம் வேகமாக எழுந்திருந்தால் அவனுக்கு என்ன ஆகிப் போகுமோ' என்கிற மென் உணர்வுடன் எழுந்திருக்க வேண்டும்.

ஹிரண்ய கசிபுவினுடைய ஆட்கள், பிரஹலாதனை மலை மேலிருந்து உருட்டினார்கள். அந்தக் குழந்தை, மலை மேலிருந்து விழுகிறது. பெரிய பள்ளத்தாக்கிலே போய் விழுகிறது. 'நான் சின்னாபின்னமாகிப் போயிடுவேனோ...?' என்று அந்தக் குழந்தை பயப்படவில்லையாம்.

'ஹ்ருதயத்துக்குள்ளே பகவான் உட்கார்ந்திருக்கிறானே, அவனுக்கு அடிபட்டுவிடப் போகிறதே! என்ன ஆகுமோ...' என்று ஹ்ருதயத்திலே உள்ள பகவானை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு விழுந்ததாம் அந்தக் குழந்தை!

அதை பகவான் பார்க்கிறார்; மஹாலக்ஷ்மி பார்க்கிறாள்; பூமாதா பார்க்கிறாள்... நம்முடைய பர்த்தாவை - நாராயணனை இந்தக் குழந்தை இவ்வளவு ஜாக்கிரதையாக ரக்ஷிக்கிறதே. இந்தக் குழந்தையை நாம் ரக்ஷிக்க வேண்டாமா... என்று அந்த பூமாதா ம்ருதுவாக மாறி, வெல்வெட்டு மெத்தையிலே விழுகிற மாதிரி பிரஹலாதனைத் தாங்கிக் கொண்டாள்!

(தொடரும்)

அலட்சியம்

உள்ளிருந்து வந்த முதலாளிக்கு ஏதோ விபரீதம் எனப் புரிந்து விட்டது. முன்னால் நின்றிருந்தவர்கள் ஓரளவுக்கு மரியாதையாகப் பேசினார்கள். கூட்டத்தின் பின்னாலிருந்தவர்கள் ஆபாசமாகத் திட்டினார்கள்.

"என்னங்க பண்றது? நாங்களும் ரொம்ப கேர்புல்லா கிளீன் பண்ணிதா சமைக்கிறோம். அப்படியும் எங்களை மீறி இந்த மாதிரி ஆயிடு துங்க. இந்த ஒரு தடவை மன்னிச்சிடுங்க. இனி மேல் இந்த மாதிரி வராம பாத்துக்கறேன்" கைகூப்பினார்.

பெரியவருக்கு வியர்த்து, சந்தனப் பொட்டெல்லாம் அழிந்து விட்டது. தன் வெள்ளை மேல்துண்டால் முகச்சவரம் செய்திருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"ஏய்யா, போன வாரம் ஊறுகாய்ல புழு வந்தப்பவும் இப்படிதா சொன்னே. உம் புள்ளை குட்டிக சாப்பிடற மாதிரி இருந்தா இப்படி சமைப்பியா? எவனோதான் சாப்பிடறான் இல்லையா?" பின்னாலிருந்து யாரோ உரக்கக் கத்தினார்கள்.

"இன்னிக்கு ஒருநாள் சாம்பாரில்லாம அட்ஜெஸ்ட் பண்ணி சாப்பிட்டுட்டு போங்க, ரசம் குடுக்கச் சொல்றேன். இனிமே நா கரெக்ட் பண்ணிர்றேன்."

யாரும் போவதாக இல்லை.

முன்னால் நின்றிருந்த ஜெகதீஸ் பேசினான்.

"ஏங்க ஒரு தடவை ரெண்டு தடவைன்னா சரின்னு விடலாம். இது நாலாவது தடவை. உள்ளுக்கு கொண்டு வர்ற டீயும் காப்பியும் வாயிலே வைக்க முடியறதில்லை. அவ்வளவு மோசமாக இருக்கு."

"மயிலே மயிலே இறகு போடுன்னா போடாது பிரதர்" யாரோ பின்னாலிருந்து கத்தினார்கள்.

வெளியே வந்தபோது எல்லா தொழிலாளர்களும் பர்சனல் டிபார்ட்மெண்ட் சென்று மேனேஜரை சந்திப்பது என முடிவு செய்து இருந்தார்கள். சாம்பாரில் கண்டெடுத்த பூச்சியை சாம்பார் கப்பில் எடுத்துக் கொண்டு நடந்தார்கள். யாரும் கை கழுவவில்லை. கைகள் காய்ந்து சோற்றுப் பருக்கைகள் ஒட்டியிருந்தது.

தள்ளு கதவைத் தள்ளி, உள்ளே நுழைந்து டேபிளின் இருபுறமும் நின்றபோது, மேனேஜர் போன் பேசிக் கொண்டிருந்தார். போனை வைத்துவிட்டு, "என்னப்பா யாருக்காவது பார்த்டே வா? எல்லா கும்பலா வந்திருக்கீங்க" இயல்பாக சிரித்தார். எம்.பி.ஏ. சிரிப்பு.

டேபிளின் மேல் பூச்சி கப் வைக்கப்பட்டு விவரம் சொல்லப்பட்டது.

"நம்ப கேண்டீன் சாம்பார்லயா?" அதிர்ச்சியா அருவெறுப்பா, ஆச்சர்யமா என யூகிக்க முடியாதவாறு கேட்டார். இண்டர்காமை எடுத்து நாலு 'ஏத்து' ஏத்தினார். கீழே விழுந்த குழந்தையை சமாதானப்படுத்த நிலத்தை அடிப்பாளே அம்மா, அம்மாதிரி.

தொழிலாளர்கள் யாருக்கும் திருப்தி ஏற்படவில்லை. உணவு இடைவேளை முடிந்ததற்கான சைரன் ஒலித்தது.

சில விநாடி மௌனத்தில் மேனேஜர் தம் வாட்சைப் பார்த்துக் கொண்டார்.

"இதுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணுங்க. ஓர்க்கர்ஸ் சைட்ல இருந்து கேண்டீனுக்கு ஒரு கமிட்டி பார்ம் பண்ணுங்க. இல்ல வேற ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க."

"ஏப்பா நானும் உங்களை மாதிரிதான். நா எங்க சாப்பிடறேன் தெரியுமா? சொன்னா நம்ப மாட்டீங்க! கேண்டீன்லதான். நீங்களும் இந்த கம்பெனில வேலை செய்யறீங்க. அதே மாதிரிதான் நானும். நீங்க யாராவது வேணா இந்த சீட்ல உட்கார்ந்துக்கறீங்களா?"

மௌனத்தில் டேபிள் வெயிட்டை கையில் சுற்றினார்.

"ம்... பேசுங்கப்பா."

அவரே பேசினார்.

"கேண்டீன் பெரிய இடத்து சமாசாரம்! நா பேசி பார்க்கறேன். மொதல்லயே ஒரு தடவை இதைப் பத்தி மீட்டிங்ல பேசினேன். ஆனா அவங்க ஒரு ஸ்டெப்பும் எடுக்கலை. இதை எல்லாம் நா உங்ககிட்ட சொல்லக் கூடாது. ஆனா எனக்கு மனசு கேக்கலை. பாருங்க, சாப்பிடாம வந்து நிக்கறீங்க. நாளைக்கு நா டைரக்டர மீட் பண்ணப் போறேன். அப்ப இந்தப் பிரச்னையை அவர் கிட்ட சொல்லி, நிச்சயமா உங்களுக்கு இரண்டு நாள்ல ரிசல்ட் சொல்றேன். I will do my best. ஓ.கே.வா? இப்ப எல்லோருக்கும் சாதமும் தயிரும் தரச் சொல்றேன். சாப்பிட்டுட்டு

பலராம் செந்தில்நாதன்

எல்லாரும் சீக்கிரம் ஒர்க் ஸ்பாட்டுக்கு போங்க. இப்பவே அரை அவர் ஓடிருச்சு."

எல்லோரும் திட்டிக் கொண்டே கேண்டீன் வந்து தயிரோடு நிறைய சாப்பாடு வாங்கி பாதி சாப்பிட்டு, மீதியை இரைத்தார்கள். சாம்பாரை தரையில் கொட்டினார்கள். கேண்டீன் களேபரமாக இருந்தது.

மெதுவாக தொழிற்



சாலைக்கு சென்றார்கள். ஒரு மணி ஓடிப் போயிருந்தது. நிதானமாக மெஷினை ஆன் செய்து நடந்தவற்றை வெற்றிக் களிப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்து நிமிடத்தில் சிவநேசன் ஓடிவந்து, ''பிரதர் நம்ம பேப்ரிகேஷன் டிபார்ட்மெண்ட் சுந்தர்ராஜன் வாந்தி எடுக்கறான். எல்லோரும் மெஷினை நிப்பாட்டுங்க.''

அனைத்து இயந்திரங்களும் நிறுத்தப்பட்டன.

மேனேஜருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கம்பெனி ஜீப் சென்று தொழிற்சாலை டாக்டரையும் இரண்டு நர்ஸையும் அழைத்து வந்தது. உடனே சுந்தர்ராஜனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. வெறும் அருவெறுப்பால் தான் வாந்தி. பூச்சியால் அல்ல என்று டாக்டர் கூறினார். அல்லது கூற வைக்கப்பட்டார்.

அசெம்ளியில் எல்லா தொழிலாளர்களும் வரிசையில் நின்றிருந்தார்கள் நமுட்டுச் சிரிப்புடன் செவிலியரை தலை முதல் கால் வரை பார்த்து கசமுசவென பேசிக் கொண்டார்கள்.

"டே அந்த டெட்டால் பாட்டில் எடுக்கறாள்ல, அவ பேரு என்ன தெரியுமா? திவ்யா. நா மட்டும் அவளுக்கு அஞ்சு புடைவை வாங்கித் தந்துருக்கேன். அப்பெல்லா செம கம்பெனி குடுத்தா'' – சுகுமாரன் தன் சகாக்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இன்னொருத்தி ஜான்சி. நான் கொஞ்ச நாள் ட்ரை பண்ணினேன். ரொம்ப பிகு பண்ணினா. அ.. போடீன்னுட்டேன். இப்ப ஒருத்தன் முட்டை கண்ணை போட்டு சொட்டை மண்டையோட கதை எல்லாம் எழுதுவானாமா. அந்த கடை முன்னால் வேப்பமரத்து வீடு... அவன் ரெடி பண்ணிட்டான்."


க்யூவில் உற்சாகமாக இருந்த தொழிலாளர்கள், இரண்டு மேனேஜர்கள் ரவுண்ட்ஸ் வந்தபோது முகத்தில் சோகத்தை வரவழைத்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

எல்லோருக்கும் டெட்டால் தடவி ஊசி போடப்பட்டது. ஷிப்ட் முடிய அரை மணி நேரமே இருந்தது. ஏற்கெனவே கழுவிய முகம் கை கால்களை மீண்டும் கழுவினார்கள். லாக் எழுதி, உள்ளே வந்த இரண்டாவது ஷிப்ட் தொழிலாள நண்பனிடம் நடந்த வீரபிரதாபக் கதையைக் கூறினார்கள்.

ஷிப்ட் முடிந்ததற்கான சைரன் ஒலித்தது. தபதபவென ஓடினார்கள். பஸ் பிடிக்கும் அவசரம். கும்பலோடு நடந்து வந்து கொண்டிருந்த ரங்கதுரை, தன் சகாவிடம் சொன்னான். ''பிரதர் நாளைக்கும் இதே மாதிரி நடந்தா நல்லாயிருக்கும்! இன்னிக்கு மத்தியானம் டைம் போனதே தெரியலை."

போட்டியில் தேர்வான ஐந்து கதைகளுள் தாமரை எழுதிய கதை 27.4.97 இதழில் வெளியானது. பிற நான்கு கதைகளும் இந்த இதழில். கூடவே, சுஜாதாவின் விமர்சனக் குறிப்புரையும்.

மும்பை மசாலா



• குஜ்ரால்

மினி, மிடி, மாக்ஸி

'தேவை ஒரு மீடியேட்டர்' என்று விளம்பரப்படுத்தாத குறையாக சிவ சேனைக்காரர்கள், தாக்கரேவுக்கும் குஜ்ராலுக்குமிடையே பாலம் அமைக்க, ஒரு நல்லிணக்கத் தூதுவரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். பாடுபட்டு கௌடாவுடன் வளர்த்த சிநேகம், கேசரியின் சதியால் பலனில்லாமல் போக, புதிய பிரதமருடன் நட்புக்கு மீண்டும் பிள்ளையார் சுழி போட வேண்டிய நிலை! தன்னுடன் ஒத்துப் போகாத மாநில அரசுகளை மத்திய அரசு 'டிஸ்மிஸ்' செய்து விடுமோ என்பது 'மினி'க்கவலைதான்! மருமகன் ராஜ் தாக்கரே சம்பந்தப்பட்ட கினி கொலை வழக்கை CBIயிடமிருந்து காப்பாற்றுவது 'மிடி' கவலை! ஹுசைனின் நிர்வாண சரஸ்வதி ஓவியத்தைக் குறித்து காரசாரமாக தாக்கரே 'சாம்னா'வில் எழுத, தாக்கரேயின் மீதே வழக்குத் தொடுக்க 'ராஜா அகாதமி'க்கு அனுமதி வழங்கும்படி மாநில அரசுக்கு, குஜ்ரால் யூனியன் மினிஸ்டராக இருந்தபோது எழுதிய (இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாத) கடிதம்தான் 'மாக்ஸி'யான கவலை!

அழ(ழு)கிய கூட்டு!

இரண்டு தான்களைப் போட்டுச் செய்த கூட்டில் ஒன்று அழுகி, ஒன்று மட்டும் சரியாக இருந்தால் பரிமாறுவதற்கு ஏற்றதா என்பதுதான் மாநில அரசின் பிரச்னையாக இருக்கிறது! அண்ணாஹசாரே குற்றம் சாட்டிய இரண்டு அமைச்சர்களில் பி.ஜெ.பிகாரரான சிவசங்கரன் சுத்தமானவர் என்றும், சிவசேனைக்காரரான சுதார் கறைபடிந்தவர் என்றும், புராணிக் கமிட்டி தீர்ப்பளித்திருக்கிறது! சுதார் கொடுத்த ராஜினாமாவை உடனடியாக ஏற்காமல், முதல்வர் ஜோஷி காலம் கடத்துவதற்குக் காரணம், மீண்டும் ஒரு விசாரணைக் குழு அமைத்து, 'ஒழுங்காக' தீர்ப்பளிக்க வேண்டுமென் சிவசேனைத் தலைவர் வற்புறுத்துவதுதான்! இரண்டு 'தான்'களுமே நல்லது என இவர்கள் நிரூபிக்கப் பார்க்க, "ஐயையோ இரண்டுமே அழுகல்தான்" என்று குதிக்கிறார் எதிர்க்கட்சிக்காரரான சகன்பூஜ்பல்!

ஒப்பந்தம் 'பெஸ்ட்டா?'

நான்கு நாட்களில் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் மும்பைவாசிகளைப் பாடாய்ப்படுத்திய பஸ் ஸ்டிரைக், ஒருவழியாக யூனியனுக்கும் நிர்வாகத்துக்குமிடையே சுமுகமான ஐந்து வருட ஒப்பந்தத்தில் முடிவு பெற்றது. நாலு நாட்களில் நிர்வாகத்துக்கு நஷ்டம் ஆறு கோடி! ஆனால் ஐந்து வருடத்தில் இழக்க இருப்பது 331 கோடிகள்! ஒரு தொழிலாளியின் குறைந்த பட்ச வருவாயே இனி ரூ. 3550 ஆக உயரப் போகிறது! இது அவர்களுக்கு இனிப்பாக இருக்கலாம்! ஆனால் இந்தக் கூடுதல் செலவை சரிக்கட்ட, பஸ் கட்டண உயர்வு என்ற பெயரில் மும்பைவாசிகளை சக்கையாகப் பிழியப் போவது உறுதி என்பதை நினைத்தால்... இது ''BEST'' ஒப்பந்தமா, ''WORST'' ஒப்பந்தமா தெரியவில்லை!

தேவை

பாஸா? ஃபெயிலா?

'வள்'ளென்று விழும் அமைச்சர், வாரத்திற்கு ஒருநாள் மட்டும் மந்த்ராலயா வரும் அமைச்சர், ஆபீசை மும்பைக்கு வெளியே தனிப்பட்ட முறையில் நடத்தும் அமைச்சர், ஜோஷியைத் தலைவராக ஏற்று நடக்காத அமைச்சர்... இப்படிப் பல நமூனாக்கள் இருப்பதால், விரைவில் அமைச்சர் மண்டலத்தை மாற்றி அமைக்க இருக்கிறார்கள். முதல் கட்ட நடவடிக்கையாக எல்லா மந்திரிகளுக்கும் ஒரு கேள்வித் தாளை வினியோகித்திருக்கிறார்கள்

"நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் காப்பாற்றியவை எவை? காற்றில் பறக்கவிட்டவை

எவை? அமலாக்கிய திட்டங்கள் எவை? கண்டு கொள்ளாமல் நழுவவிட்டவை எவை? - இவை 'மாதிரி' கேள்விகள்! எழுதப்படும் விடைகளைப் பொறுத்துத்தான் பரீட்சையில் பாஸா ஃபெயிலா என்று கணிக்கப்படும்! எத்தனை பேர் மந்திரி பதவிக்கு "டாடா" சொல்லும்படி இருக்குமோ?

(ே)சாதா பாவ்லே

திரை உலகில் புது முகங்கள் அறிமுகம் ஆவது போல், அண்டர்வர்ல்டிலும் புது முகங்களின் வருகை பற்றி, பத்தி பத்தியாக செய்தி வெளியிட்டு தினசரிகள் பரபரப்பாக்குகின்றன. தாவூத், பாகிஸ்தானில் ISI காரர்களிடம் சிக்கித் தவிக்க, காவ்லி அரசியலில் மாட்டிக் கொண்டு விழிக்க, 'போலீஸ் என்கௌண்டர்' என்ற பாவ்லாவில் அடியாட்களெல்லாம் வீழ்த்தப்பட்டு சோடா ராஜன் சிறகொடிந்த பறவையாய் படபடக்க, தொலைந்தது அராஜகம் என்று காவல்துறை நிம்மதி அடைய விடாமல், சோட்டா ஷகீலும், சாதாபாவ்லேயும் கிளம்பியுள்ளனர்! அண்மையில் மும்பையைக் கலக்கிய இரு பெரும் கொலைகள் - சினிமா ப்ரொட்யூசர் முனித்தக்கல், தொழிலதிபர் தக்கர் - இந்தப் புதிய தலைமுறையின் கைவரிசை என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சாதா பாவ்லேயின் கையாட்களுக்கு மாதச் சம்பளமாக ரூ. 3000 - ரூ. 5000 வரை தகுதி(!) அடிப்படையில் அளிக்கப்படுகிறதாம். பாவ்லே தனியாக எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜே ஆரம்பித்தாலும் வியப்பதற்கில்லை!

போன மச்சி திரும்பி வந்தா

ஒரு கண் நீலம், மற்றொன்று பழுப்பு; அடர்த்தியான முடி, 'வீடியோக்கான்', மற்றும் சில விளம்பரங்களில் பார்த்திருக்கலாம்! திடீரென்று இந்தப் பிரபல மாடலைக் காணவில்லை என்றதும், தினசரிகளிலெல்லாம் புகைப்படத்துடன், சோப்ரா குடும்பத்தினரின் கண்ணீர் மல்கும் விளம்பரங்கள் பறந்தன. அதைக் கண்டு 'எமோஷனல்' ஆகிவிட்ட மும்பை வாசிகள், இந்த ஸூப்பர் மாடலைத் தேடி திசைக்கொருவராய் அலைந்தனர். ஒரு வழியாக ஒரு வாரம் கழித்து கடத்திச் சென்றவர்கள், சோப்ரா வீட்டு வாசலிலேயே காரிலிருந்து இறக்கிவிட்டு ஓடிவிட்டனர். மறுநாள் செய்தித்தாள்களில் நன்றி நவிலல், விளம்பரங்கள், சோப்ரா வீட்டுக்கு எக்கச்சக்கமான ஃபோன் கால்கள், வாழ்த்துக்கள்... ஹப்பா! ஒரு ஒன்பது வயது பாரசீகப் பூனைக்கென ஒரு மெட்ரோவே அல்லோலகல்லோலப்பட்டது இதுதான் முதல் முறை!

ஒரு தூதுவர்!



* பால் தாக்கரே

கட்டாய சுவர்க்கம்

குஜ்ராத்தியருக்கு உபவாசமென்பது தண்ணீர்ப் பட்ட பாடுதான்; ஆனாலும் மீரா ரோடில் வசிக்கும் மணிபென் ஃபோரியாவின் 49 நாள் உண்ணாவிரதம் நம் கண்களிலேயே தண்ணீரை வரவழைக்கிறது! 76 வயது மணிபென் ஏதோ வயிற்றுக் கோளாறில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். உண்ணாவிரதம் துவங்கி 20 நாட்களில் கைவிட்டும் விட்டார். ஆனால் இரண்டு நாள் கழித்து மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற அறிவிப்பு வந்ததும்தான், இது வயசானவர்களைத் தீர்த்துக் கட்டும் வழியோ என சந்தேகம் சிலருக்கு தலைதூக்கியது! மணிபென்னை தெய்வமாக நினைத்து, அவர் தரிசனத்திற்கென்று ஆயிரக்கணக்கானவர் கூடுகின்றனர். "என் அம்மா மேற்கொண்டிருப்பது சந்தான விரதம்; இது குடும்பத்தையே உய்விக்கும்; அவள் நினைத்தால் விரதத்தைக் கைவிடலாம்; உபாதைகளுக்கென்று மருந்து உட்கொள்ளலாம்; நாங்கள் வற்புறுத்தவில்லை! அவளிஷ்டம்" என்னும் பிள்ளை காஞ்சன்லால், மணிபென் உயிருடன் இருக்கும் போதே இறுதி ஊர்வலத்துக்கு 'பால்கி' தயார் செய்து கொண்டிருக்கிறார்.

— ஜெயஸ்ரீ ராஜ்

ஆசை வசம்

மழை வரும் போல இருந்தது. சேர்வராயன் மலைச்சாரலில் ஏற்காட்டுக்கு நேர் மேலே மேகம் திரண்டாலே சேலம் திமிலோகப் படப் போகிறது என்றுதான் பொருள்.

இந்த மழையின் வீச்சைக் கணிப்பதில் அச்சுப் பிணைக்கும் கண்ணாயிர முதலி, கம்ப்யூட்டர் துல்லியமானவன்.

"எலே மழை பொளந்து கட்டப் போவுது. மளமளன்னு வேலைய முடிக்காட்டி கிழிஞ்சிடும் கிருஷ்ணகிரி" - என்று புலம்பிக் கொண்டே ஆள்காட்டி விரலில் துளி சைபால் தொட்டு - துளி சாம்பலையும் தொட்டு பட்டு நூல் பாவை மெஷின் அச்சு பாவுடன் வேகவேகமாக இணைக்கிறான்.

வீதியைப் பார்த்த திண்ணைதான் அவனது தொழிற்கூடம். மழை வந்தால் சாரல் உள் சுவர் வரை இருக்கும். தூக்கிக் கொண்டு ஓடி விட வேண்டும்.

எல்லாம் ரேணுகா தேவிக்கு கொடி நட்டவேளை!

வெங்கட்ராமய்யர் நெற்றிக்கு கூரை கொடுத்து வானம் பார்த்து மகிழ்கிறார்.

பங்குனி வெயில் பட்டை கிளப்பியதில் எல்லோர் வீட்டுக் கிணற்றிலும் தண்ணீர் பாதாளத்திற்கு இறங்கி விட்டது.

இன்னும் இன்னும் என்று தோண்டியதில் பூமியின் மறுபக்கமாய் நியூயார்க்கே வந்து விடும் அபாயம் வேறு!

மழை வந்தால்தான் ஆயிற்று... ஆமாம் என்று ஆமோதிக்கிற ரகமாய் வீதிக் குழாயில் ஒரு கூட்டமே வேறு முண்டிக் கொண்டு... அவர்கள் முன் ஓட்டை வாளியிலிருந்து டால்டா டப்பா வரை வரிசையில் நிற்கிறது.

தண்ணீரைப் போலவே பேச்சும் பெருகுகிறது.

''மகா கொடுத்து வைச்சவ... மருமகளை இப்பவே தயார் பண்றா பார்த்தியா?''

"கால் இல்லாதவ வந்தா இரக்கப் பட்டு முன்ன விட்றுவோம்னு நினைச் சுட்டா போல. நிக்கட்டும் கழுத..."

''ஆமா ரெண்டாவது ஆட்டம் அருணாச்சலம் போனியே எப்படிடி இருக்கு?''

"சூப்பருடி... முப்பது கோடி ரூவாய ரஜினி செலவழிக்க பட்ற பாடு இருக்கே... ஆனா பாரு சாமி ரஜினி பக்கம் இருக்கறதால அது பெருகிக் கிட்டே போகுது. ஆத்தாடி எவ்ளோ கட்டுங்க தெரியுமா? அதுல ஒரு கட்டு நமக்குக் கிடைச்சாலும் பொழுது விடிஞ்சுடும்.

''ஆனா மகராசனுக்கு துளியாவது ஆசை வரணுமே. அவ்வளவையும் ஏழைங்களுக் கேன்னுட்டு போயிட்றாரு. ரஜினி ரஜினி தான்டி."

"ரஜினி கதைய உடு. நம்ம



இந்திரா செளந்தர்ராஜன்

பானு கதை தெரியுமா உனக்கு?''

"என்னாடி... நானும் கேக்கணும்னுகிட்டிருந்தேன். அந்த தாமு நாய் பெரிசா கிழவிக்கு புத்ரன் நான்தான்னு காரியமெல்லாம் பண்ணிட்டாம் போலருக்கே..."

"கம்மா ஆடுமா குடுமி... நீ வேணா பாரு அவனை வைப் பாட்டி ஆக்காம அவன் விடப் போறதில்லே."


"அதானா அரிசியும் பருப்பும் போய் ஊட்ல இறங்கிச்சு?"

"மிச்சம்...? கேஸ் அடுப்பு சிலிண்டரு புதுசு புதுசா பாத்திரங்கன்னு காலைல இருந்து போய்க்கிட்டேல்ல இருக்கு."

''பாவண்டி அந்தப் பொண்ணு நிலை. குரங்கு கை பூமாலையா ஆயிட்டா ளேடி.''

"நீயும் நானும் பாவம் பாத்தா ஆச்சா...? போவட்டும்னு நம்ம ஊட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்து வெச்சுக்கலாம்னா நம்ம ஊட்டு ஆளுங்க நமக்கே அப்புறம் வேட்டு வெச்சிருவாங்க.

18



அப்புறம் உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா கேஸ்தான். எல்லாம் தலையெழுத்துடி லட்சுமி..."

"ஹூம்.. எந்த ஜென்மத்து பாவமோ அவளுக்கு இப்படி நடுநிலை. அவ அப்பன் சைட்ல - அதாண்டி சாயபு வீட்டுப் பக்கமா இருந்து கூட இங்க வந்துடுன்னு கூப்ட மாதிரி தெரியுது. இவ போக மாட்டேன்னுட்டாளே..."

"தாழுகிட்ட மாட்டிக்கிட்டு அழியணும்னு எழுதியிருந்தா நானும் நீயுமா மாத்த முடியும்?"

கனகாவின் பொறுமை அவளை அதற்கு மேல் அங்கு நிற்க அனுமதிக்கவில்லை. காலி குடத்துடன் திரும்ப ஆரம்பிக்கிறாள்.

"அம்மாடி என்ன திரும்பிட்டே - வா வந்ததுக்கு புடிச்சிட்டு போ. பரமக்குடில உங்க வீட்லையே நல்ல தண்ணி கொழா இருந்திருக்கும். உனக்கு இந்த அவஸ்தையெல்லாம் தெரிஞ்சிருக்காது... அப்படிதானே?"

ஒருத்தி கணிசமாக பரிதாபப்பட்டு கனகாவின் குடத்தைப் பிடுங்கி நீர் நிரப்பி இடுப்பிலும் ஏற்றி விட்டு அனுப்புகிறாள். மேகக் கூட்டமும் நீர் பிழியத் தொடங்குகிறது.

கொட்டும் மழையில் தெப்பலாக நனைந்தபடி உள்ளே நுழைகிறான் மோகன்ராம். புத்தகமெல்லாமும் நனைந்து அவன் நெடுநேரம் நனைந்தே நடந்து வந்திருப்பதைக் காட்டுகிறது.

மகாலட்சுமி கொடியில் கிடக்கும் துண்டு ஒன்றுடன் அவனைப் பார்த்துவிட்டு ஓடி வருகிறாள்.

"ஏண்டா இப்படியா நனைஞ்சுகிட்டு ஓடி வருவே?"

"அது இருக்கட்டும், மந்தா போய்ட்டாளாமேம்மா...?"

"ஆமாண்டா. நான் கூட இப்பத்தான் எழவுக்குப் போய்ட்டு வந்து தலைமுழுக்கு போட்டேன். கனகாதான் இன்னிக்கு நல்ல தண்ணியே பிடிச்சிகிட்டு வந்தா." என்றபடி தலை துவட்டி விடுகிறாள்.


யாரைப்போலப் பிறக்க ஆசை

ரேவதி?



"எனக்கு மறு பிறவி, சொர்க்கம், நரகம் இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. யாராவது என்னை எந்த விஷயத்திலாவது கவர்ந்தால், அந்த நல்ல விஷயத்தை இந்தப் பிறவியிலேயே கடைபிடித்து, திருப்தி பெறலாமே? எதற்காக அடுத்த பிறவிவரை காத்திருக்க வேண்டும்?"

பேட்டி: மௌலி



"நீங்க நிஜமான டாக்டர்தானா டாக்டர்?!"

– உ. ராஜாஜி

"சரி நான் போய் மத்த காரியங்களை கவனிக்கிறேன். என் டப்பால ஒரு ஐநூறு ரூபா இருக்கு. ஜரிகைக்குன்னு வெச்சிருந்தேன். கொஞ்சம் எடுத்துக் கொடும்மா..." என்று படபடக்க ஆரம்பிக்கிறான் அவன்.

"பணம் எதுக்குடா?"

"என்னம்மா... பாட்டிக்கு யாரும்மா இருக்கா?"

"அட போடா பைத்தியக்காரா... அந்த தாமு சொந்த பிள்ளை மாதிரி குடம் உடைச்சு கொள்ளி போட்டு கிழவி சாவை கல்யாணச் சாவாக்கிட்டாண்டா! இன்னேரம் கிழவியும் சாம்பல் பூத்திருப்பா. வேணும்னா வீட்டுக்கு போய் அந்த குட்டி இருப்பா. அவ முன்ன நின்னுட்டு வா..."

"குட்டியா?"

"அதான் அந்த பானுவைதாண்டா சொல்றேன். ஆண்டி எப்ப சாவான் மடம் எப்ப காலியாகுங்கற மாதிரி கிழவி செத்த நிமிஷம் அவனும் குடும்பம் நடத்த வந்துட்டான். இவளும் கதவைத் திறந்து விட்டுட்டா..."

அந்த மொகல் பாணிக் கட்டடத்தின் மாடம் முழுக்க புறாக் கூட்டம். ராவுத்தரின் மறைவு புறாக்களுக்கும் தெரிந்து விட்டதோ என்னவோ, மௌனப் பந்தி நடத்திக் கொண்டி ருக்கின்றன.

ராவுத்தரை நல்லடக்கம் செய்துவிட்டு எல்லோரும் திரும்பியிருக்கின்றனர். நடு ஹாலில் ராவுத்தரின் படம் முன் மல்லிகைப் பந்தல் போட்டு வாசம் மிகுந்த பத்தியையும் ஏற்றி வைத்திருந்தும் – அதை மீறிய பிரியாணி வாசத்தின் ஊடுருவலை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இருண்ட அறையில் முக்காடிட்ட நிலையில் விசும்பிக் கொண்டிருக்கிறாள் நபீஸா. முதலில் மகன். இப்பொழுது கணவன். மிஞ்சியிருப்பது மகள் மட்டும்தான். அவளும் துபாய் போய் விட்ட நிலை. இஸ்மாயில் மட்டும் முடிந்த மட்டும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"கடைசி வரை பானு வரல பாத்தியா?"

"எப்படி வர முடியும்... அந்தக் கிழவியும்ல போய்ட்டா...?"

"அப்ப அந்த பொண்ணு இப்ப தனியா நிக்குதா?"

– இஸ்மாயில் உறைந்த மௌனத்தில் அதற்கு பதில் சொல்லும் போது நபீஸா உடைத்துக் கொண்டு அழுகிறாள்.

"போதும்டா இஸ்மாயில்.. யாருமில்லாம அனாதையா நிக்கற கொடுமை அவளுக்கு வர வேண்டாம். திடமா இருந்த உன் தாத்தாவே சாகக் கிடைக்கல அந்தப் பொண்ணை நினைச்சுதாண்டா அதிகமா கவலைப்பட்டாரு. அதை நல்லவிதமா உக்காத்தி வெச்சா தாண்டா அவரோட ஆத்மா சாந்தியடையும். போடா போய் அவளைக் கூட்டிக்கிட்டு வந்துடு. யார் என்ன சொன்னாலும் நான் பாத்துக்கறேன்."

குதிரை மரத்தில் கண்ணாடியை தொங்க விட்டு முன்நின்று தோப்புக்கரணம் போடுகிற மாதிரி முகச்சவரம் செய்து கொண்டிருக்கிறான் மோகன். அவன் செயலில் ஒரு பரபரப்பு தெரிகிறது.

அந்த வீட்டுக்குள் நுழைந்த நாளில் இருந்து இன்று போல் அவன் தடுமாறி கனகா பார்த்த தில்லை.

கொதிக்கும் வெந்நீர் பாத்திரத்தை தூக்கிக் கவிழ்த்து வாளி விட்டுக் கொள்வதில் இருந்து – கொல்லையே ஈரமாகாதபடி பதவிசாய் அமர்ந்து குளிப்பது வரையில் அவளை ஈர்த்தவன் இப்பொழுது மீசையை திருத்தமாக நறுக்கிக் கொள்வதில் கூட செயலற்ற மாதிரி இருக்கிறான்.

ஊர்க்கிழவியின் மரணம் இந்த அளவுக்கா அவனை பாதித்திருக்க முடியும்?

"அத்தான்..." – என்கிறாள் அந்த ஐயப் பாட்டைத் தீர்த்துக் கொள்ள. திரும்பிப் பார்க்கிறான்.

"ரொம்ப நெர்வஸா தெரியறீங்களே?"

"அப்படியா...? இல்லியே... இல்லியே..."

"சொல்றதுலையே அது கன்ஃபார்ம் ஆகுது..."

மோகன்ராம் சோப்புக் கன்னமுடன் அவள் மடக்கலில் அசடுவழிகிறான்.

"மந்தா பாட்டின்னா உங்களுக்கு அவ்வளவு இஷ்டமா?"

"அ... ஆமா... ஆமா..."

"எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு..."

"..."

"என்ன பார்க்கறீங்க. அவங்க யாரோ நாம யாரோ...? இருந்தும் அவங்க சாவு உங்களை ரொம்ப பாதிச்சிருக்கறதை நினைச்சா ஆச்சரியமாதான் இருக்கு."

"இதுல ஆச்சரியப்பட என்னம்மா இருக்கு. அவன் என்கிட்ட சாப்பிட்டதை விட அவ கைல சாப்பிட்டதுதான் அதிகம். மந்தா கை பக்குவமும் நளபாகமா இருக்கும்...'' – குறுக்கில் மகன் சார்பில் தன் அபிப்பிராயத்தை நுழைக்கிறாள் மகாலட்சுமி.

''இருக்கலாம் அத்த... ஆனா வீதியில எல்லாரும் எனக்கென்னன்னும் நமக்கு சம்மந்தமில்லேன்னும் நினைக்கும்போது அத்தான் மட்டும் ஏன் ரொம்ப வருத்தப்படறாருங்கறதுதான் தெரியலை."

"கூடாதுங்கிறியா?''

"அப்படிச் சொல்லலை.. இப்படி கவலைப் பட்டுகிட்டே இருந்தா எப்படின்னுதான் கேக்க வந்தேன்."

"இவங்க இப்படி கவலைப்படாம இருந்தா எப்படின்னுதான் கேக்கணும். என்னைப் பாத்து இல்லை.. வீதியை பார்த்து... ஒவ்வொரு வீட்டையும் பாத்து... உறவு முறைச் சம்பந்தம் இருந்தாதான் உருகி அழணும். இல்லேன்னா சம்பிரதாய துக்கம் போதுங்கறது யாருக்கு பொருந்துமோ பொருந்தாதோ, மந்தாக்கு சுத்தமா பொருந்தாது. இப்ப கூட அவளுக்கு எவ்வளவு பேர் பாக்கி தரணும் தெரியுமா? அதைக் கொடுத்திருந்தாலே கூட அவகாரியத்தை நல்லவிதமா முடிச்சிருக்கலாமே. நமக்கென்னன்னு இப்படியா வேடிக்கை பார்த்துக்கிட்டிருப்பாங்க? எது எப்படியோ அந்த தாமுதான் இப்ப எனக்கு இந்த சமூகத்தை விட உயர்ந்தவன். அவனுக்கு என்னோட நன்றியை நான் சொல்லணும்."

"நீ எந்த நாய்க்கும் நன்றி சொல்ல வேண்டாம். ஒழுங்கா உன் வேலைய பாரு. நன்றியாம் நன்றி." – திருவட்டக் கையோடு கோபிக்கிறாள் மகா.

''ஏம்மா அப்படிச் சொல்றே... நான் சொல்றதுல என்ன தப்பு இருக்கு?''

"என்னடா புரியாம பேசறே... அந்த தாமுக் கடன்காரன் ஒண்ணும் மந்தா மேல உள்ள மதிப்பு மரியாதைல காரியம் பண்ணலைடா எல்லாம் அந்த பானுவுக்காக."

''இருக்கலாம்... ஆனா ஒரு பொண்ணு சம்மதமில்லாம. யாரும் எதுவும் பண்ணிட முடியாதும்மா?''

"அப்ப சுசீலா சம்மதிச்சுதான் விபசாரி ஆனாளா?''

"அப்படின்னா...?''

"ஆமாம் அத்தான்... நான் கூட குழாயடியில எல்லாரும் பேசிக்கறதா கேள்விப்பட்டேன். அந்த தாமு அந்தப் பொண்ணை வைப்பாட்டியாக்கிக்க போறதா..."

"ஓஹோ... இவங்களா இவங்க சட்டசபைல தீர்மானம் போட்டு நிறைவேற்றிட்டாங்களோ...''

"டேய் என்னடா சுத்தறே... அந்தப் பொண்ணுக்கு வேற என்னடா வழி இருக்கு?"

"ஏன் இல்லே...?'' – கேள்விக் கனலுடன் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்ப ஆயத்தமானவனை அதிர்ச்சியுடன் பார்க்கிறாள் மகாலட்சுமி.

"எங்க கிளம்பிட்டே?"

"போய்ப் பாத்துட்டு வரேன்."

"போதும்டா. போய் உன் வேலைய பார். ஏற்கெனவே உன்னை வெட்டுவேன் குத்துவேன்னுகிட்டிருக்கறவன்கிட்ட எவளோ ஒருத்திக்காக போய் முட்டிக்க போறியா? நீ யார் மாமனா மச்சானான்னு கேப்பான். என்ன சொல்வே?''

மகாவின் கேள்வி மோகன்ராமை திணற அடிக்கிறது. ஆனால் கனகா அற்புதமாய் அதற்கொரு பதிலைச் சொன்னாள்.

"அத்தே... மாமன் மச்சான்தான் இதையெல்லாம் கேக்கணும்னு இருந்தா இந்த தேசத்துல ஒரு பொண்ணு கூட நல்லபடி இருக்க முடியாது. நல்ல பொறுப்புள்ள மனுஷன்கற ஒரு தகுதி போதும். நீங்க போங்க அத்தான். அந்தப் பொண்ணுக்கு நாம இருக்கோம்னு காட்டிட்டு வாங்க..."

மோகன்ராம் முதல் முறையாக கனகாவை சிலிர்ப்புடன் பார்க்கிறான். பிரமிப்புடன் பார்க்கிறான்.

இடையில் கத்தரித்தது ஒரு குரல்.

"மோகன்... ரொம்ப அவசரம். உன்னை தேசிகாச்சாரி கூப்டுக்கிட்டு வரச் சொன்னார்"

(தொடரும்)



''பத்திரிகை ஆபீஸ்ல சி.பி.ஐ. புகுந்துடுத்தாமே.''

''பின்னே, தினம் ஒரு கிலோ தங்கம் பரிசுன்னு போட்டி வெச்சா சும்மா இருப்பாங்களா?''

– ராதா வாசுதேவன்

ஹலோ

குட்மார்னிங்
சௌக்கியமா?
சாப்பிட்டியா?
என்ன கலர் புடைவை
இன்னிக்கு?
வேறு என்ன விசேஷம்?

தினந்தோறும்
உனக்கும் எனக்கும்
பேசுவதற்கு
இவற்றைத் தவிர
வேறு விஷயம்
ஏன் இல்லாமல் போகிறது?
நீ நீயாகவும்
நான் நானாகவும்
வேஷங்கள் களைந்து
சொற்களில் கரைவது
எப்போது என்று
யோசித்துப் பார்த்தேன்.
சொற்களே வெறும் பாவனைதான்
தூக்கி எறிந்துவிட்டு
மௌனம் கொண்டாடலாம்தான்
ஆனால்-
விலை கொடுத்து மாளலையே?
மூணு நிமிஷ மௌனத்துக்கு
ஒரு ரூபாய் ரேட்டாம்.
வேண்டாம், பேசிவிடு.

குட்மார்னிங்
சௌக்கியமா?
சாப்பிட்டியா?
என்ன கலர் புடைவை
இன்னிக்கு?
வேறு என்ன விசேஷம்?
வெச்சுடவா?

— குரோம்பேட்டை கவிராயர்



“கள்ளச்சாராயம் தொடர்பாக மாதந்தோறும் 1500 வழக்குகள் பதிவாகின்றன. மொத்தம் மூன்று மாதத்தில் 5,136 பேர் கைது செய்யப்பட்டனர்! இதில் ஆண்களும், பெண்களும் சரிசமமான எண்ணிக்கையில் உள்ளனர். நீதிமன்றம், அபராதம், சிறை என்று வாட்டி எடுத்துள்ளோம்! இனி கள்ளச்சாராயம் இப்பகுதியில் தலையெடுக்காது!” என்றார் செங்கை கிழக்கு எஸ்.பி.யான காந்திராஜன்.

ஆச்சர்யமாக இருந்தது'

விரிவாக 'ரிப்போர்ட்' தயாரானது.

“ஒரு வியூகம் வகுத்து, களத்தில் இறங்கினோம்! ஒவ்வொரு எஸ்.ஐ.யும் வாரம் மூன்று முறை ரெய்டு போக வேண்டும். இன்ஸ்பெக்டர் இரண்டு முறை. டி.எஸ்.பி. வாரத்திற்கு ஒரு முறை! பெரும் படையுடன் சென்று 'ரெய்டு' நடத்த வேண்டும் என்று திட்டமிட்டோம். போன வருஷம் 37 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தோம். ஒரு வருட சிறைவாசம்! இந்த வருடம் இதுவரை 13 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்துள்ளோம்!”

“உங்கள் போலீஸ்துறையிலேயே சாராயம்



• காந்திராஜன்

• கண்ணன் காலனி

“அரசியல் தலையீடுகள் வந்திருக்குமே?”

“வந்தது. அரசியல்வாதிகள் சிபாரிசுக்கு வந்தபோது, 'ஐயா உங்கள் தலைமை சொன்னதைத்தான் நாங்கள் செயல்படுத்துகிறோம். முதல்வர் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கச் சொல்லியுள்ளார். நாங்கள் அரசு சொல்வதைத்தான் செயல்படுத்துகிறோம். நீங்கள் தலையிட வேண்டாம்' என்று கூறினோம். அவர்களும் எங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. 'ஏதோ நம்ம ஆளுங்கதான்; முடிந்தவரை பாருங்க...' என்ற அளவில் சொல்லி, சென்றுவிட்டனர்!”

“கிட்டத்தட்ட பத்து மாதக்காலம் இதற்காகப் பாடுபட்டுள்ளோம். சுமார் 350 கிராமங்களைத் தேர்ந்தெடுத்தோம். இந்த கிராமங்களில் சாராயம் காய்ச்சுபவர்கள் யார்? இவர்களுக்கு உதவி வருபவர்களெல்லாம் யார்? ஃபைனான்ஸ் கொடுப்பவர்கள் யார்? அரசியல் தொடர்பு இருக்கிறதா? என்றெல்லாம்

காய்ச்சுபவர்களுக்கு உதவுபவர்களும், மாமூல் பெறுபவர்களும் ஆங்காங்கே உள்ளதாகப் பேச்சு இருக்கிறது...”

“மறுக்கவில்லை. இப்படி உதவும் போலீசார் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆறு போலீசாரின் மேல் கிரிமினல் வழக்கே தொடுத்துள்ளோம்! முப்பது பேரை தவறான நடத்தைக்காக இடமாற்றம் செய்துள்ளோம். இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ. அளவில் பத்து பேரை 'சஸ்பெண்ட்' செய்து நீதி மன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்தியுள்ளோம். ஆறு போலீஸ் ஸ்டேஷன்களில் ஒட்டு மொத்த போலீசாரையும் இடமாற்றம் செய்துள்ளோம். முடிந்தவரை சமரசப் போக்கிற்கு இடமின்றியும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்புடனும் எங்களால் ஆனதைச் செய்திருக்கிறோம். இத்தொழிலில் ஈடுபட்டிருந்த 25 பெண்களைத் திருத்தி, மீட்டு,

தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தந்துள்ளோம். மற்றவைகளை நீங்களே அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்த்து, விசாரித்து தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். நடவடிக்கை எடுக்கி றோம்" என்றார்.

சரி என்று கிளம்பினால், ஆரம்பமே பயங் கர அதிர்ச்சி!

முதலாவதாக நாம் சென்றது, மீனம் பாக்கத்திலுள்ள எம்.ஜி.ஆர். நகர் குடியிருப்பு ப்குதி. அங்குள்ளோரிடம் விசாரித்தபோது முகவரில் பேசுவதற்கு மிகவும் தயக்கம் காட்டினர். ஒருவாறாக அந்தப்பகுதியில் உற்சாக மான, துடிப்புள்ள இளைஞர் ஒருவரைத் தேடிக் கண்டுபிடித்தோம். அவர் பேசும் போதே குப்பென்ற சாராயநெடி நம்மைத் திணறடித்தது!



"சாராயத்தை ஒழிக்கிறதா? உன்னாலும் முடியாது! உங்கொப்பனாலும் முடியாது!"

"சார், நாங்கெல்லாம் கூலி வேலை செய்யற வங்க. வாழ்க்கையில் நல்ல செய்தியும், கெட்ட செய்தியும் மாறி மாறி வருது.. குடிக்காம இருக்க முடியுமா? அட, விக்கிறவனை கைது பண்ணிட்டுப் போறான் போலீசு... அங்கிட்டும், இங்கிட்டுமா கெடைச்சு வந்தது... இப்ப எங்கிட்டாச்சும் போயி வாங்கிக் குடிச்சுத்தான ஆவணும்...! சார் நானும் தி.மு.க.காரன்தான்... எங்காளுங்க எப்படியாச்சும் பூந்து கொண்டாந் திடுவாங்க... அரசியல்வாதிங்ககிட்ட போலீசு விளையாட்டெல்லாம் முழுசா எடுபடாது.. ஏதோ பாதிக்குப் பாதி கண்ட்ரோல் ஆகி யிருக்குது... சில போலீசுக்காரங்க துட்டுக்கெல் லாம் மசியாம, புடிச்சுட்டுப் போகத்தான் செய்யறான். ஆனாலும் முடியுமா?" என்று கண் சிமிட்டினார்.

அடுத்து, ஆதம்பாக்கத்திலுள்ள கண்ணன் காலனி. அந்தி சாயும் நேரத்தில் குடிசையோரம் குந்தியிருந்த ஒரு பெண்ணைச் சுற்றி ஏராளமான ஆண்கள். அனைவரும் கூலித் தொழிலாளர்கள். ஒவ்வொருவரும் சில்வர்கிளாஸில் வாங்கி மடமடவென்று வயிற்றுக்குள் இறக்கினர். தலை சுற்றச் செய்தது சாராயநெடி!

"என்னங்க, போலீஸ் இவ்வளவு ரெய்டு பண்ணியிருக்கு... நீங்க என்னடான்னா..." என்று முடிப்பதற்குள்,

"குடிப்பவன் இருக்கிற வரை விற்பவனும் இருப் பான்" என்றார் அங்கிருந்த குடிமகன் ஒருவன்.

"யாருப்பா... கேள்வி யெல்லாம் கேட்டுகினு... ஆ... நீ பத்திரிகையா... எழுதிக்கோ... சாராயம் குடிச்சாங்க... வித்தாங் கன்னு! நீ ஒழிச்சுடுவியா? ஒன்னும் முடியாது... உன் னாலும், உங்கொப்பனா லும், உன் தாத்தன் வந்தா லும் ஒழிக்க முடியாது..." என்று பேசிக் கொண்டே வந்தவர் உணர்ச்சிவசப் பட்டு நம் முகத்தருகே வந்து விரல் சொடுக்கி சொன்னார்.

'எம் பேரு ராம கிருஷ்ணன், முழுவிலாச மும் சொல்றேன்... நீ இதை ஒழிச்சிட்டா நான் பொம்பளை, நீ ஆம்பிளை சரிதானா?"

இதற்கிடையே அங்கு ஜரூராக வியாபாரம் செய்து கொண்டிருந்த அந்தப் பெண்மணி இடத்தைக் காலி செய்து, பரபரப்பாக சந்து பொந்துகளில் புகுந்து சென்று மறைந்தார்!

"இன்னும் கொஞ்ச நேரம் காத்திருந்தால் போலீசுகாரனுவ வந்து காசுவாங்கிட்டுப் போறதையும் நீ பார்க்கலாம்" என்றார் ஒருவர்.

சென்னை புறநகர் பகுதியான மாதுவரம் சென்றோம். சாராயத்திற்குப் பேர் போன இடம். அங்கு சென்று நாம் தேடிய போது வழக்கமாக முன்பு சாராயம் விற்றுக் கொண்டிருந்த இடங்களிலெல்லாம் ஆட்களே தட்டுப்படவில்லை. ஒவ்வொரு தெருவாகச் சுற்றி வந்தபோது, எதிரே தள்ளாடிக் கொண்டே ஒரு குடிமகன் வருவதைப் பார்த்து, "தலைவா இங்கு இன்னமும் சரக்கு கிடைக்



"நம்ப காதல் டெவலப் ஆகி கல்யாணம் வரைக்கும் வர சுண்டல்காரன்தான் காரணம் என்கிறது உண்மைதான். அதுக்காக நம்ப கல்யாணத்துக்கு வர்றவங்களுக்கு ஒரு பாக்கெட் சுண்டல் தரணும்னு நீ சொல்றது நல்லாயில்லே!"

— திருச்சி எம். மல்லிகா

குதா?" என்றோம்.

நின்று ஒரு நிமிஷம் ஏற இறங்க நிதானமாகப் பார்த்தவர், "பாத்தா டீசண்டா இருக்கிற... போயி ஒயின்ஷாப்புல வாங்கி குடிக்க வேண்டியதுதானே? எங்கள மாதிரி ஏழைப்பட்டவங்க வேற வழியில்லாம பட்டையடிக்கிறோம்... உனக்கெதுக்கு ராசா..." என்றார்.

நாம் 'சரக்கு' வாங்க வந்ததாக அவரை நம்ப வைத்ததும், "அப்படிங்கிற! சர்த்தான் இப்படி லெப்டுல போயி ரைட்டுல திரும்பு... அங்க எல்லாரும் இருப்பாங்க" என்றார். அவர் சொன்ன இடத்திற்கு சென்றபோது சில பெரிசுகளும், இளைஞர்களும் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். நம்மைப் பார்த்தவுடன், "சரக்கா வேணும்? எல்லாம் காலியாயிடுச்சே! ஒரு அரைமணி முன்னாடி வந்தா இருந்திருக்குமே" என்றனர். நாம் நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

"அது எப்படிங்க வுட முடியும்? சாப்பாடு இல்லாட்டியும் குடிவேணுங்க நமக்கெல்லாம்! வசதியுள்ளவன் ஒயின்ஷாப்புக்குப் போறான். இல்லாதப்பட்டவன் இப்படி குடிச்சழியிறான்."

"இதுல பேட்டரிசெல், அழுகியபழங்கள், விஷத்தன்மையுள்ள வேலம்பட்டையெல்லாம் கலந்து தயாரிக்கிறாங்களாமே... இது ஒடம்புக்கு ரொம்ப தீமையாச்சே?"

"அது, எதுவானாலும் என்ன? நாங்க குடிக்காம இருக்க முடியாது. எங்களால் முடியல. எத்தனையோ பேரு எத்தினி தடவ 'இனி குடிக்கமாட்டேன்'னு சத்தியம் பண்ணி மாறியிருக்கான் தெரியுமா? போலீசு 'ரப்சர்' தாங்காம சில நாள் கெடைக்காம தட்டுப்பாடா ஆயிடுச்சு. அவனவனும் இங்க துடிச்சுப் போயிட்டான். சில பேரு பெயிண்ட் அடிக்கிற வார்னீஸ், அப்புறம் தின்னர் இதெல்லாம் வாங்கிக் குடிச்சு வாந்திபேதி வந்து ஆசுபத்திரி போனான்..."

"ஐயா... போலீசுக்காரனுகளுக்கு மெடல் வாங்கணும், நல்ல பேர் எடுக்கணும். அதுக்கு எங்க பொழைப்புல ஏன் மண் அள்ளிப் போடணும்? பணக்காரன் வாங்கி சாப்புடுறானே, ஒயின்ஷாப்பு! அத மூடவேண்டியதுதானே? ஒயின்ஷாப்போட பார் வைக்கக் கூடாதுன்னு சட்டமே இருக்கு. ஆனா நாட்டில எல்லா ஒயின்ஷாப்புக்குள்ளேயும் சின்ன ரூம் இருக்கத்தான் செய்யுது. எல்லாந்தான் நடக்குது. நியாயம்னா எல்லாருக்கும் ஒன்னுன்னுதான் இருக்கணும். நாங்களும் ஒயின்ஷாப்புல குடிக்க ஆசை... முடியுதா? பாவப்பட்ட ஏழைக, இந்த பாடாவதிய குடிச்சழியுறோம்..."

பேசிக் கொண்டே வந்தவரின் கண்களில் கண்ணீர் திரையிட்டது... குரல் கரகரத்தது. கையெடுத்துக் கும்பிட்டபடி சொன்னார்... "இந்தக் கள்ளச் சாராயத்த குடிச்சு என் சித்தப்பன் புள்ள செத்தான், மாமன் மகன் செத்தான்... எங்கள்ல எவ்வளவோ பேருக்கு ஒடம்பு நாசமாப் போகுது. ஆனாலும் வுடமுடியலியா... அரசாங்கமே சாராயக்கடை தொறந்து நல்ல சரக்கா கொடுத்தா ஆயிரம் முறை நன்றி சொல்வோம்யா(!)" என்றார்.

"பெரிசு ரொம்ப அய்வாத... இப்ப அய்து என்னவாகப் போகுது? சும்மா கெட....." என்று சிலர் அவரை ஆசுவாசப்படுத்தினர்.

"முற்றிலும் ஒழித்துவிட்டதாகச் சொன்னீர்களே, நிலைமை இப்படியல்லவா இருக்கிறது!" என்று மறுபடி காந்திராஜனை சந்தித்துக் கேட்டபோது, "அதிர்ச்சியாக இருக்கிறது! நான் முன்பே சொன்னது போல, கள்ளச் சாராயத்தைத் தீவிரமாக ஒழிக்க அதிகபட்ச முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். ஒழித்து விட முடியும் என்று முழுமையாக நம்புகிறோம். ஆனால் எங்கள் துறையிலேயே சில புல்லுருவிகள் இன்னும் களையெடுக்க இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. விரைவில் அதற்கு ஆவன செய்யப்படும்" என்றார்.

— ஆர். கண்ணன்

படங்கள் : **சிநேகிதன்**

திருப்பதிக்கு லட்டு

எனக்கு நானேதான்!

"தினசரி நூற்றுக் கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நீங்கள், உங்கள் உடம்புக்கு ஏதாவதென்றால் எந்த டாக்டரிடம் போய் சிகிச்சை பெற்றுக் கொள்வீர்கள்?'' என்றோம் டாக்டர் ஜெ.பி. ராஜ்குமாரிடம்.

"ஓ! திருப்பதிக்கே லட்டா!" என்று சிரித்தவர் தொடர்ந்தார்.

''நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சதவிகித நோய்கள் சாதாரணமாக எல்லோருக்கும் வரக்கூடிய நோய்கள்தான் என்பதால் அந்தந்தத் துறை ஸ்பெஷலிஸ்டுகளைத் தேடி ஓட வேண்டிய அவசியமில்லை. இவற்றையெல்லாம் எல்லா டாக்டர்களாலுமே குணப்படுத்த முடியும். அந்த வகையில் எனக்கோ அல்லது எனது குடும்பத்தாருக்கோ நானேதான் சிகிச்சையளிக்கிறேன். வேறு ஒருவரைத் தேடிப்போவதில்லை. எனக்கு சர்க்கரை வியாதி உண்டு. எனக்கு நானேதான் சிகிச்சை!



• ராஜ்குமார்

"அண்மையில் கூட எனக்குத் தெரிந்த ஒரு பெரிய அதிகாரியின் குடும்பம் ஒன்று பல இடங்களுக்கும் சுற்றுலா சென்று வந்தது. சென்ற இடத்தில் அந்தக் குடும்பத்திலுள்ள ஒருவருக்குக் காய்ச்சல் வந்திருக்கிறது. அது டைபாய்டு என்று சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறது. இங்கே வந்தும் குணமாகாததால் என்னிடம் ஆலோசனை கேட்டார்கள். நான் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, அது டைபாய்டு இல்லை; சாதாரணக் காய்ச்சல்தான் என்று அதற்கான மருந்துகளை மட்டும் கொடுத்தேன். உடனே குணமாகி விட்டது!

"இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் ஒரு சாதாரணக் காய்ச்சல் வந்துவிட்டாலே, இப்போது நோயாளிகளே அது டைபாய்டாக இருக்குமோ, நிமோனியாவாக இருக்குமோ என்று டாக்டர்களிடம் சந்தேகம் கேட்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அதனால் டாக்டர்களும் எதற்கு வம்பு என்றோ, அல்லது நோயாளிகளைத் திருப்திப்படுத்தி விட வேண்டுமென்றோ பல்வேறு டெஸ்டுகளையும் செய்து பார்த்து விடுகிறார்கள்.

இவையெல்லாம் என்னைப் பொறுத்த வரை தேவையில்லாத ஒன்று. ஆனால் டாக்டர்கள் இப்படிச் செய்யாமலிருப்பதற்கு நோயாளிகளும் ஒத்துழைக்க வேண்டும். டாக்டர்களிடம்



"நீயா இருந்தா மூப்பது நாளில் மூப்பது கோடியை எப்படி செலவு செய்வே....?"

"ரொம்ப சிம்பிள்; ஒரு நல்ல பைனான்ஸ் கம்பெனியா பார்த்து டெபாசிட் பண்ணுவேன்.....!"

— ரமேஷ்ராமன்



"மூக்குலேர்ந்து தண்ணிரா கொட்டுதுன்னு சொன்னிங்களே, இனிமே கொட்டாது; 'டைட்'டா மூடி வெச்சுட்டேன்!"


— பாஸு

"பெண்ணோட அப்பா ஒரு வடிகட்டின கஞ்சனாச்சே, 'இவரு எப்படி மூணு விதமான ஸ்வீட் போடறேன்னு ஒத்துக்கிட்டாரு'ன்னு அப்பவே நான் சந்தேகப்பட்டேன்."

"இப்ப என்ன! மூணு விதமான ஸ்வீட் போட்டாரா, இல்லையா?"

"ஓ! போட்டாரே! ஒரு சாக்லேட், ஒரு குச்சி மிட்டாய், ஒரு அரிசி மிட்டாய்!"

– தக்கோலம் அன்புமணி



போன அடுத்த ஒரு மணி நேரத்திலேயே நோய்கள் குணமாகிவிட வேண்டும் என்று எதிர்பார்க்காமல் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்.


"ஒரு நோயாளி தலைவலி என்று வந்தால், அந்தத் தலைவலி எதனால் வந்தது? எப்படி வந்தது? ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தான் வருமா? அடிக்கடி வருமா? இதுவரை எத்தனை முறை வந்தது? இப்படிப் பல்வேறு வகையான கேள்விகளையும் கேட்டுப் பொறுமையாகத்தான் சிகிச்சையளிப்பேன். இதற்கு நோயாளியும் ஒத்துழைக்க வேண்டும். அப்போது பிரச்னை இல்லை. ஆனால் அந்த நோயாளி அடுத்த நிமிஷமே தலைவலி குணமாக வேண்டும் என்று நினைப்பவரானால் என்ன செய்வார் டாக்டர்? ஒருவேளை தலையில் ஏதாவது கட்டி இருப்பதால்தான் தலைவலியோ என்று உடனடியாக ஒரு சிடி. ஸ்கேன் எடுத்துப் பார்த்து விடலாம் என்பார்! அதற்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு! இப்படிப்பட்ட தலைவலி ஆயிரத்தில் ஒருவருக்குத் தான் இருக்கும் வாய்ப்பு என்பதால் ஆயிரம் பேரையும் ஸ்கேன் எடுத்துப் பார்க்க வேண்டுமா என்ன?

"ஒரு சம்பவம் சொல்கிறேன். வங்கத்திலிருந்து ஓர் இளைஞர் வங்கிப் பயிற்சிக்காக இங்கே வந்திருந்தார். நண்பர்களோடு எங்கோ வெளியில் சென்றிருக்கிறார். சென்ற இடத்தில் காலில் காயம் ஏற்பட்டுவிட்டது. உடனே ஒரு பெரிய மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். அங்கே எக்ஸ்-ரே முதற்கொண்டு பல சோதனைகளையும் செய்து பார்த்துச் சிகிச்சையளித்திருக்கிறார்கள். அடுத்த நாள் மலப் பரிசோதனையும் செய்ய வேண்டும் என்றார்களாம். என்னிடம் வந்து 'காலில் ஏற்பட்ட ஒரு சிறு காயத்திற்கு இத்தனை சோதனைகள் செய்ய வேண்டுமா?' என்று கேட்டார். நான் அந்தக் காயத்தைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, 'நீங்கள் இதற்காக மருத்துவமனைக்கே சென்றிருக்கத் தேவையில்லை. காயத்தைச் சுத்தமான தண்ணீரால் கழுவிவிட்டு ஒரு பிளாஸ்திரியைப் போட்டிருந்தாலே குணமாகியிருக்கும்!' என்றேன்.

"ஆக, நான் முன்பே சொன்னபடி நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சதவிகித நோய்கள் சாதாரணமானவைதான் என்பதால் எல்லா டாக்டர்களாலுமே அதற்கு சிகிச்சையளிக்க முடியும். ரொம்பவும் அபூர்வமாகச் சில நோய்கள் பற்றி மற்றவர்களிடம் கன்சல்ட் செய்வோம். இருதய நோய்கள் பற்றி நான் கன்சல்ட் செய்ய நேர்ந்தால் எனது நண்பர் டாக்டர் சிவகடாட்சத்திடம் செய்வேன். மற்றபடி எனக்கு நானேதான்!"

— பிரின்ஸ்

படம் : ஸ்ரீஹரி


• டோனி பிளேர்

மேஜர் மைனர் ஆனார்!


நெம்பர் 10, டௌனிங் தெரு – முகவரியில் இப்போது ஒரு புதிய குடித்தனக்காரர்.

டோனி பிளேர் (43 வயது).

இங்கிலாந்தில் கன்ஸர்வேடிவ் கட்சியை (ஜான் மேஜர்) கன்னா பின்னா என்று பின்னுக்குத் தள்ளி விட்டு 'இப்படியும் ஒரு வெற்றியா?' என்று எல்லோரையும் மூக்கில் விரல் வைக்கச் செய்து விட்டார் பிளேர்.

பிரிட்டன் பொதுத் தேர்தலில் தொழில் கட்சிதான் (லேபர் பார்ட்டி) வெற்றிபெறும் என்பது கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு முன்பே முடிவான விஷயம். கருத்துக் கணிப்பு அப்படித்தான் சொன்னது

சென்ற ஆண்டு செப்டம்பர் 20, 23 தேதிகளில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே 52 சதவீதம் லேபருக்கு நாளாக ஆக மேஜர் மைனராகிப் போனார்!


• ஜான் மேஜர்

மேஜர் ஆட்சியின் மீது அப்படி என்னதான் வெறுப்பு மக்களுக்கு?

பொருளாதாரம் என்னவோ மேல் நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தது. பணவீக்கம் குறைந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் கூட இறங்கு முகம்தான்!

இருந்தாலும் 'இனி மேஜர் லாயக்கில்லை' என்று பொதுமக்கள் முடிவு கட்டக் காரணம் இல்லாமல் இல்லை.

முக்கியமாக, கன்ஸர்வேடிவ் கட்சி எம்.பிக்கள் சிலர் புண்ணியம் கட்டிக் கொண்டார்கள்.

ஸ்காட்லாந்து எம்.பிக்கள் இரண்டு பேரை மீடியா நார் நாராய்ப் பிய்த்து எடுத்து விட்டது.

மார்ச்சண்ட் என்ற எம்.பிக்கும், இரவு விடுதியில் பணிபுரியும் ஒரு பதினேழு வயது பெண்ணுக்கும் இருந்த 'தொடர்பு' அம்பலமானது.


ஸர் மைக்கேல் ஹிர்ஸ்ட் என்று இன்னொரு எம்.பிக்கு ஓரினச் சேர்க்கையில் ஈடுபாடு உண்டு. எய்ட்ஸ் யுகத்தில் இவரை வெளிச்சம் போட்டுக் காட்ட இந்த ஒரு 'யோக்யதை' போதாதா?

கண் கலங்கிய குமரியார்!



மூப்பனார் பிரதமர் ஆகும் வாய்ப்பு இருப்ப தாகத் தெரிந்தவுடன், குமரி அனந்தன் தில்லிக்கு வந்தார். ஆளுயர மாலையை மூப்பனாருக்குப் போட்டு விட்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். மூப்பனார் குமரியாரைக் கண்டு கொள்ளவில்லை! சுற்றியிருந்தவர்களும் கிண்டலடித்தார்களாம். பாவம், குமரியார் கண்கலங்கிப் போய் பேசாமல் திரும்பிவிட்டார்!

தில்லி புறநகர் ஓக்லாவில் ஒரு தொழிற்சாலை நடத்தி வருகிறார் சதீஷ் குஜ்ரால்; பிரதமரின் சகோதரர். இவரது தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவதில் தில்லி மின்விநியோகத் துறை இழுத்தடித்துக் கொண்டிருந்தது. ஒருவர் 20,000 ரூபாய் லஞ்சம் வேறு கேட்டார்! கொடுக்காததால் கோர்ட்டுக்கு இழுத்து விடும் நோக்கத்தோடு, மீட்டர் ஸீல்களை உடைத்து விட்டுப் போனார் அந்த ஊழியர்! அதற்குள் குஜ்ரால் பிரதமர் ஆகிவிடவே, இப்போது அவரே நேரிடையாகத் தலையிட்டு, தில்லி முதல்வரிடமும், ஆளுநரிடமும் இது விஷயமாகப் பேசியிருக்கிறார்!



பல அயல்நாட்டுப் பத்திரிகைகள், பிரதமர் குஜ்ரால் பாகிஸ்தானில் பிறந்தவர் என்பதால், அவரை முஸ்லிம் என்றே குறிப்பிடுகின்றன!

பிரதமராகப் பதவி ஏற்ற குஜ்ரால் முன்னால் போக, பின்னால் வந்த சீதாராம் கேசரி, உள்துறைச் செயலர் பத்மநாபய்யாவை ஒரு 'பிடி' பிடித்துவிட்டார். தன்வார் கொலைக்குற்றத்தில் தம்மை எப்படி இழுக்கப்போயிற்று என்று பத்மநாபய்யாவிடம் சரமாரியாகக் கேள்விகள் கேட்டாராம் கேசரி! கேசரியின் 'ஆதிக்கம்' ஆரம்பித்து விட்டதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன!

– நியூஸ்வாலா

தில்லி நியூஸ்:

இது இப்படியிருக்க 'பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்ப சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பணம் வாங்குகிறார்கள், மேஜர் கட்சி எம்.பிக்கள்' என்று ஒரு குற்றச்சாட்டு பூதாகாரமாக உருவெடுத்தது. ஒரு வாரம் இப்பிரச்னை, அடுத்த வாரம் எம்.பிக்களின் ஒழுக்கக்கேடு என்று இரண்டு வாரம் சமீபத்தில் இங்கிலாந்து பாராளுமன்றம் இரண்டு பட்டது.

வேலையில்லாத திண்டாட்டம் குறைந்தது என்றாலும் புதிதாக உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் குறைந்த சம்பளம் கொண்ட பகுதி நேர வேலைகள்தாம் என்பதில் பொது மக்களுக்கு அதிருப்தி.

ஜான் மேஜர் இன்னொரு தப்பு செய்தார். 'மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாங்கள் என்னென்ன செய்வோம்' என்று பிரசாரம் பண்ணுவதை விட்டு விட்டு, 'தொழில்கட்சிக்கு வோட்டுப் போட்டு ஏமாந்து போகாதீர்' என்பது மாதிரியான எதிர்மறை அணுகுமுறையைக் கையாண்டார்.

டோனிபிளேர் சமர்த்து. 'அப்படியா சமாசாரம்?' என்று 'லேபர் கட்சி வந்தால் இது இது செய்வோம்' என்று பட்டியல் போட்டார். பிரசாரத்தில் சின்னக் குறையை யார் சொன்னாலும் உடனே திருத்திக் கொண்டார். டோனி ஒரு புன்னகை மன்னன். வாய் நிறைய சிரிப்பார். அது அவர் சுபாவம். 'வேண்டாம் சாமி, இந்த சுபாவம் சில சமயம் மக்களுக்கு எரிச்சல் ஊட்டக்கூடும்' என்று ஆலோசகர்கள் சொல்ல, பிரசாரத்தின் இறுதி கட்டத்தில் கிட்டத்தட்ட நரசிம்மராவ் அளவுக்கு வந்து விட்டார்!

இன்று ஆங்கிலேயர்களின் நம்பிக்கைச் சின்னம் டோனி பிளேர்.

முடிவுகள் வெளிவரத் தொடங்கியதுமே டௌனிங் தெரு பத்தாம் நெம்பரில் ஜான் மேஜரின் பெட்டி படுக்கைகள் சுற்றப்பட்டு விட்டன.

அவர் தம் அதிகாரபூர்வமான அரசு காரில் பக்கிங்ஹாம் அரண்மனைக்குப் போய் மகாராணியிடம் தம் ராஜினாமாவைச் சமர்ப்பித்து விட்டு, சாதாரண காரில் திரும்பினார்.

வீடு காலி செய்யப்பட்டது.

புதியவர் குடியேறி விட்டார். எல்லாம் சில மணி நேரங்களில். அரசியல் மாற்றங்கள் இவ்வளவு சுமுகமாகக் கூட இருக்க முடியுமா என்ன?

இதையெல்லாம் பி.பி.ஸி. நேரடியாக ஒளிபரப்பியபோது, நாம் கண்டவை காட்சியாக இல்லை. கவிதையாக இருந்தது!

– ராணிமைந்தன்



தயாராகிவிட்டது! ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் சென்ற ஆட்சி காலத்தில் செய்த ஊழல்களை விசாரிப்பதற் கான தனி சிறப்பு நீதிமன்றம் தயாராகி விட்டது!

ஸ்தாபித்தவர்களில் ஒருவராகவும், மிகச்சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்த ம. சிங்கார வேலரின் பெயர்சூட்டப்பட்டுள்ள இந்த மாளிகை, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத் திற்காகத்தான் கடந்த டிசம்பரில் முதல்வர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் முதல் தளத்தில்தான் சிறப்பு நீதி மன்றம் நிறுவுவதற்கான வேலைகள் படு துரிதமாக நடந்து வருகின்றன. மூன்று நீதி மன்ற அமர்வுகள் இதில் உள்ளன. நாம் அங்கு சென்று பார்த்தபோது, வலதுபுறத்தில் ஒன் றும், இடது புறத்தில் இரண்டுமாக நீதிபதி அமர்வுக்கான திடல் அமைக்கப்பட்டிருந்தது. ஜன்னல்கள் பொருத்தும் பணி நடந்து கொண் டிருந்தது. ஏறத்தாழ 3.5 குளிர்சாதனக் கருவி கள் தருவிக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த பொறியாளர்களும், காண்ட்ராக்டர்களும் நாம் எவ்வளவு கேட்டும் பேச மறுத்து விட்ட னர். 'இன்னும் நான்கைந்து நாட்களில் வேலை கள் முழுமைபெற்றாக வேண்டும் என்ற

தயாராகிவிட்டது, தனி நீதிமன்றம்!

சென்னை ராஜாஜிசாலையில் துறைமுகத் திற்கு எதிர்ப்புறத்தில், மிகச் சரியாகச் சொல் வதானால் 'சென்னை துறைமுகப் பணியாளர் கூட்டுறவு வங்கி'யின் நேர் எதிரில் – புத்தம் புதிய அழகான கட்டடம். இந்தியாவில் பொதுவுடைமை [illegible]யக்கத்தை

அவசரகதியில் இயங்குகிறோம்' என்று மட் டும் சொன்னார்கள்! இந்த வேலைகள் முடிந்தவுடன் நவீன மேசை, நாற்காலிகளும், ஜெராக்ஸ் சாதனங்களும் தருவிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தின் நெரிசலில்லை. நீண்ட நெடிய படிக்கட்டு களில் ஏறி இறங்கிடும் சிரம மில்லை. முதல் தளத்திற்கு அலுங்காமல் லிப்டில் சென்று வரும் வசதி. ஏற்கெ னவே மூட்டுவலியால் அவதிப்படும் 'ஜெ'க்கு இது ஒரு சிறப்பான ஏற் பாடே!

நீண்ட நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிடும் சிரமமில்லை. முதல் தளத்திற்கு அலுங்காமல் லிப்டில் சென்று வரும் வசதி. ஏற்கெனவே மூட்டுவலியால் அவதிப்படும் 'ஜெ'க்கு இது ஒரு சிறப்பான ஏற்பாடே!



சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப் பட்டுள்ள நீதிபதி ராதா கிருஷ்ணன், நீதிபதி

சம்பந்தம், நீதிபதி அன்பழகன் ஆகிய மூவர் பற்றியும் அனைத்து வழக்கறிஞர்கள் மத்தியிலும் நல்ல பெயர். 'ரொம்பவும் நேர்மையானவர்கள். துணிச்சலானவர்கள்!' என்று புகழ்கிறார்கள். நீதிபதி சம்பந்தம் ஏற்கெனவே பல வழக்குகளில் துணிச்சலான, சிறப்பான தீர்ப்புகளை வழங்கி இந்திய அளவில் பேசப்பட்டவர். குறிப்பாக வழக்கறிஞர் விஜயன் வழக்கில் சம்பந்தப்பட்ட ஆதிராஜாராமுக்கு, 'ஜெ' ஆட்சியில் வாரியத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அதை எதிர்த்து ஒட்டுமொத்த வழக்கறிஞர் சமூகமும் கொதித்தெழுந்து வழக்குத் தொடுத்த போது, 'வழிப்பறிக் கொள்ளையர்களுக்கெல்லாம் வாரியத் தலைவர் பதவி வழங்க முன்வரும் அரசாங்கத்தின் செயல் கண்டனத்திற்குரியது' என்று தீர்ப்பு வழங்கியவர் என்று வழக்கறிஞர்கள் பெருமிதமாகப் புகழ்கிறார்கள்.

மேலும் இவர் மிகச் சிறந்த 'இண்டலெக்சுவல்'. 'இளம் குற்றவாளிகள்' குறித்து இவர் எழுதியுள்ள சட்டப் புத்தகம் மற்ற அனைத்து நீதிபதிகளுக்கும் வழிகாட்டும் புத்தகமாகத் திகழ்கிறது.

நீதிபதி வி. ராதாகிருஷ்ணன் தடா கைதிகளை விசாரிக்கும் வழக்கில் புகழ் பெற்றவர். நீதிமன்ற வளாகத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவர்களை அழைத்துவரும்போது, 'விலங்கிட்டு அழைத்து வரக்கூடாது; மனித நேயத்தோடு போலீசார் செயல்பட வேண்டும்' என்று எச்சரித்தவர்.

நீதிபதி அன்பழகன் சமீபகாலத்தில் அதிகமாகப் பேசப்படுபவர். சசிகலா மற்றும் முன்னாள் அமைச்சர்கள், ஜெயலலிதா தொடர்பான வழக்குகளையும், இந்தியன் வங்கி தொடர்பான வழக்குகளையும் ஏற்கெனவே கவனித்து வருபவர். சென்னை பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் கூடுதல் தலைமைப் பெருநகர மாஜிஸ்திரேட்டாக சமீபகாலம் வரை பணியாற்றியுள்ளார்.



• தனி நீதி மன்றம் இயங்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்...

தனி நீதிமன்றங்கள் மூன்றும் சந்திக்கவுள்ள வழக்குள் மொத்தம் 46. இதில் 'ஜெ' தொடர்பானவை ஏழு. வழக்குகளுக்கான கால நிர்ணயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

- எஸ்.ஆர்.கே.



ஒரு நகைச்சுவைக் கச்சேரி!

●● பொழுது விடிவதற்குக் கொஞ்ச நேரம் முன்னால் தொடங்கி, சுமார் ஏழு, ஏழரை வரைக்கும் ஜெமினி டீவி பாருங்கள். திருத்தல யாத்திரை, கும்பாபிஷேகம், பூஜை புனஸ்காரம் என்று தெய்வீகத்தை ஃபில்டர் பண்ணித் தெளிக்கிறார்கள். பின்னணியில் மேலும் பரவசப்படுத்த சகஸ்ரநாமம், லிங்காஷ்டகம் என்று பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட கேஸட்டுகள்! இதையெல்லாம் பார்த்து விட்டு, இருக்கிற சானல்களிலேயே பழமானது ஜெமினிதான் என்று சூடம் ஏற்றி சத்தியம் பண்ணத் தோன்றும். செய்யுங்கள்; தப்பில்லை. அதற்கு முன் ஒருதரம் இதே ஜெமினியை ராத்திரி பதினோரு மணிக்கு அப்புறம் ஒரு பார்வை பாருங்கள். கால், அரை, முக்கால் (நல்லவேளை, இன்னும் முழுசைத் தொட வில்லை) நிர்வாண நடன மசாலாக்கள். அடிக் கிற கூத்தில் ஜுரம் வந்து விடும். விடிய விடிய ஆட்டம் போட்டுவிட்டு, அதிகாலை பக்திப் போர்வை!

●● வியாழக்கிழமை உங்கள் சாய்ஸில் உமா யாரோ ஒருவரோடு தொ.பேசியில் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்டபோது காதில் விழுந்த சம்பாஷணை :

உமா : ஓ, உங்க ஒய்ஃப் உண்டாகி யிருக்காங்களா?

குரல் : ஆமாம் மேடம்.

உமா : ரொம்ப சந்தோஷமா இருப் பீங்களே.

குரல் : பின்னே?

உமா : ஒய்ஃப்கிட்ட ரொம்ப அன்பா நடந் துப்பீங்களா?

குரல் : அதுல என்ன சந்தேகம்?

உமா : ஒரே ஒரு ரிக்வெஸ்ட். என்ன குழந் தைன்னு ஸ்கேன் பண்ணி பார்த்துடாதீங்க சார்! சஸ்பென்ஸ் போயிடும்.

குரல் : ரொம்ப சரி.

உமாவுக்கு ஒரு ரிக்வெஸ்ட். நீங்கள் ஏன், நீங்களே பேசி போரடிக்காமல் பாட்டை முழுசாகப் போடக் கூடாது?

●● ஸ்டார் பிளஸ்ஸில் காலை நேர இந்துஸ் தானி கச்சேரிகள் எப்போதும் சுவாரஸ்யமாக இருக்கின்றன. மிகவும் சம்பிரதாயமாக அல்லாமல் அவை ஜனரஞ்சகமாக இருப்பதே அதற்குக் காரணம். வியா ழன் காலை பாடிய கஜல்காரர் இனிய இசையை மட்டுமல்ல; உயர்தரமான ஒரு நகைச்சுவைக் காட்சியையும் சேர்த்து அளித்தார். அவருக்குக் குரல் உச்சஸ்தாயிக்குப் போக மறுத்து, முரண்டு பிடிக்கிறது. இரண்டு, மூன்று முறை முயற்சிசெய்து பார்த்தார். ஒன் றும் சரிப்படவில்லை. பின்னால் தம்பூர் போட்டுக் கொண்டிருந்த சிஷ்யைக்குக் கண் ணைக் காட்டிவிட, 'மேலே' போகிற இடம் வரும்போதெல்லாம் இவர் சைலண்டாகி விட, அம்மணி தன் உச்சக் குரலில் ஒரு ரவுண்ட் அடித்து விட்டுக் கீழே வர, மீண்டும் இவர் பிடித்துக் கொண்டு விடுகிறார். கிரிக்கெட்டில் பை-ரன்னர் போல, இதில் பை-சிங்கர்!

●● 'எனக்கு ரசிகர் மன்றமெல்லாம் வேண் டாம். ஹீரோ, வில்லன் என்கிற தனித்தனி முத்திரைகள் வேண்டாம். என்னை என் இஷ் டத்துக்கு விடுங்கள். உங்களுக்கு விதவிதமான நடிப்பை நான் காட்டுகிறேன்' என்று விஜய் டீவியில் ரசிகர்களைப் பார்த்துக் கேட்டார் பிரகாஷ்ராஜ். 'பிரகாஷ்ராஜுடன் ஒருநாள்' என்று நிகழ்ச்சிக்கு டைட்டில் போயிருக்கிறது. ஷூட்டிங் ஸ்பாட்டில், வீட்டில், காரில் (முதல் படம் ஞாபகமாக டூயட் என்று எழுதி வைத் திருக்கிறார்) என்று கேமராவைத் தூக்கிக் கொண்டு ரொம்பவே அலைந்திருக்கிறார்கள். 'பிரகாஷை எப்படிக் கண்டுபிடித்தேன்' என்பது பற்றி பாலசந்தர் வேறு ஒரு மினி பேட்டி. சுவாரஸ்யமே அதில்தான். பிரகா ஷைக் கண்டுபிடித்ததை, முன்பு ரஜினியைக் கண்டுபிடித்ததோடு ஒப்பிடத் தொடங்கி, 'வேண்டாம்; எதற்குப் பொல்லாப்பு' என்று திணறி, சாமர்த்தியமாக அதை மாற்றி மறைக்க முயன்றார் கே.பி. நல்ல தமாஷ்!

– 'டிஷ்'

பற்றாக்குறை - 1,2,3!

'அப்பாடி! சிதம்பரம் திரும்பவும் நிதியமைச்சராகி விட்டார்... இனிமேல் கவலையில்லை'- தொழில்துறையினரின் நிம்மதிப் பெருமூச்சுக்குக் காரணமில்லாமலில்லை. மத்திய அரசின் நிதி நிர்வாகத்தைக் கடிவாளம் போட்டு இழுத்து, கட்டுக்குள் வைக்கும் சில சிறந்த நடைமுறைகளை அவர் பட்ஜெட்டில் அறிவித்திருந்தார். அந்த பட்ஜெட் அவர் போக்கில், கட்டுப்பாட்டில் விடப்படவேண்டும் என்ற ஆர்வம் தொழில்துறையினருக்கு இருப்பதில் ஆச்சர்யம் இல்லை.

நிதிப்பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக அரசு தன் இஷ்டத்துக்கு நோட்டு அச்சடித்தும் கடன் வாங்கியும் வந்தது. ரிசர்வ் வங்கி, இதையெல்லாம் எடுப்பார் கைப் பிள்ளையாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால், 'இனி இந்த நிலை மாறும்' என்கிறது ரிசர்வ் வங்கி. நிதியமைச்சகத்துடன் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்துள்ளது. இதைத்தான் ways & means position என்று நாளிதழ்கள் புகழ்ந்து வருகின்றன.

பேப்பரில் இதைப் பார்த்த சில வாசகர்கள், மேற்கொண்டு விளக்கும்படி நம்மைக் கேட்டு வருகிறார்கள்.

விஷயம் முழுமையாகப் புரிய வேண்டுமானால், 'பற்றாக்குறை'களில் எத்தனை வகை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

Revenue Deficit- அரசாங்க வருமானத்தில் பற்றாக்குறை.

Budget Deficit- போடப்பட்டுள்ள வரவு செலவுக் கணக்கில் விழும் துண்டு.

Fiscal Deficit-நிதிப் பற்றாக்குறை.

'எல்லாமே பணப்பற்றாக்குறைதானே? என்ன வித்தியாசம்..?' என்று கேள்வி வரும். இருக்கிறது வித்தியாசம்!

அரசாங்கத்துக்கு வரவு என்பது, வருமான வரி, கம்பெனி வரி, சுங்க வரி, தீர்வை முதலீடுகள் செய்வதால் பெறும் டிவிடெண்ட், மாநிலங்களுக்குத் தரப்படும் கடனுக்கான வட்டி - போன்றவை மூலம் கிடைக்கிறது.

அரசின் செலவுகள்: ஊழியர்கள், ராணுவம், அயல் நாட்டு தூதரகச் செலவுகள், கல்வி-சமூக நலத்திட்டங்கள், உணவு தானிய உர மானியங்கள், வாங்கிய கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி... ஆகியன. கடைசியாகக் குறிப்பிட்ட வட்டியே மொத்த செலவில் பாதிக்கு மேல் ஆகிவிடுகிறது. இப்படி வரவைவிட செலவு அதிகமாய் இருப்பதை Revenue Deficit என்கிறோம்.

நாட்டின் நீண்ட காலத் தேவை கருதி சில திட்டங்கள் போடப்படுகின்றன அல்லவா...? உதாரணமாக மின் உற்பத்தி திட்டங்கள், சாலை வசதிப் பெருக்கம் போன்றவை... இவற்றுக்கும் கணிசமாகச் செலவாகும். இவை நல்ல எதிர்காலத்துக்கான முதலீடுகள் என்பதால் இந்தச் செலவை Capital expenditure என்கிறோம்.

இந்த Capital expenditureக்காக அரசு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணிசமாகக் கடன் வாங்குகிறது. உலக வங்கி, ஐ.எம்.எஃப் கடன்களெல்லாம் இதற்குத்தான்.

அன்றாட வரவு செலவுக் கணக்கு, நீண்ட கால முதலீட்டுக் கணக்கு என இரு பிரிவுகளிலும் மொத்தமாக ஆகும் செலவு- இவை வருமானத்தையும் வாங்குகிற கடனையும் விட மிக அதிகமாய் இருக்கும். இவ்வாறு துண்டு விழும் தொகைதான் பட்ஜெட் பற்றாக்குறை.

நிதிப்பற்றாக்குறை என்பது குறுகிய கால செலவு + நீண்ட கால முதலீடு ஆகிய வற்றுக்கும் அரசின் வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வருவாய்க்கும் இடையே உள்ள வித்தியாசம்.

இந்தப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, சௌகரியத்துக்கேற்றபடி நோட்டு அச்சடித்துக் கொள்வது அரசின் வழக்கமாய் இருந்தது. இதனால் பணப் புழக்கம் அதிகமாகி விலைவாசி ஏறும்!

இனி, அப்படிச் செய்யக்கூடாது என்பதில் ரிசர்வ் வங்கி கண்டிப்புக் காட்டுகிறது. கண்டிப்புக் காட்ட அரசு அனுமதித்துள்ளது!

நிதியமைச்சகம் ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறக்கூடிய பணத்துக்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. இதைத்தான் ways & means position என்று குறிப்பிடுகிறார்கள்.

Ways & means என்றால் வழிமுறைகள். இந்த இடத்தில், 'நிதியைச் சேகரிக்கும் வழிமுறைகள்' என்று பொருள்.

இந்த வழிமுறைகளின் மீது கட்டுப்பாடு இருக்கும்போது, அரசின் அனாவசிய செலவினங்கள் 'ஆடோமாடிக்'காகக் குறைய வாய்ப்பு உண்டு. கூடவே புதிய நோட்டு அச்சடிப்பதற்கும் கட்டுப்பாடு உள்ளது என்பதால் விலைவாசியும் உயராதிருக்கும் என்பது எதிர்பார்ப்பு.

நம்பிக்கையுடன் இருப்போமே!

(அடுத்த வாரம்)

வி. கோபாலன்

இருபக்கச் சிறுகதை – 3

ஒத்தாசை



சூரியைப் பார்க்கப் போயிருந்தான். அந்த வார இறுதியில் ராஜனின் அப்பா சிராத்தம் வருகிறது. சாயி நிவாஸ், நம்பூதிரி பட்சணக் கடை என்று எல்லாப் பலகாரக் கடைகளிலும் அவருக்குப் பேரேடு போட்ட வரவு செலவு இருந்தது. அப்பா ஐம்பது வாளி நீர் இறைப்பார் தினமும். அவரைத் தூக்கவே சிரமப்பட்டார்கள்.

"நீங்க கேக்கறதை, கேட்டுட்டேள்... அவரும் மண்டைய மண்டைய ஆட்டிட்டார்... இதுக்குள்ள வேற சமாசாரம்லாம் இருக்கு. ஒண்ணு, அவருக்கு வயசாச்சு. கைக் கொழந்தையும் அவரும் ஒண்ணுதான். ஒத்துக்காதுன்னு சொல்றச்சேதான ஆங்காரம் அதிகமா வர்றது. ராப்பூரா தூக்கத்தையும் தொலைச்சுட்டு கொட்டு கொட்டுன்னு தேவுடு காக்க வேண்டியிருக்கு... ஊரே கூடிப் போய் சிரிப்பா சிரிக்கறது. அடுத்தது – அவுரு சத்தம் போடறாரு. எங்கப்பா சவுண்டியான்னு கையில கெடச்சத எறிஞ்சு மொத்தறார்... ஒரு விச உத்தரணி கண்ணுல கொத்த இருந்தது..."

ராஜன், சூரியின் மனைவி சொல்வதை நம்பவில்லை. எப்படியும் கிழவரை அழைத்துப் போகும் உத்தேசம்.

"தெவசச் சாப்பாடுன்னா அருவை இல்ல. சாட்சாத் மகாவிஷ்ணு. பகவான்... பித்ருக்கள்" ராஜனுக்குத் தெரிந்த பிற பாஷைச் சொற்கள் அவ்வளவுதான்... இதில் மீறன மாட்டானா என்ன!

"அதெல்லாம் சரிதான்... அவர் ஓங்க கூட்டாளிதான்... சாயரட்சை வாங்கோ... கேளுங்கோ, ஆனந்தமா அழச்சிண்டு போங்கோ. எல்லாத்துலயும் மாட்டுப் பொண் தலைய உருட்டுவா. எனக்கு மட்டும் ஒத்தாசை செய்யப்படாதுன்னு விரதமான்னா... மூணாந் தெரு சர்வேயர், கூட தட்சணை தர்றேன்னார். காசை வாங்கி வச்சுண்டு என்ன பண்றது? இதெல்லாம் சும்மா ஒரு பேருக்குத்தான். எட்டணா, ஒரு ரூவா வச்சா கூட எதேஷ்டம். சரி நீங்க சாயரட்சை வாங்கோ" – அவள் குரலில் 'ரொய்ங்' என்கிற உலோகத்தன்மை...

கிழவர் தொலைவிலிருந்து அவனுக்குப் பின்னால் காட்டிய சைகை தனக்குத்தான் எனினும் பொருள் புரியாததால் குழம்பியபடி இறங்கினான் ராஜன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஆபீஸ் விட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது கிழவர் பட்டையர் ஹோட்டல் வாசலில் காய்ந்த சிறகிலையை அவசரமாகக் கசக்கி எறிந்தார். சாயங்காலங்களில் அசோகா போடுவார்கள். இதற்குத் தனி ரசிகர் கூட்டம் உண்டு..

ராஜனைக் காணாதது போலிருந்தவர், ஒரு தருணத்தில் வழியின்றி பார்த்துவிட்டு இயலாமையுடன் புன்னகைத்தார். ராஜன் கிளம்பும் முன்பு, ஏதோ நினைத்துக் கொண்டு சைக்கிளை மறித்தாற்போல வந்து நின்றார்.

"அவங்கிட்ட இதப் பிரஸ்தாபிக்க வேண்டாம்..." ஒவ்வொரு சொல்லாகக் கோத்துச் சொன்னார்.

"இல்ல... ஓங்களுக்கு ஷுகரா...?" வயதானவர்கள் மீறலில் ஆவலாக இருப்பார்கள்.... இவர்கள் மீதும் தப்பு சொல்ல முடியாது... இவர்களைச் சொல்பவர்கள்

பக்கமும் பிசகு என்று சொல்ல முடியாது. அவரவர் கவலைகள் அவரவருக்கு.

"மண்ணாங்கட்டி... இப்பக் கூட முழுசா ஒரு ப்ளாப்பழத்தச் சாப்ட முடியும். ம்... பையன் சாது. என் கர்ம பலன். வயசானா இருக்கவே படாதுப்பா. அதுவும் வயத்து வலிக்காரா மத்தியில, தின்னு கெட்டவன் இருக்கவே படாது..." கிழவரின் பையன்



சூரி, ராஜனின் ஆபீஸ்தான். ரொம்பப் பரிச்சமும் இல்லை, தொலைவான உறவும் இல்லை... எப்போதும் துக்கமான அமைதியுடன் வருவான், போவான். சத்தமிடும் மனைவியால் கூட அவ்வாறு ஆகியிருக்கலாம்.

சாயங்காலம் சூரியைப் பார்த்தபோதும் அவன் மனைவிதான் பேச முன்வந்தாள்.

"எங்கள மிஸ்டேக் பண்ணிக்காதேள்... காசுக்கு ஆசைப்பட்டு கிழவரை விடு விடா அனுப்பறேன்னு வீண் பொல்லாப்பு வர்றது... நீங்க ஆபீஸ்காரானாப் போயிட்டேள். மனுஷாளுக்கு மனுஷாதான் முக்கியம். பணங்காசு வரும் போகும். இவருக்கு எல்லாத்தையும் எடுத்துச் சொன்னதும்தான் ஒப்புத்துண்டார். பித்ரு காரியம் புண்ணியம். வயசானவர்..."

கிழவர் அதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். மா, பலா, வாழை மூன்றும் மார்க்கெட்டில் கிடைத்தன. போன தடவை மாதிரி இல்லாமல் இம்முறை சமையல் மாமி அழகாய்ச் சமைத்தாள். வாத்தியார் சொன்ன நேரத்திற்கு வந்தார். கிழிசல் இல்லாமல் விஸ்தாரமான வாழை இலைகள் கிடைத்தன.

கிழவர் நிதானமாக அரைத்துச் சாப்பிட்டார். இன்னது வேண்டும் என்று சரியாகக் கேட்டுச் சாப்பிட்டார். இலையில் கசாமுசாவென்று குழப்பம் இல்லை. ராஜனுக்கு அந்த அகால போஜனக் களைப்பிலும் ரசனை கிளர்ந்தது.

இருபது ரூபாய்த் தட்சணையைத் தாம்பூலத்தில் வைத்து ராஜனும் அவனது மனைவியும் நமஸ்கரித்தபோது ஆசீர்வதித்த கிழவரிடமிருந்து லேசான ஏப்பம்.

கிழவர் சைகை காண்பித்து ஒதுக்குப்புறமாய் ராஜனைத் தள்ளிக் கொண்டு போனார். சின்னதாய்க் கனைத்து

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

விட்டு,

"போனதும் அவ ரூவாயப் புடுங்கிண்டுடுவா. அஞ்சு ரூவா மட்டும் இப்பக் குடு.. மிச்சத்த நாளைக்கு வந்து நானே வாங்கிக்கறேன்..."

சின்னதாய் இருக்கும் கீரைக்கட்டுக்கு விலையைக் குறைத்து, கூட்ட நெரிசலில், ராஜன் கீரைக்காரியிடம் வாதாடுகையில், "ராஜன் சார்"– உலோகம் போன்ற பெண் குரல்...

"தெவசம் நல்லபடியா ஆச்சா..?" சூரியின் மனைவி

"ஆஹா... மனம் போல ஆச்சு... நீங்க பெரிய மனசு பண்ணி மாமனாரை அனுப்பினேள். அவருக்கு ஒடம்புக்கு ஒண்ணும் ஆகலியே...?"

"அவருக்கு என்ன... கொட்டாப்புளியாட்டம் இருக்கார். எனக்கு ஒங்கள நெனச்சாதான் சிரிக்கறது அழறதான்னு தெரியலே. எட்டாயிரம் ரூபா 'பே' வாங்கறேள். டீ.ஏ. வேற இந்த மாசம் ஏறியிருக்கு. பிராமணார்த்தத்துக்கு அஞ்சைத் தாண்ட மாட்டேங்கறேள். எந்த காலத்துல இருக்கேள்: ப்யூன் கூட இருபது ரூவா தாராளமாத் தர்றான்."

நான், 'மக்களைப் பெற்ற மகராசி' படத்தைத் தயாரித்து, அது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த நேரம். புயலாகப் புகழ் என்னை மோதிக் கொண்டிருந்தது. ஒரு வெற்றிகரமான, முழுமையான சினிமாக் கலைஞன் என்கிற முத்திரை என்மேல் விழுந்து, நடிப்பதற்கும் நிறைய படங்கள் வந்து சேர்ந்து கொண்டிருந்த சமயம். மறுபக்கம் தயாரிப்பிலும் நான் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தேன்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் திடீரென்று ஒருநாள் என்னைக் கூப்பிட்டார். போனேன்.

போய்ப் பார்த்தபோது பயங்கர அதிர்ச்சி! ஒரு கன்றுக் குட்டி போல் எப்போதும் துள்ளலும் உற்சாகமுமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கும் கலைவாணர் அப்போது கை ஒடிந்து, பெரிய கட்டுப் போட்டுக் கொண்டு, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் நலம் விசாரித்துவிட்டு, வெற்றிகளுக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டு,



"ராமசாமி எனக்கொரு உதவி செய்வாயா?" என்றார் தயங்கியபடி.

நான் பதறிவிட்டேன். யாருக்கு யார் உதவுவது? இதைச் செய் என்று கட்டளை இட வேண்டியவரல்லவா அவர்?

"சொல்லுங்க. நான் என்ன செய்யணும்?" என்றேன், உடனே.

"மூர் மார்க்கெட் பக்கம் என் நாடகம் ஒண்ணு நடக்கறதா இருக்கு. ரெண்டு மூணு நாளில். 'பைத்தியக்காரன்' நாடகம் போடறதா திட்டம். விளம்பரம் கூட பண்ணியாச்சு. செய்தாச்சு.



ஆனா தவறி விழுந்து, இப்படிக் கையை உடைச்சிட்டு நிக்கறேன். இந்த நிலையில நடிக்க முடியாது. வேற ஏதாவது நாடகம் போட்டு நல்லா இல்லாம போயிடுச்சின்னா ஜனங்க வெறுப்பாயிடுவாங்க. நான் நடிக்கலைங்கற குறையே தெரியாம பிரமாதமா ஒரு நாடகம் போடணும். அதுக்கு நீதான் சரியான ஆள். உன்னோட பம்பாய் மெயில் நாடகத்தை என்னோட 'பைத்தியக்காரனு'க்குப் பதிலா போடறியா?" என்றார்.

நான் நெகிழ்ந்து போய் விட்டேன். என் மேல், என் திறமை மேல் எத்தனை நம்பிக்கை இருந்தால் இப்படிக் கேட்பார்? "உன் டைமிங் நகைச்சுவை உணர்வு வேறு யாரிடமும் இன்று கிடையாது" என்று அவரே அடிக்கடி சொல்வார்தான். ஆனால், அவர் ஒரு வார்த்தை

வி. கே. ராமசாமி

சொன்னால் உடனே செய்து முடிக்க எத்தனையோ பேர் காத்திருக்க, என்னைக் கூப்பிட்டு அவர் இந்தப் பொறுப்பைத் தந்ததற்குக் காரணம், என் மீது அவருக்கிருந்த அளப்பரிய அன்புதான்!

நான் ஒருகணம் கூட யோசிக்கவில்லை. "அதற்கென்ன, பம்பாய் மெயிலையே நடத்தி விடுகிறேன்" என்று உடனே சொன்னாலும் அதில் ஒரு சிக்கல் இருப்பதும் ஞாபகம் வந்தது.

அந்த நாடகத்தில் எனக்கு ஜோடியாக வருகிற ஹீரோயின் ஒரு ஜமீந்தார் மகள். அப்பாவி போலவும், அதே சமயம் பெரிய இடத்துப் பெண் தோரணையும் இணைந்திருக்க வேண்டும். எனது பதினாறாவது வயதிலிருந்து ஆயிரக்கணக்கான முறை நடித்து விட்ட நாடகம் அது. ஆனால் அந்த ஹீரோயின் பாத்திரத்துக்கு மிகப் பொருத்தமான நடிகை என்று சொல்லும்படி அதுவரை யாருமே அமையவில்லை.

யாராவது ஒரு நடிகையைத் தேடிப் பிடித்துப் போடலாம்தான். ஆனால், கால அவகாசம் மிகக் குறைவாக இருந்தது. "இப்படி ஒரு சிக்கல் இருக்கிறது. ஹீரோயினாக யாரைப் போடுவது?" என்று கலைவாணரிடமே கேட்டேன்.

அவர் ஒருகணம் யோசித்தார். "அடே ராமசாமி! என்னோட நடிக்கறாளே, மதுரம்! அவளை விடப் பொருத்தமா யாரும் அமைய மாட்டார்கள். எப்படின்னு கேக்கறியா? அவளோட புத்திசாலித்தனம் வேற யாருக்கும் வராது. ஒரு பாட்டு ரெக்கார்டிங் இருக்குன்னா, ஸ்டுடியோவுக்குப் போனப்புறம்தான் நான் ட்யூனையே சொல்லுவேன். ஒருதரம் கேட்பாள். 'சரி முடிச்சுடலாம்' அப்படிம்பா. பயங்கர கெட்டிக்காரி. உன் நடிப்புக்கு சரியா ஈடுகொடுப்பா" என்றார்.

அதெல்லாம் சரி. மதுரம் திறமைசாலிதான். ஆனால் பம்பாய் மெயில் நாடகத்தை அவர் ஒருமுறை கூட நடித்த தில்லை. வசனங்களை எப்படி அத்தனை விரைவில்


மதுரத்துக்கல்லவா முதல் மாலை?

மனப்பாடம் செய்வார்?

"அது ஒண்ணும் பிரச்னை இல்லை. உன் பிளைமவுத் காரில் அவளை அழைச்சிட்டுப் போ. பீச் ரோடுல ஒரு பத்து தரம் மேலும் கீழுமா போயிட்டு வாங்க. வழியிலே அவளுக்கு ஏழெட்டு தரம் வசனங்களை நீ சொல்லிக் காட்டு. போதும். அவ பேசிடுவா" என்றார்.

எனக்கு நம்பிக்கை இல்லை. இருப்பினும் மதுரம் அவர்களை அழைத்துக் கொண்டு, கலைவாணர் சொன்னபடியே பீச் ரோடுக்குப் போனேன். வசனங்களைப் பேசிக் காட்டினேன். சுமார் பத்து முறை பேசியிருப்பேன். போதும் என்று சொல்லி விட்டார் மதுரம். அத்துடன் நேராக மேடைதான்!

கொஞ்சநஞ்சக் கூட்டமா அன்று? மூர்மார்க்கெட் வளாகமே மக்கள் வெள்ளத்தில் திணறிக் கொண்டிருந்தது. கலைவாணர்



நாடகத்துக்காக வந்தவர்கள், வேறு ஒரு நாடகம் என்றவுடனேயே சற்று சலிப்படைந்திருப்பார்கள். அந்த நாடகமும் சரியில்லை என்றால் கொதித்துப் போய் விடுவார்கள்.

என் நாடகம் சலிப்படையச் செய்யாது என்பது உண்மைதான். ஆனாலும் மதுரம் அவர்கள் வசனங்களில் எத்தனை தூரம் தேர்ச்சி பெற்றிருப்பார் என்பதில் எனக்கொரு சந்தேகம் இருந்து கொண்டே இருந்தது.

பயமும் கவலையுமாக நாடகத்தின் ஆறாவது காட்சிக்குக் காத்திருந்தேன். அதில்தான் எங்கள் 'என்ட்ரி'.

ஒடிந்த கையுடன் முதல் வரிசையில் கலைவாணர் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்க, அந்தக் காட்சியும் வந்தது...

கணவன் – மனைவி சண்டை போட்டுக் கொள்ளும் காட்சி அது.

"ஏண்டி எதிர்த்துப் பேசறே? எனக்கு நீ பெண்டாட்டியா? உனக்கு நான் பெண்டாட்டியா?"

"ரெண்டும் ஒண்ணுதான். சில நேரங்கள்ல புருஷன் பெண்டாட்டியாகறதும் பெண்டாட்டி புருஷனாகறதும் சகஜம்தானே? இதைப் போயி பெரிசா பேசிக்கிட்டு..." – தடாலடியாக மதுரம் பேசிய இந்த வசனம் ஸ்கிரிப்டில் இல்லாதது!

ஒருகணம் ஆடிப் போய் விட்டேன்! யோசித்துப் பார்த்தால், எத்தனை பெரிய விஷயம் இது! திருமணம் ஆனவர்களுக்கு இதன் உள்ளர்த்தம் புரியும்!

சுதாரித்துக் கொண்டு நானும் அதற்குத் தோதாக பதில் சொல்ல, பதிலுக்கு பதில், பதிலுக்கு பதில் என்று தொடர்ந்து, அந்த நாடகத்துக்கே ஒரு புதிய வடிவம் கொடுத்து விட்டது போல் அமைந்தது அன்றைய தினம்!

கூட்டம் உற்சாக ஆரவாரம் செய்தது. நான் பயந்ததெல்லாம் வீண் என்பது போல மதுரம் அன்றைய தினம் நடித்த நடிப்பும் பேசிய பேச்சும் ஆயுசுக்கும் மறக்க முடியாதபடி அமைந்து விட்டது!

இடைவேளையில் மேடையேறிய கலைவாணர், "நானும் எத்தனையோ நடிகர்களை வைத்து நாடகம் போட்டிருக்கிறேன். ஆனால் ராமசாமி போல ஒரு மாறுபட்ட கலைஞனைப் பார்த்ததில்லை. விருதுநகர்காரர்களுக்கே ஒரு தனித்திறமை – எந்தத் துறையாயிருந்தாலும் வந்து விடுகிறது...'' என்று சொல்லி, காமராஜரையும் முத்துராமலிங்கத் தேவரையும் உதாரணம் காட்டியது என்னை நெகிழ்த்தி விட்டது!

ஒரு கலைஞனை மனம் திறந்து பாராட்டுவதில் அவருக்கு நிகர் அவர்தான்!



"ராமசாமி, மறுபடியும் சொல்றேன். உன் டைமிங் வேறு யாருக்கும் வராது'' என்று மேடையிலேயே பாராட்டி, எனக்கு மாலை போட்டார்.

நான் அதிர்ந்து விட்டேன். மதுரத்துக்கல்லவா முதலில் மாலை போட்டு வாழ்த்த வேண்டும்?

"அண்ணே, என்னை விட வயதில், அனுபவத்தில், திறமையில் மூத்தவர் அவர்தான். அவருக்கு முதலில் மாலை போடுங்கள்'' என்றேன்.

கலைவாணர் என்ன சொன்னார் தெரியுமா?

"அட என்னப்பா நீ? அவளுக்கு நான் ஏற்கெனவே மாலை போட்டாச்சு! அப்ப நீ உங்கம்மாவின் கர்ப்பத்தில் இருந்திருப்பாய்!"

அதுதான் கலைவாணர்!

அவரைப் பற்றி நினைக்கும்போதே எனக்கு ஒருவித மரியாதை கலந்த பக்தி உணர்வுதான் தோன்றுகிறது. தொழிலை அவர் நேசித்தவிதம் பிரமிப்புக்குரியது. தன் வாழ்க்கை முழுவதையும் கலைக்காகவே அர்ப்பணித்தவர், பிற கலைஞர்களை ஊக்குவித்து, முன்னுக்குக் கொண்டு வருவதிலும் தன்னிகரில்லாதவராக விளங்கினார்.

எம்.ஆர். சாமிநாதன், டி.எஸ். துரைராஜ், புளிமூட்டை ராமசாமி, ஆழ்வார் குப்புசாமி, காக்கா ராதாகிருஷ்ணன் என்று அவரது தயாரிப்பில் விளைந்த நகைச்சுவை நடிகர்கள்தாம் அன்றைய காலகட்டத்தில் நாடக உலகிலும் திரையுலகிலும் 'ஆன்பவர்'களாக விளங்கினார்கள்.

ஒவ்வொரு கலைஞரின் தனித்திறமை

என்ன என்பதைக் கண்டறிந்து, அதன் மூலமே அவரைப் பிரகாசிக்கச் செய்வதில் அவர் வல்லவர்.

கே.பி. காமாட்சி என்பவர்தான் முதல் முதலில் கோட்-சூட் போட்டு நாடக மேடையில் ஏறிய தமிழ் நடிகர். 'கோட்-சூட் போட்டால் இப்படித்தான் நடக்க, நடிக்க வேண்டும்' என்று தமது நடிப்பால் அறுதியிட்டுக் காட்டியவர் அவர். அவரும் கலைவாணரின் தயாரிப்புத்தான்!

இப்படி, கலைவாணரின் நாடக உலகத் 'தயாரிப்பு'களெல்லாம் மொத்தமாகவும் கொஞ்சம் கொஞ்சமாகவும் பின்னாளில் என்னைப் போலவே சினிமாவில் காலூன்றிக் கொடி பறக்க விட்டார்கள் என்பதில் எனக்குப் பிரத்யேக சந்தோஷம் உண்டு.

அப்படித்தான். 'பணம்' என்றொரு படம் ஆரம்பித்தோம். நான் அந்தப் படத்தில் ஆடிய பாதம் முதலியார் என்கிற (வழக்கம் போல) கிழவேஷத்தில் நடிப்பதாக இருந்தது.

கலைவாணர் என்னைக் கூப்பிட்டார். ''ராமசாமி, சும்மா சும்மா கிழவேஷம் போடாதே! ஒரு சேஞ்ஜ் வேணும். இந்தப் படத்துல நீ வேற ரோல் எடுத்துக்க. வேற யாராவது அந்த வயசான வேஷம் போடட்டும்'' என்றார்.

சரி என்று நான் குருசாமிப் பிள்ளை என்கிற நடுத்தர வயதுப் பாத்திரத்தை ஏற்றேன். ஆடியபாதம் முதலியார் வேடம் வேறொரு இளைஞருக்குப் போயிற்று.

அந்த இளைஞரும் நாடக உலகிலிருந்து வந்தவர்தான். எம்.கே. ராதா நாடக கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தவர். பிறகு எங்களுடன் ஐக்கியமான அவர், 'விமலா' நாடகத்தில் முருகன் வேஷத்தில் சக்கைபோடு போட்டவர்.

சினிமாவுக்கு வந்தவருக்கு 'பணம்' படத்தில் அந்த ஆடியபாதம் முதலியார் வேடத்தை என்.எஸ்.கே. அவர்கள் தந்தது - ஒரு பெரிய, மகத்தான 'எண்ட்ரி' ஆக அமைந்தது! நான் அந்த வேடத்தைச் செய்யாமல் போனதும், அவருக்கு அந்த வேடம் கிடைத்து, பெரும் புகழைக் கொண்டு வந்து சேர்த்ததும் விதியின் சந்தோஷமான செயல்தான்!

பின்னாளில் சினிமாத் துறையில் மகத்தான பல சாதனைகளைப் புரிந்து, கடைசி வரை தனக்கென்றொரு பாணி, ரசிகர் கூட்டம், புகழ் என்று அவர் சிறப்படைய அந்தப் படமே ஓர் ஆரம்பமானது!

அவர் - தங்கவேலு.


(தொடரும்)



''அந்தாளு போலி டாக்டர்னு எப்படிச் சொல்றே?''

''வயிற்று வலி ஏன் வருதுன்னு கேட்டா, யாரையாவது வேடிக்கை பார்க்க வச்சிட்டு எதையாவது சாப்பிட்டிருப்பீங்கன்னு சொல்றாரே!''

- சீர்காழி வி. ரேவதி



''அந்த ஆள் ரொம்ப ரிஸ்க் எடுக்க மாட்டார்!''

''அப்படியா!''

''ஆமாம். ஸ்கூட்டரை உதைக்கறதுக்குன்னு ஒரு கழுதை வளர்க்கறார்னா பார்த்துக் கோயேன்!''



''மாப்பிள்ளை பையனுக்கு எல்லோரும் போட்டி போட்டுக்கிட்டு மொய் எழுதறாங்களே!''

''மொய் எழுதறவங்களுக்கு ஒரு நம்பர் கொடுத்து, குலுக்கல் மூலமா ஃப்ரிஜ், டி.வி., தங்க மோதிரம் கொடுக்கறதா அறிவிச்சிருக்காராம். அதான்!''

– எஸ். முகம்மது யூசுப்

மீதி சுதந்திரம்

திருமதி கமலா அவர்களுக்கு,

வாழ்த்துக்கள். நீங்கள் எங்கள் நிலா டிவியின்...

கமலா அந்த லெட்டரைப் படிக்குமுன் ஒரு அறிமுகம் – மிஸஸ் ரமேஷ், கோபாலன் – ஜயலக்ஷ்மியின் கடைசி மாட்டுப் பெண். ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டு விஜய் மற்றும் சோனா என்று அழைக்கப்படும் எல்.கே.ஜி. சூர்யாவின் அம்மா, இவை தவிர கடைசியாக கமலா! வீட்டில் கல்யாணம் ஆகாத மச்சினன், நாத்தனார் யாரும் இல்லை. மாமனார் – மாமியார் ஆரோக்கியம்தான். வேலைக்காரி உண்டு.

கமலாவுக்கு பெங்களூர் குளிரில் காலை ஐந்து மணிக்கு எழுந்தால் இரவு பத்து மணி வரை நடுவில் கிடைக்கும் சில தீவுப் பிரதேசங்களைத் தவிர ஓய்வு இல்லை. பால்காரன், காப்பி, காய்கறி, பூஜைக்கு பூ, சோனாவின் பல் தேய்க்க கலாட்டா, காம்ப்ளான், ஷூ, ஸ்கூல் வேன், ஷேவிங் ப்ளேட், செக்புக்... எல்லாம் முடிந்து சாப்பிட உட்காரும்போது கமலாவின் முதல் தீவு – மணி பத்தரை! பிறகு ஜோஸப் ஸ்டோர்ஸ், மாவு மெஷின், அயர்ன் கடை அதற்குள் குட்டி ராட்சசன் வந்து விடுவான். சில சமயம் கமலா மத்தியானம் சுப்புறப் படுத்துக் கொண்டு. காரணமின்றி அழுதிருக்கிறாள். பிறகு சாயங்காலம் ரமேஷின் போன் ஆறு மணிக்கு. "கமலா, இன்னிக்கும் கொஞ்சம் லேட் ஆகும். நாளைக்கு போர்ட் மீட்டிங் இருக்கு. என்ன கோவமா? பதில் காணோம்?"

யாரிடம் கோபப்பட? அம்மாவின் லெட்டர் மாதிரி சாயங்கால போன்.

கமலாவுக்குத் தற்சமயம் கல்யாணம், குடும்பம், குழந்தைகள் பற்றி ஆதார சந்தேகங்கள் இருந்தாலும் நடுவே சில சந்தோஷத் திடல்கள் உண்டு. சில நாள் ரமேஷ் சீக்கிரமே வந்து ப்ரிகேட் ரோடில் கோன் ஐஸ்கிரீம் சப்பிக் கொண்டே நடந்து போகும், மலை ஏறி அனுமார் கோவிலில் காற்று வீச பாறை மேல் உட்கார்ந்து துளசி மெல்லும், சோனா சாக்லேட் வாயுடன் கட்டிக் கொள்ளும் சில தருணங்கள் தான் கமலாவின் இடைக் மழைத்தூறல்.

கல்யாணத்துக்கு முன் கமலாவின் சந்தோஷப் பட்டியல் வேறு.

"கமலா... மணி எட்டு. எந்திருக்கிறியா இல்லையா?" அம்மா ஜன்னல் ஸ்கிரீனைத் திறக்க, குருவி வரும்.

"கமலா மணி பதினொண்ணு. இன்னும் குளிக்கலையா?" பொன்னம்மா துணி கேட்பாள்.

"கமலா போன் எடுத்து அரைமணி ஆச்சு. யாரு? ராஜிதானே?" "மத்யானம் தூங்காதேடி" நடுவில் ரமாவுக்கு ஏழு பக்கத்தில் லெட்டர். நாலு மணிக்கு பாட்டு ஸார். வெள்ளி தம்ளரில் காப்பி.

"கமலா உன் குரலுக்கு எம்.எஸ். மாதிரி வரப் போற பாரேன்"

"கமலீ வாக் போலாமா?" அப்பா.

அண்ணாவிடம் சண்டை போட்டு பிடுங்கின காமிக்ஸ், அதிக வால்யூமில் டிவியுடன் ராத்திரி சாப்பாடு – மோர் சாதத்திற்கு வெல்லக் கட்டி. மறுபடியும் பேச்சு, சிரிப்பு, பேச்சு.

கல்யாணம் ஆகி பெங்களூர் வந்து இரண்டாம் நாளே தெரிந்து விட்டது. இவர்கள் வேற்று கிரகத்து மனிதர்கள். சாப்பிடுவதற்குத் தவிர வாயை அதிகம் திறப்பதில்லை.

தட்டிக் கேட்க ஆள் "இல்லாத சுதந்திரம் ஆனால் இறுக்கமான புழுக்கமான சுதந்திரம் இதைச் செய், செய்யாதே என்று யாரும் சொல்ல மாட்டார்கள். மாமனார் காலை பேப்பரில் ஆபிச்சுவரியில் ஆரம்பித்து ஸ்போர்ட்ஸ் படித்து முதல் பக்கம் வந்தால் இரண்டாம் டோஸ் காப்பிக்கு வேளை "கமலா காப்பி குடுக்கறயாம்மா?" ம்ஹூம். கேட்க மாட்டார். பக்கத்தில் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தானே போட்டுக் கொள்வார்.

ஏழரைக்கு குளித்து குக்கர் அடுப்பில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தேங்காய் துருவக் கூட மாமியார் விட மாட்டாள்.


ரமேஷ் இன்னும் மோசம். ஒரு மாதம் போர் அடித்து, "நான் ஏதாவது வேலைக்கு அப்ளை பண்ணட்டுமா?"

"உனக்குப் பிடிச்சா போயேன்,"

அப்புறம் பக்கத்திலேயே நர்ஸரி ஸ்கூலில்

சேர்ந்து பசங்களிடம் கத்தி ஒரே வாரத்தில் தொண்டை கெட்டு, "இந்த வேலையை விட்டுறலாம்னு இருக்கேன்."

"உனக்குப் பிடிக்காட்டி விட்டுரு."



'**எ**ங்கள் நிலா டீவியின் ஏழு சுரங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறீர்கள்'- கமலாவுக்கு அந்த நிமிஷம் சந்தோஷமா துக்கமா என்று சரியாக சொல்லத் தெரியவில்லை. ரமேஷுக்கு சங்கீதத்தில் சுத்தமாக ஆர்வம் இல்லை. ஒரே ஒருமுறை "நீ ரொம்ப அழகா பாடறியே!" என்று பொய் சொல்லி இருக்கிறான். அதுவும் ஊட்டியில் ஹனிமூனின் போது. ரமேஷின் சங்கீதம் போர்ட் மீட்டிங் செமினார், டிஸ்கஷன்... தான். உள்ளே போய் ஒரு தம்ளர் பானைத் தண்ணீரை ஒரே மடக்கில் குடித்தாள்.

பாட்டு ஸார் எத்தனை முறை சொல்வார், "கமலா இந்த வருஷமாவது ஸீஸனுக்குப் பாடறயா? நான் சொன்னா சேதுராமன் மத்யான கச்சேரியே போட்டுருவான்"

"என்ன வெறும்ன சிரிக்கற? அடுத்த வருஷம் கல்யாணம் ஆனா இப்படி சான்ஸ் கிடைக்காது"- கண்ணில் தன்னிச்சையாக நீர் இரண்டது.

ஒரு மாசம் ஆகி இருக்குமா? ரமேஷ் பாம்பேக்கும், மாமனார் மாமியார் கல்யாணத்திற்கும் போயிருந்த சமயம் மத்யான டீவி, "நீங்கள் இதுவரை வெளிச்சத்திற்கு வராத பாடகரா?" என்று வினவியது. ஆமாம் என்றாள் கமலா அழுத்தமாக. மூன்று பாட்டுக்கள் பதிவுசெய்து அனுப்ப வேண்டும். ஒன்று க்ளாஸிகல், இன்னொன்று செமி க்ளாஸிகல். கடைசியாக ஒரு சினிமாப் பாட்டு. திடீரென்று ஒரு உந்துதல்,

பொறி. பாடி எத்தனை நாள் ஆச்சு? சோனா குழந்தையாக இருந்த போது தூங்கவைக்கப் பாடினது தான். சுருதிப் பெட்டி எங்கே? போன சரசுவதி பூஜைக்குப் பிறகு அட்டத்திலிருந்து எடுக்கவில்லை. புது காஸெட் கிடைக்காமல் பழசை அழித்து இரண்டு தடவை கூட பாடிப் பார்க்கவில்லை. ஸாமஜ வரகமனா, கலைவாணி உன் கருணை... சினிமாப் பாட்டு தான் புதுசு எதுவும் நினைவுக்கு வரவில்லை. கேட்டால்தானே! முன்பு ஒருநாளைக்கு எத்தனை நேரம் விவித பாரதி? திடீரென்று வாரா வாரம் காலேஜில் லெட்டர் கொடுப்பானே, அவன் பேரென்ன சுதாகரா? ஞாபகம் வந்து, யோசித்து கடைசி



இருபக்கக் கதைகளை சுஜாதா விமர்சிக்கிறார்

தேர்வு செய்யப்பட்ட ஐந்து கதைகளையும் படித்தேன். பொது வாக ஒரு தரத்துக்கு மேலேயே இருந்தன. சுப்ரமண்யம் ரவிச் சந்திரன் பத்திரிகைகளில் பல கதைகள் எழுதிப் பழக்கப்பட்ட வர் என்பது எழுத்து நடையின் சரளத்திலிருந்து தெரிகிறது. முடிவை நோக்கித் தீர்மானமாகச் செல்வதும் முடிவைப் பற்றி ஆரம்பத்திலேயே தெளிவாக இருப்பதும் நல்ல சிறுகதைக்கு அடையாளம்.

பலராம் செந்தில்நாதன் எல்லாத் தொழிற்சாலை கான்டீனிலும் ஏற்படக் கூடிய நெருக்கடி ஒன்றை நுட்பமாக சித்திரித்திருக்கிறார். இந்தக் கதை தொழிலாளர்களுக்கு பெருமைசேர்ப்பதாக இல்லை. அவர்கள் கோபித்துக் கொள்ளலாம். நன்றாக எழுதப்பட்ட கதை எதையும் யாராவது கோபித்துக் கொள்வார்கள் என்பது என் அனுபவம்.

குமுதம் கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றபோது தாமரை அவர்களை சந்தித்தது நினைவிருக்கிறது. எழுத விரும்பும் இன்ஜினியர் பெண். அப்போதே கவிதைகளை விட்டு, சினிமா பாட்டெழுதவோ, சிறுகதைகள் எழுதவோ ஆசை என்று சொன்னார். நல்ல காலம் பின்னதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். நம் நாட்டுச் சிறார், கல்வி இல்லாமல் எடுபிடி வேலை செய்யும் சோகக் கதைகள் எப்போதுமே நெஞ்சை உருக்குபவை. தாமரை ஒரு பெண்ணுக்கே உரித்தான அனுதாப நோக்கில் இதை எழுதியிருக்கிறார். தாமரை இந்த வகையில் எழுதப்பட்ட மிகச் சிறந்த கதையான வண்ணதாசனின் 'நிலை' என்பதைப் படித்திராவிட்டால் தேடிப் படிக்க வேண்டுகிறேன். வெற்றி பெற்ற மற்ற எழுத்தாளர்களும் படிக்க ஒரு பட்டியல் இந்தக் கட்டுரையின் கடைசியில்.

16 வயதான ஜி.சுபாஷின் 'வாக்குமூலம்' கதை முடிந்த பின்னும் தொடர்ந்து ஒன்னரைப் பக்கம் எழுதியிருந்தார். அதை நீக்கி விடும்போது கதையின் செய்தி பளீர் என்று வெளிப்படுகிறதை சுபாஷ் உணர்ந்து கொண்டால் சரி. இல்லையேல் கொஞ்சம் வயதான பின் தெரியும்.

ஐந்து கதைகளில் சிறந்த கதை ப்ரீதி அவர்களின் 'மீதி சுதந்தரம்' என்று கருதுகிறேன். வீட்டுக் கைதி மனைவியின் பாட்டு இச்சைகள் பற்றிய சம்பிரதாயக் கதைதான். இருந்தும் நைந்து போன கதைக் கருவையும் கதை சொல்லும் விதத்தில் யோக்கியமும் புதுமையும் காட்டி நல்ல படிப்பனுபவம் தரமுடியும் என்பதை நிரூபித்திருக்கிறார். கதை முடிவில் ஒரே ஒரு வாக்கியத்தைத்தான் இடம்பெயர்த்திருக்கிறேன்.

நீங்கள் படிக்க வேண்டிய சிறுகதைகளின் ஒரு முற்றுப் பெறாத பட்டியல் :

புதுமைப்பித்தனின் 'மனித யந்திரம்' குபராவின் 'விடியுமா', தி. ஜானகிராமனின் 'கடன் தீர்ந்தது' எஸ்விவியின் 'டிப்டி கலெக்டர்', லா.ச. ராமாமிர்தத்தின் 'பாற்கடல்', அ. மாதவன்- 'நாயனம்', சுந்தர ராமசாமி- 'பிரசாதம்', வண்ணதாசன்- 'நிலை', அம்பை- 'அம்மா ஒரு கொலை செய்து விட்டாள்', அசோகமித்திரன்- புலிக்கலைஞன்...

கல்கியில் மத்யமர் கதைகளை எழுத இடமளித்து இந்தக் கதைகளையும் பரிசீலிக்க வாய்ப்பளித்ததற்கு கல்கி ஆசிரியர் அவர்களுக்கு நன்றி.

- சுஜாதா

யில் "சொன்னது நீதானா" அனுப்பி விட்டாள். ரமேஷிடம் சொல்லவில்லை!

கொஞ்சம் கலவரம். அனுப்பி இருக்க வேண்டாம் என்று இப்போது தோன்றியது. 'நிகழ்ச்சி பதினாறாம் தேதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நிலா ஸ்டூடியோ, சாலிக்ராமம், சென்னை, 93-இல் பதிவு செய்யப்படும். உங்கள் வருகையை 10-ம் தேதிக்குள் உறுதி செய்யவும். இப்படிக்கு...'

விஜய்க்கு திங்கள் கிழமை பரீட்சை ஆரம்பம். ரமேஷ் வெள்ளிக்கிழமை சாயங்கால ஃப்ளைட்டில் பாம்பே போக வேண்டும். இப்போது வர முடியவில்லை என்று எழுதிப் போட்டு விடலாமா?

"இப்பவும் என் பையன் விஜய்க்கு பரீட்சை இருப்பதால்..."

மெயிலுக்கு டிக்கெட் புக் பண்ண வேண்டும். கிடைக்காது. பிருந்தாவன்தான். ரமேஷ் கூட வர மாட்டான். வெள்ளிக்கிழமை மாமி யாரின் பூஜை லேட் ஆகுமே? பசங்களைப் பார்த்து யார் பரீட்சைக்கு அனுப்புவது? சாயங்காலத்துக்குள் தலை இலேசாக வலிக்க ஆரம்பித்தது.

கமலா பதில் எழுதினாள். சம்மதம் என்று!

"ஏதாவது பாட்டுப் பாடு"

சுரத்தே இல்லாமல் ஒருவன் சொன்னான்.

நானும் கஷ்டப்பட்டு கொட்டாவியை அடக்கிக் கொண்டு ஏதோ 'தலைவர்' பாட்டை முணுமுணுத்தேன். மதில் மேல் பாதி தூக்கத்தில் இருந்தவர்களிடமிருந்து கொஞ்சம் அங்கீகாரம் கிடைத்தது போலிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் சினிமா பார்க்கப் போய்விடுவார்கள்.

"யாரையாவது லவ் பண்ணியிருக்கயா?" மீசையில்லாத ஒருவன் கேட்டுவிட்டு, தானே வெட்கப்பட்டுச் சிரித்தும் கொண்டான்.

'ராக்கிங்' என்ற பெயரில் அசட்டுத்தனமான கேள்விகளுக்கு பதில் கூற வேண்டியிருக்கிறது.

யாரும் போவதாகத் தெரியவில்லை. மாதக் கடைசி பற்றாக்குறை காரணமாக இருக்கலாம். மேலும் நான்கு பேர் 'ஸ்பெலண்டரில்' வந்து சேர்ந்து கொண்டார்கள். கூட்டம் களை கட்டியது. வெயில் அதிகரித்து எரிச்சலூட்ட, அதனால் அவர்களின் செயல்கள் மேலும் தீவிரமடைந்தன.

கைகளைப் பின்னால் கட்டிவிட்டு பக்கத்து ஆலமரத்தில் ஏறச் சொன்னார்கள். நான் திருதிருவென்று முழிக்க, பிடரியில் ஓர் அடி விழுந்தது. பொறுத்துக் கொண்டேன். வந்த புதிதிலேயே வம்பு செய்ய விருப்பமில்லை. பிரின்ஸிபாலிடம் சொல்லலாம்தான். ஆனால் என் கூடப் படிக்கிறவர்களே என்னை ஒதுக்கி விடுவார்கள்.

வகுப்பிலேயே சொன்னார்கள், "வெளியே போகாதே. ஏதாவது பொழுதுபோகாத சீனியர் பிடித்துக் கொள்வான்." நான்தான் புது சட்டம் கொடுத்த தைரியத்தில் வந்து விட்டேன். இப்பொழுது இவர்களுக்காக நடு உச்சியில் சூரியநமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன்.

கண்கள் கூசின. சுதாரித்துக் கொண்டு மரத்திற்கே வந்தேன். அவர்களின் கவனம் சற்று திசை தப்பி இருந்தது. திரும்பிப் பார்த்தேன். மதிய வகுப்பிற்கு வந்த மாணவிகள்.

"என்னடா பாக்கறே! எல்லாம் அண்ணி! தெர்தா" என்றான் சுருட்டை முடி முரடன்.

நான் ஒன்றும் பேசவில்லை. "என்னடா சும்மா நிக்கறே? அண்ணிகளுக்கு ஸ்பெசல் சல்யூட் அடிடா!" டீ-சர்ட் சற்று உரத்த குரலில் கூறியது – அந்தப் பெண்கள் கூட்டத்தில் பச்சை கரிதாருக்குக் கேட்கும் அளவுக்கு...

அந்தப் பெண்களுக்கு இங்கு வந்து பார்க்க ஆசைதான். ஆனால் மரபு தடுத்ததால், வேகத்தைக் குறைத்துக் கொண்டு, திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

வேறு வழியில்லை. வலது கை கட்டை விரலை பெல்ட்டின் இடுக்கில் சொருகிக் கொண்டும் குதித்துக் கொண்டும் இடது கையால் சல்யூட் அடிக்க வேண்டும். செய்தேன்.

"அண்ணியை விஷ் பண்ணுடா!"

என் சேட்டையுடன் "அண்ணி குட்மார்னிங்" என்று சுத்துவதையும் சேர்த்துக் கொண்டேன்.



எனக்கே கோமாளித்தனமாக இருந்தது.

கொஞ்ச நேரம் ரசித்துவிட்டு போரடித்ததால் பெண்கள் க்ளாஸ்களுக்குச் சென்று விட்டனர். வெயிலும் சற்றே

ஜி. சுபாஷ்

தாழ்ந்தது. அங்கிருந்த எல்லோருக்கும் டீ வாங்கி வரச் சொன்னார்கள். என் டீயை மட்டும் தரையில் வைத்து விட்டுக் குடிக்கச் சொன்னார்கள், கையால் தொடாமல்.

"வாயால்தானே குடிக்கப் போறே. கை எதுக்கு?''



விளக்கம் வேறு. எனக்கோ அலுத்து விட்டது. கூடவே, "என்ன செய்து விடுவார்கள்'' என்ற தைரியமும் தொற்றிக் கொண்டது. மௌனமாகவே நின்றேன். இப்போதுதான் சூடுபிடிப்பது போல ஒருவன்,

"குடிடா''

மிரட்டினான்.

"முடியாது!''

"துரைக்கு முடியாதாண்டா. முடிய வைக்கலாமா?'' என்று ஒருவன் கோபத்துடன் என்னை நெருங்கினான்.

அவனைத் தடுத்தவன்,

"சும்மா ஜாலியா குடிப்பா. உன்னை இவ்வளவு மரியாதையா நடத்தறோமேன்னு சந்தோஷப்படு'' என்றான்.

அவன் மிரட்டல் தொனியும் பலிக்கவில்லை. கஷ்டப்பட்டு படித்து கனவுகளோடு நுழைந்த என்னைத் துன்புறுத்தி தங்கள் ஈகோவை திருப்திப்படுத்திக் கொள்வது எந்தவிதத்தில் நியாயம்?

என்னையே முறைத்துக் கொண்டிருந்தவனின் கவனம் சற்று சிதறியது. பின்னால் வந்த யாரையோ பார்த்து,

"சுரேஷ் வரான்டா.''

"இவனை அனுப்பிடலாமா?''

அவன் கேட்டு முடிப்பதற்கும், சுரேஷ் எங்களைப் பார்த்துவிட்டு வருவதற்கும் சரியாக இருந்தது. வந்தவன், தலைவனைப் பார்த்து,

"என்ன ஜனா! ஆரம்பிச்சுட்டியா உன் வேலையை'' என்றான்.

ஜனா பதில் சொல்லவில்லை.

என்னிடம், "ஏதாவது பிரச்னையா?'' - ஆங்கிலத்தில் கேட்டான்.

"ஒன்றுமில்லை...'' நான் அரை மனத்துடன் கூறியதை கவனித்தாலும் கண்டுகொள்ளாமல், "வா, உனக்கு காலேஜை சுற்றிக் காண்பிக்கிறேன்'' என்று தன்னுடன் அழைத்துச் சென்றான்.

சுரேஷ் நல்லவனாகத் தெரிந்தான். பல விஷயங்களைப் பற்றி ஆர்வத்துடன் பேசினான். முக்கியமாக ராகிங் அவனுக்கும் பிடிக்கவில்லை. "இது எப்படி நட்பை உருவாக்கும்னு புரியலை. அப்படி ஒருத்தனைக் கேவலப்படுத்தி அவனை நண்பனாக்கிக் கொள்வதில் எனக்கு ஒப்புதல் இல்லை.'' அவன் பேச்சு என்னை மிகவும் கவர்ந்தது. ஜனாவையும் கதிரையும் போலவே எல்லோரும் இல்லை என்று புரிந்தது. நல்ல நண்பன் கிடைத்த சந்தோஷம் எனக்கு.

இதுவரை ஆங்கிலத்திலேயே தொடர்ந்திருந்த எங்கள் உரையாடலை திடீரென்று உடைத்தான். தமிழில் கேட்டான்.

"நீ என்ன ஜாதி?''

அக்கம்பக்கம்



• தலாய்லாமா

தலாய்லாமாவின் உயிருக்கு ஆபத்து!

திபெத்திய மதகுருவான தலாய் லாமாவை படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்த ஒரு தீவிரவாத கும்பலின் சதி அம்பலமாகியிருக்கிறது! சீனாவின் ஆசியுடன் இந்த சதித்திட்டத்தை 'துர்ஜே ஷொக்டென்' என்ற தீவிரவாத அமைப்பு, நிறைவேற்ற தக்க தருணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தது.

கடந்த பிப்ரவரியில், திபெத்திய அகதிகள் வசிக்கிற ஓர் இல்லத்தின் தலைமை பொறுப்பில் இருந்த லாம் சாங் கயட்ஸோ என்பவரையும் மிகக் கொடூரமான முறையில், கத்தியால் சில தீவிரவாதிகள் குத்திக் கொன்றனர். அந்தச் சம்பவம், தலாய் லாமா கொலைச் சதித் திட்டத்துக்கு ஒரு முன்னோட்டம் என்று திபெத்தியர்களாலும், இந்திய அயலுறவுத் துறை உயர் அதிகாரிகளாலும் கருதப்படுகிறது.

இந்தத் தீவிரவாத அமைப்பின் ஹிட் லிஸ்டில் தலாய் லாமாவைத் தவிர இன்னும் சுமார் ஒரு டஜன் பேர்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் அனைவருமே தலாய் லாமாவின் அமைப்பில் இருக்கும் இரண்டாம், மூன்றாம் கட்ட முக்கியஸ்தர்கள்!

இதனையடுத்து, தலாய் லாமாவின் அரண் மனையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தலாய் லாமா பயன்படுத்த, குண்டு துளைக்காத கார் ஒன்றை வழங்கலாமா என்று இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள்.

இந்த அதிகப்படியான பாதுகாப்புப் பணிகளுக்காக, மத்திய அரசு கூடுதலாய் ஆறு கோடி ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும்!

இமை அசைவில் ஒரு புத்தகம்!

ஜீன் டோமினிக் பாபி - 43 வயது பிரெஞ்சு பத்திரிகையாளர். சமீபத்தில் அவர் எழுதிய 130 பக்க புத்தகம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

காரணம், பக்கவாத நோயால் பாதிக்கப்



பட்டு, படுத்த படுக்கையாய்க் கிடந்த நிலைமையிலும், பாபி, தமது இடது கண்ணின் இமையை அசைப்பதன் மூலமே முழுப் புத்தகத்தையும் உருவாக்கியிருக்கிறார்!

எப்படி நிகழ்ந்தது?

பாபியின் உதவியாளரான பெண்மணி, அவரது படுக்கைக்கு அருகே உட்கார்ந்து கொண்டு, ஒவ்வொரு எழுத்தாகச் சொல்லுவார். தாம் நினைக்கிற எழுத்தைச் சொன்னதும், பாபி, தம் இமை அசைவின் மூலம் தமது சம்மதத்தைத் தெரிவிக்க, உதவியாளர் அதை எழுதிக் கொள்ளுவார். இப்படித்தான் ஒவ்வொரு எழுத்தாக உருவானது அந்தப் புத்தகம்!

சமீபத்தில், பாபி எழுதிய இந்தப் புத்தகம் வெளியாயிற்று. புத்தகம் வெளியான மூன்றாவது நாள் அவர் இறந்து போனார்.

அதற்குள் 25 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்து விட்டன!

பயங்கர பச்சை!

சமீபத்தில் பிராங்க்பர்ட் நகரில் 'பச்சை குத்தும் திருவிழா' நடை பெற்றது. விதம் விதமாய் பச்சை குத்திக் கொண்டவர்களும், பச்சை குத்தும் எக்ஸ்பர்ட்களும் கலந்து கொண்ட திருவிழாவுக்கு வந்திருந்த 'ஹோர்ஸ்ட்' என்பவரது பச்சை குத்திய உடலைத்தான் படத்தில் காண்கிறீர்கள். புல்லரிக்கிறதா?


இதுதான் விதி!

1948-ல் பன்னிரண்டு வங்கி ஊழியர்களுக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு, பணம் திருடிய குற்றத்துக்காக, ஜப்பானியரான சதமிசி ஹிரசாவா என்பவருக்குச் சிறை தண் டனை வழங்கப்பட்டது. சிறையில் 39 வருடங்களைக் கழித்து விட்டு, அவர் இறந்தபோது அவருக்கு வயது 94. சதமிசி திருடிய பணம் எவ்வளவு தெரியுமா? வெறும் நூறு பவுண்டுகள்!

கற்கால சூயிங்கம்!

எலிசபெத் அவலிங் என்ற தொல் பொருள் ஆராய்ச்சியாளர், சூயிங்கம் பற்றி மிக ஆச்சரியமான தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். கற்காலத்திலேயே மனிதர்கள் சூயிங்கம் சாப்பிட்டிருக்கிறார்களாம். தார் போன்ற ஒரு பொருள், பல் பதிந்த தடங்களுடன், கண்டு பிடிக்கப்பட்டதே இதற்கு ஆதாரம்!

தொகுப்பு : மானஸா




"நம்ம டாக்டருக்கு ஆனாலும் ஹாஸ்ய உணர்வு ஜாஸ்தி..."

"எப்படி சொல்றீங்க?"

"மூக்குப் பொடிக்குப் பதிலா ஞாபக மறதியா மிளகாய்ப் பொடியை மூக்குல போட்டுண்டுட்டேன்னு அவரிடம் சொன்னேன்: 'மூக்குல கொஞ்சம் நல்லெண்ணெயும் விட்டுக்குங்க. எரிச்சல் குறைஞ்சுடும்'கறார்...!"


"இந்தக் கொசுவத்திச் சுருளை எத்தனை தான் ஏற்றி வைத்தாலும் கொசு ஒழியவே மாட்டேங்குதே?"

"ஐயையோ! அது கொசு வத்திச் சுருள் இல்லீங்க; நீங்க சாப்பிடறதுக்காக நான் தயார் செய்த முறுக்கு...!"



"தலைமுடி ரொம்பத்தான் நீளமா வளர்ந்துடுச்சு! நாளைக்குப் போய் 'ஹேர்கட்' பண்ணனும்!"

— பாஸு





• சுந்தர்ஜி



வெடிக்கிறது பீரங்கி!

“சீக்கியத் தீவிரவாதிகள், விடுதலைப்புலிகளின் ஹிட் லிஸ்டில் என் பெயர் இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று தீவிரவாத அமைப்புகளின் ஹிட் லிஸ்டில் என் பெயர் ஏற்கெனவே இருந்தாலும் மரணம் என்னவோ, ஒரு முறைதானே வரப்போகிறது?”

முன்னாள் ராணுவத் தலைமை ஜெனரல் சுந்தர்ஜி, சென்றவாரம் ஸ்டார் பினஸ்ஸில் அளித்த பேட்டியில் இவ்வாறு அதிரடியாகப் பேசினார்.

அந்த பேட்டியில் ‘அதிரடி’களுக்குப் பஞ்சமே இல்லை! நாட்டையே உலுக்கிய போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் குறித்து அன்று சுந்தர்ஜி பேசிய விஷயங்கள் யாரையும் மூர்ச்சை கொள்ளச் செய்து விடும்!

போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் இடைத் தரகர்கள் யாரும் கிடையவே கிடையாது என்று நாடாளுமன்றத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி அடித்துச் சொன்னார்.

ஆனால் இத்தாலியரான ஒட்டாவியோ குவாட்ரோச்சி இடைத்தரகராக இருந்து, கமிஷன் பெற்றிருக்கிறார் என்கிற வதந்தி பலமாக அடிபட்டது. ராஜீவ் தரப்பில் இது கடுமையாக மறுக்கப்பட்டதும் காரசாரமான விவாதங்கள் நடந்ததும் நாடறிந்தது.

ஆனால் இடைத்தரகர் உண்டு அல்லது இல்லை என்று அன்றைய இந்த விவகாரத்தை நெருக்கமாக நின்று கவனித்தவர்கள் யாரும் உறுதியாகச் சொல்லவில்லை.

இப்போது சொல்லியிருக்கிறார் சுந்தர்ஜி!

“குவாட்ரோச்சி, போஃபர்ஸ் விவகாரத்தில் இடைத்தரகராக இருந்திருக்கிறார் என்பது உண்மை! நான், ராஜீவ் ஆட்சியில் ஊழலோ, மூடி மறைத்தலோ நிச்சயமாக இருக்காது என்று நம்பினேன். குறிப்பாக இந்த போஃபர்ஸ் விவகாரத்தில். ஆனால், ஆதாரங்கள் ஒவ்வொன்றாகக் கிடைக்கத் தொடங்கி விட்டன! எதற்காக இந்த குவாட்ரோச்சிக்குப் பணம் கொடுக்கப்பட்டது? இந்தக் கேள்வி என்னைக் குடையத் தொடங்கி விட்டது!

“நகமும் சதையும் போல இருந்த அப்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண்சிங்குக்கும் ராஜீவுக்கும் எதனால் கருத்து வேற்றுமை ஏற்பட்டது? இந்த விவகாரத்தினால்தான்!

“அடுத்தடுத்த வீட்டுக்காரர்களான இருவரும் முகம் கொடுத்துப் பேசிக் கொள்ளக்கூட முடியாதபடி விரிசல் உண்டாகிவிட்டது! அருண் சிங்கை யாரோ பலமாக மிரட்டியிருக்கிறார்கள். தம் குழந்தைகளுக்கு ஆபத்து வரும் என்று அஞ்சி, அவர் சுத்தமாக விலகிவிட்டார்! பதவியை ராஜினாமா செய்துவிட்ட பிறகு இது பற்றி அறவே பேசுவதையும் தவிர்த்துவிட்டு, ஒதுங்கியே போனார்!

“போஃபர்ஸ் பற்றி ராஜீவ் ஒரு குறிப்பு எழுதியிருந்தார்.

‘தேச நலனை விடத் தம் சொந்த கௌரவத்தைப் பெரிதாக நினைத்தார், அருண்சிங். அதனால்தான் போஃபர்ஸ் விஷயத்தில், கோப்பில் அரசுக் கருத்துக்கு மாற்றாக எழுதினார்!’என்பது அந்தக் குறிப்பு!

“ஜூன் 15, 1987ல் எழுதப்பட்டதாக உள்ளது இந்தக் குறிப்பு. என் கருத்து - இது **அன்று** எழுதப்பட்டதே அல்ல! அந்தத் தேதிக்கு நீண்ட நாட்களுக்குப் பின் எழுதப்பட்டது. போஃபர்ஸ் விஷயத்தில் ராஜீவ் எதையோ பலமாக மறைத்திருக்கிறார். அவருக்கு அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் புரியவில்லை.

“நான் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற சமயம் என்னை ஏதாவது ஒரு நாட்டுக்குத் தூதுவராகவோ, மாநில கவர்னராகவோ நியமிக்க ராஜீவ் அரசு தயாராக இருந்தது. எப்படியும் இந்த போஃபர்ஸ் விவகாரம் ஒரு நாள் வெடிக்கும்; அப்போது என் வாயைக் கட்ட இது உபயோகமாயிருக்கும் என்று நினைத்தார்கள். நான் மறுத்துவிட்டேன்...”

தொகுப்பு: **சாருகேசி**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624;
சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

வெற்றியின் ரகசியம்

மபத்லால் சீருடைகள்





மபத்லால், எடுப்பான தோற்றம் தரும் அழகிய சீருடைகள், இதமானது. மென்மையானது. சுருக்கமற்றது. வண்ணம் மங்காதது. எல்லா பள்ளிகளுக்கும் ஏற்ற சீருடைகள் எங்களிடம் உண்டு. சரியான ரகங்களில்.

* இச்சலுகை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் 14 ஏப்ரல் '97 முதல் குறுகிய காலத்திற்கு மட்டுமே.

• பெங்கால் வாட்டர் ப்ரூஃப் லிமிடெட்டால் தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

மார்கட்டெர்ஸ் :

மபத்லால் எஸ் ஏ இன்டெக்ஸ் லிமிடெட்

105-D, மேட்டுப்பாளையம் ரோடு, ஜிஎன். மில்ஸ்

கோயமுத்தூர் 641 029 தமிழ்நாடு

போன் : 0422-843001, 843002 பேக்ஸ் : 91-422-843003

பேங்கர்ஸ் : தி பெடரல் பேங்க் லிட்

---

* 1997 ஆம் ஆண்டிற்காக பலதரப்பட்ட ரகங்களில் 117 வண்ணங்களில் தயாரிக்கப்படுகின்றன.
* பாலியெஸ்டர் காட்டன் பிளெண்டட் ஷர்ட்டிங்ஸ், பாலியெஸ்டர் ஷர்ட்டிங்ஸ், டிரவுசர்ஸ்.

35 மபத்லால் ஷோவீ ஷாப்புகள் மற்றும் 1800 அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் தமிழ்நாடு, கேரளா மற்றும் பாண்டிச்சேரியில் உள்ளன.

மபத்லால் சீருடைகள்

குடும்பத்தின் தேர்வு : இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தியாளர்களிடமிருந்து

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka